REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 24 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

1932 - 2021

வரு. 90 இல. 47 | Thursday 24, February, 2022 | 20 பக்கங்கள் | 30/-

நீங்கள் விரும்பும் 9 App
வேண்டியளவு data
398 ரூபா
செயற்படுத்திட பிரவேசியுங்கள்
SELFCARE APP
www.sltmobitel.lk
SLTMOBITEL

**பயங்கரவாத தடைச் சட்டம்**

## சிறந்த நடைமுறைகளுக்கு அமையத் திருத்தப்படுகிறது

**- வெளிவிவகார அமைச்சர்**



பயங்கரவாத தடைச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மிகவும் விரிவான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வெளியிடுவதற்கான ஆரம்ப படியாகுமென வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியை தளமாகக் கொண்டுள்ள இராஜதந்திர படையினருக்கு மத்தியில் உரையாற்றிய போதே, வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் 83 தூதுவர்கள் கலந்து கொண்டனர்.

பெப்ரவரி இறுதி வாரத்தில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் 06

**எரிபொருள் இருப்புக்களை**

## மறைத்து வைக்கும் நிலையங்கள் மீது நடவடிக்கை

எரிபொருளை மறைத்து வைத்து விற்பனை செய்யாத எரிபொருள் விற்பனை நிலையங்களைத் தேடுவதற்கு பல விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருளை சேமித்து வைத்து வாடிக்கையாளருக்கு வழங்காத எரிபொருள் விற்பனை நிலையங்கள் தொடர்பாக, 06

**Whats app குறூப்**

## பாவனையாளர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

INTER SCHOOL என்ற Whats app குறூப்புக்குள் இணைய வேண்டாமென Whats app பாவனையாளர்களிடம் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். INTER SCHOOL என்ற Whats app குறூப் உங்களுக்கு அழைப்பு விடுத்தாலும் எச்சரிக்கையாக இருக்குமாறும் மேல் மாகாண புலனாய்வுப்பிரிவின் பணிப்பாளர் எச்.சீ.ஏ. பஷ்பகுமார தெரிவித்துள்ளதுடன் இந்த Whats app குறூப் டெஷ் 06

**திறைசேரி செயலாளர் சகிதம்**

## மீண்டும் இந்தியா செல்லும் பசில்

**நிதியுதவி ஒப்பந்தத்தில் கைச்சாத்து**



நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மீண்டும் இந்தியாவுக்கு நாளை வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். அவருடன், திறைசேரி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலவும் இந்த விஜயத்தில் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 06

**எரிபொருள் நெருக்கடிக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு:**

# எண்ணெய் உற்பத்தி நாடுகளின் உதவியை பெற அரசாங்கம் முடிவு

**தூதுவர்களையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்த அரசு தீர்மானம்**

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

**எக்காரணம் கொண்டும் எரிபொருள் விலையை அதிகரிப்பதில்லையென அமைச்சரவையில் முடிவு**



எரிபொருள் விலையை அதிகரிப்பதில்லையென அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக, பெற்றோலிய வளத்துறை அமைச்சர் உதய கம்மன்பில பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

உக்ரைன் ரஷ்யாவுக்கிடையிலான மோதல் உக்கிரமடைந்துள்ள இச்சந்தர்ப்பத்தில், உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை அதிகரித்துள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், எவ்வாறெனினும் எரிபொருள் விலையை அதிகரிப்பதில்லையென்ற தீர்மானம் அமைச்சரவையில் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். எனினும் நாட்டில் தற்போது டீசல் பற்றாக்குறை நிலவுவதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

அதேவேளை, மசகு எண்ணெய் உற்பத்தியில் ஈடுபடும் சகல சர்வதேச நாடுகளின் தூதுவர்களையும் எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதி வரவழைத்து, நீண்டகால கடன் திட்டத்துக்கமைய 06

## வட மாகாணத்தில் கல்விச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு

**கல்வி அமைச்சருடன் அமைச்சர் டக்ளஸ் பேச்சு** 03





## நடைமுறையிலுள்ள சுகாதார கட்டுப்பாடுகளை நீக்க முடியாது

**-சுகாதார அமைச்சு** 03

**37,500 மெ.தொன் டீசலுக்கு 35.3 மில்.டொலர்**

## சிங்கப்பூர் எரிபொருள் கப்பலுக்கு டொலர்களை செலுத்தியது இலங்கை

**விரைவில் விநியோகிக்க நடவடிக்கை**

சிங்கப்பூர் நிறுவனத்தினால் எடுத்து வரப்பட்ட எரிபொருளுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளதாக மின்சாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. அமைச்சின் செயலாளர் வழங்கிய தகவலின்படி, 35.3 மில்லியன் டொலர்கள், குறித்த சிங்கப்பூர் கப்பலுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

சுமார் 37ஆயிரத்து 500 மெற்றிக்தொன் டீசல் இந்த கப்பலில் எடுத்து வரப்பட்டதுடன், கொழும்பு துறைமுகத்துக்கு வெளியே இக்கப்பல் நங்கூரமிட்டுள்ளது. 06

**க.பொ.த. உ/த பரீட்சை முடியும் வரை:**

## மின் துண்டிப்பு ஏற்படுவதை தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்

**அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சபையில் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை நிறைவடையும் வரை, மின் துண்டிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கு அரசாங்கம் முடிந்தளவு நடவடிக்கைகளை எடுக்குமென சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று (23) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 06

**கச்சதீவு ஒப்பந்தத்தால்**

## இரு நாட்டு மீனவர்களின் நட்புறவில் பாதிப்பு -ஜீவன் தொண்டமான்





கச்சதீவு உடன்படிக்கையின் பின்னரே இலங்கை – இந்திய மீனவர்களின் நட்பில் பாதிப்பு ஏற்பட்டதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். இராஜாங்க அமைச்சர் ஜீவன்தொண்டமான் உள்ளிட்ட குழுவினர், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்தித்த போதே அவரிடம் இவ்வாறு தெரிவித்ததாக 06


## கொட்டதெனியாவ 'அல்–கைதா' குழுவின் மேலுமொரு உறுப்பினர் கைது

கொட்டதெனி யாவ வத்தேமுல்லை பகுதியில் அல்கைதா என்ற பெயரில் மக்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த குழுவின் மற்றுமொரு உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மினுவாங்கொடை பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை கைதானார்.

வத்தேமுல்லை பகுதியைச் சேர்ந்த 19 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இக் குழுவின் மற்றுமொரு உறுப்பினர் நேற்றுமுன்தினம் 06



**கரும்புலிகள் தினத்தை நினைவுகூர முனைந்து கைதான அரசியல் கைதிகள் மூவர் உணவு தவிர்ப்பு போராட்டம்** 03



**பேரறிவாளனின் பரோல் காலம் ஒரு மாதத்துக்கு நீடிப்பு** 03



**ஊடகவியலாளர் சமுத்திதவின் உயிருக்கு ஆபத்துள்ளதா?**

**புலனாய்வு பிரிவிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது – சரத்வீரசேகர** 03

**விக்கல் வீராச்சாமி**



அண்ணே, மக்களுக்கு எதுவுமே செய்யாம ஊடகங்களில அரசியல் நடத்திவாற தமிழ் அரசியல்வாதிகள பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க....

என்னத்த சொல்ல, அரசாங்கம் எத செய்தாலும் அத விமர்சிக்கிறத தவிர இவங்க என்னத்த ஆக்கபூர்வமான செய்யுறாங்க சொல்லுங்க...

## மலையக தமிழ் மக்களது பிரச்சினைகளும் மோடியிடம்

**த.மு.கூ. தலைவர் மனோ தெரிவிப்பு**



மலையக தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகள் அடங்கிய ஆவணத்தை இறுதி செய்து பிரதமர் மோடிக்கு அனுப்ப தீர்மானித்துள்ளதாக, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இந்த ஆவணம் முதலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டு, 06

**மிகை வரி சட்டமூலத்துக்கெதிராக**

## ஐக்கிய மக்கள் சக்தி உயர்நீதிமன்றில் மனு தாக்கல்

மிகை வரி சட்டமூலத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மிகை வரி அறவீட்டு சட்டமூலத்தை அவைத் தலைவர் தினேஷ் குணவர்த்தன (22) பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். 2,000 மில்லியன் ரூபாவுக்குமதிகமாக 06

## நாட்டில் ஆயுதக் கலாசாரம் உருவாக ஜே.வி.பியே காரணம்

**புலிகளுக்கு கற்றுக்கொடுத்ததும் அவர்களே**



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ஆயுத கலாசாரத்தை கற்றுக் கொடுத்தவர்கள் ஜே.வி.பி.யினரே, என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித்த சேனாரட்ண குற்றம் சுமத்தினார்.

இரண்டு பிரதான கட்சிகளும் நாட்டுக்கு எதனையும் செய்யவில்லையென 06

**இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி**

## இலங்கை அரசை கேள்வி கேட்கும் உரிமை இந்தியாவுக்கு உண்டு

**- பா.உ விக்கினேஸ்வரன்**

**(சாவகச்சேரி விஷேட நிருபர்)**



இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தை கேள்வி கேட்கும் தார்மீக, சட்டரீதியான உரிமைகள் இந்தியாவுக்கு இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினரும், வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான விக்கினேஸ்வரன் 06

10 years of people friendly banking
THE ASIAN BANKER | ஏசியன் பாங்கர்
அமானா வங்கி
உலகின் சிறந்த 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டுள்ளது
உலகின் தலைசிறந்த 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டு சர்வதேசத்தின் அதிஉன்னத கௌரவிப்பைப் பெற்றுள்ளது
உலகின் சிறந்த மற்றும் வளர்ந்து வரும் இஸ்லாமிய வங்கி
IFFSA Awards
தெற்காசியாவின் சிறந்த இஸ்லாமிய வங்கி
இலங்கையில் வேகமாக வளரும் நுகர்வோர் வங்கி
அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk
இது உங்கள் வங்கி
Amãna Bank
அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: BB+ (lka) ஸ்திரமான நிலை





கொழும்பு தெமட்டக்கொடை ஆராமய வீதியில் அமைந்துள்ளது ஸ்ரீ செந்தில் குமரன் கோயில் அறநெறி பாடசாலையில் நடைபெற்ற மாணவர்களில் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட தெமட்டகொடை விபுலானந்த தமிழ் மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியர் குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதையும் செந்தில் குமரன் அறநெறி பாடசாலை பொறுப்பாசிரியர் பா.கணகலிங்கம், அருகில் நிற்பதையும்.கலை நிகழ்வுகளையும், ஆசிரியர்களையும்,மாணவர்களையும் படங்களில் காணலாம்.





இலங்கை அகதிகளுக்காக அண்மையில் சென்னையில் உள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகராலயத்தில் சிறப்பு தூதரக நடமாடும் சேவை நடைபெற்றது. இந்த முகாமில் 83 பிறப்புச் சான்றிதழ்கள், 64 குடியுரிமைச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் ராமநாதபுரம் மற்றும் புதுப்பட்டி, கோபால்பட்டி மற்றும் அடியனூத்து மண்டபத்தில் உள்ள இலங்கையர்களிடமிருந்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.





இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அரூஸியத்துல் காதிரிய்யா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய அஷ்செய்ஹ் கலாநிதி அல்லாமா அஹமத் நாஸிர் ஆலிம் பின் அஷ்செய்ஹ் சுஹைப் ஆலிம் அரூஸியத்துள் காதிரி ஜலாலி ஜமாலி 21ஆம் திகதி பேருவளை சீனன் கோட்டைக்கு ஜாமியத்துல் பாஸிய்யத்துஷ் ஷாதுலிய்யா கலாபீடத்துக்கு வருகை தந்தார். அன்னாருக்கு மத்ரஸாவில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. சீனன் கோட்டைபள்ளிசங்கத் தலைவரும் பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீட உப தலைவருமான ஏ.எச்.எம். முக்தார் , இணைச் செயலாளர் எம்.எம்.எம். ஷிஹாப் ஹாஜியார், பள்ளிச்சங்க உறுப்பினர் அஷ்செய்ஹ் இஹ்ஸானுதீன் அபுல்ஹசன் (நளீமி), சீனன் கோட்டை ஜாமிஅதுல் பாஸியத்துஷ் ஷாதுலிய்யா கலாபீட அதிபர் மௌலவி முகம்மத் ராசிக் (முஅய்யதி), உட்பட மாண வர்கள், இஹ்வான்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

படங்கள் பேருவளை விசேட நிருபர்

# மர்ஹூம் சனூஸ் முஹம்மத் பெரோஸிற்கு துஆப் பிரார்த்தனை நிகழ்வு





**அஷ்ரப் ஏ சமத்**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவை முன்னாள் கட்டுப்பாட்டாளரும் முஸ்லிம் சேவையின் முன்னாள் பொறுப்பாளரும் சிரேஷ்ட ஒலிபரப்பாளருமான மர்ஹூம் சனூஸ் முஹம்மத் பெரோஸ் அவர்களுக்கான துஆப் பிரார்த்தனையும் நினைவு நிகழ்வும் ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அண்மையில் ஜாவத்தை ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெற்றது.

ஒன்றியத்தின் தலைவர் சிரேஷ்ட ஒலிபரப்பாளரும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளருமான யூ.எல்.யாக்கூப் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், இ.ஒ.கூ. தமிழ் சேவையின் முன்னாள் கட்டுப்பாட்டாளர் ஆர். யோகராஜன், சிரேஷ்ட ஒலிபரப்பாளரும் புத்த சாசன கலாசார அலுவல்கள் அமைச்சின் இணைப்புச் செயலாளருமான ஜெயரஞ்சன் யோகராஜன், கலந்து சிறப்பித்தனர். மர்ஹூம் பெரோஸ் அவர்களின் புதல்வர் பஸ்ஹான் குடும்பத்தின் சார்பாக நன்றியுரை வழங்கினார்.

இந்நிகழ்வில் அரச மற்றும் வானொலி ,தொலைக்காட்சி ஒலி,ஒளிபரப்பாளர்கள் மர்ஹூம் பெரோஸ் அவர்களின்குடும்பத்தினர் மற்றும் அவரது நெருங்கிய நண்பர்களும் ஊடகவியலாளர்களும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வின் ஆரம்பத்தில் யாஸீன் சூறா ஓதி துஆ பிரார்த்தனையை மௌலவி அப்ழல் நிகழ்த்தினார்.

## அரச நாடக விழா 'வேட்டைக்காரன்' இன்று அரங்கேறுகிது

கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் அரச நாடக விழா தொடரில் நேற்றுமுதல் முழு நீள நாடகங்கள் அரங்கேற்றப் படுகின்றன.

மருதானை, எல்பின்ஸ்டன் அரங்கில் இன்று (24) 'வேட்டைக் காரன்' என்ற நாடகம் மாலை 06.30 க்கு அரங்கேறுகிறது.

பிரபல இயக்குநர் எஸ் ஜீவராஜாவின் நெறியாள்கையில் இந் நாடகம் இன்று அரங்கேறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈழத்துச் சிதம்பரம் ஆதீன கர்த்தா முருகேசு சுந்தரலிங்கம் காலமானார்



காரைநகர், திண்ணபுர ஈழத்துச் சிதம்பரம் ஆதீன கர்த்தா முருகேசு சுந்தரலிங்கம் காலமானார். 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி பிறந்த அன்னார் நேற்று 23 ஆம் திகதி காலமானார்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தை ஆகம விதிமுறைகள் தவறாது வழி நடத்தியும் திருமுறைகளை செவ்வனே ஓதியும், வழி நடத்திய பெருந்தகை, மட்டுமல்லாது அனைத்து திருவிழாக்களும் சிறப்புற அனைத்து வழிகளிலும் வழி காட்டி நின்றவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.



அநுராதபுரம் பகுதியில் விற்பனை நிலையங்களில் பதுக்கி வைத்திருந்த மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்த சீமெந்தினை நுகர்வோர் அதிகார சபையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கைப்பற்றியுள்ளனர். அவ்வாறு கைப்பற்றப்பட்ட சீமெந்தினை லொறிகளுக்கு ஏற்றுவதை படத்தில் காணலாம்.

படம்: அநுராதபுரம் தினகரன் நிருபர்

# இலங்கை இந்திய மீனவர்களின் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண வேண்டும்

**நுவரெலியா தினகரன் நிருபர்**

இலங்கை இந்திய மீனவர்களின் பேச்சுவார்த்தையை உடனடியாக மீண்டும் ஆரம்பித்து சுமுகமான தீர்வை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இராமேஸ்வரம் மீனவர் சங்க தலைவரும் இந்திய இலங்கை மீனவர் பேச்சுவார்த்தை குழு உறுப்பினருமான என்.தேவதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை இந்திய மீனவர்கள் பரம்பரை பரம்பரையாக மிகுந்த பாரம்பரியத்துடன் மீன்பிடித் துறையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

ஆனால் தற்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் இரு நாட்டு மீனவர்களுக்குமே சில பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதை நாங்கள் அறிந்திருக்கின்றோம்.எனவே இதற்கு ஒரு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்பதற்காக இரண்டு தரப்பினரும் அமைதியாக அமர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டியது கட்டாயமாகும்.



இதன்போது சர்ச்சையாக இருக்கின்ற பகுதிகளில் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி இரண்டு தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலும் இரண்டு தரப்பினரும் சுமுகமாக தங்களுடைய தொழிலில் ஈடுபடுகின்ற வகையிலும் தீர்வை எட்ட வேண்டும்.

இந்திய அரசும் சரி இலங்கை அரசும் சரி இந்த மீனவர்களின் பிரச்சினையை ஒரு முக்கிய பிரச்சினையாக அதாவது தலையாய பிரச்சினையாக கருதி செயற்பட வேண்டும்.இரண்டு நாடுகளுக்கும் வெளிநாட்டு செலவாணியை பெற்றுக் கொடுப்பதில் இரு தரப்பு மீனவர்களும் முக்கிய பங்காற்றுகின்றார்கள்.

இலங்கை, இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தை மூன்று கட்டங்களாக நடைபெற்று தற்பொழுது அது தடைப்பட்டுள்ளது.முதலாவதாக இலங்கையிலும் பின்பு இந்தியாவிலும் என மாறி மாறி நடைபெற்றது. எனவே அந்த பேச்சுவார்த்தையை உடனடியாக மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே இந்த பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதன் மூலமாக இரண்டு தரப்பினரும் மனம் திறந்து பேச முடியும்.அப்படி பேசுகின்ற பொழுது இலங்கை மீனவர்கள் தாக்கப்படுவதும் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதும் தடுத்து நிறுத்தப்படும்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN

2022 பெப்ரவரி 24 வியாழக்கிழமை

தொழுகை நேரம்
25முதல் 28 வரை
சுபஹ் - 05.09
லுஹர் - 12.25
அஸர் - 03.45
மஃரிப் - 06.23
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் மாசி 12
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: திதித்துவயம்



# மக்களின் எதிர்பார்ப்புகளை அரச பொறிமுறை மூலம் நிறைவேற்ற வேண்டும்

## மத்திய அரசாங்கமும் மாகாண சபையும் ஒரே அரச கொள்கையில் செயற்பட வேண்டும்

ஜனாதிபதி தெரிவிப்பு





பொதுச் சேவை மிகப்பெரியது. ஓர் அரச ஊழியர், மக்களின் ஒவ்வொரு தேவையிலும் தலையிடுகிறார். எனவே, அனைத்து அரச நிறுவனங்களினதும் பொதுச் சேவைகள் உரிய முறையில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதே தனது விருப்பமாகுமென, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பெரும்பாலான அரச ஊழியர்கள் வேலை செய்ய விரும்புகிறார்கள். கண்காணிப்பு, ஆலோசனை மற்றும் ஊக்குவிப்பு மூலம் அவர்களின் சேவைகளை நாடு முழுமையாகப் பெறுவதுதான் தேவையாகவுள்ளது. ஆளுநர்கள், அமைச்சுக்கள், மாகாண மற்றும் மாவட்ட செயலாளர்கள் உட்பட அனைத்து உயர் அதிகாரிகளும் தனிப்பட்ட முறையில் தலையிட்டு தலைமைத்துவத்தை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக, நேற்று (23) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற அரச அதிகாரிகளுடனான விசேட சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசாங்க நிறுவனங்களுக்கு தனிப்பட்ட முறையில் விஜயம் செய்து மேற்பார்வை செய்வதாகத் தெரிவித்த ஜனாதிபதி, ஆளுநர்கள் உட்பட அரச அதிகாரிகள் தமது நிறுவனங்களுக்குச் சென்று அவர்களின் பணிகளை மேற்பார்வையிட்டு அனைத்து ஊழியர்களையும் ஊக்குவிப்பார்கள் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்தார். மக்களை வாழ வைக்க நாங்கள் இங்கு வந்துள்ளோம். அதற்கான சூழலைத் தயார்ப்படுத்த வேண்டும். அதிகாரிகளின் கடமை, பொறுப்பு, மனிதாபிமானம் என்பனவும் மிகவும் முக்கியமானவை ஆகும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபையின் கீழ் உள்ள நிறுவனங்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் ஒரே பொதுக் கொள்கையில் இருக்க வேண்டும் என ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

பசுமை விவசாயம் என்பது அரசாங்கத்தின் முக்கிய திட்டமாகும். கிராமப்புற மக்களில் 75 சதவீதத்துக்கும் அதிகமானோர் மற்றும் 90 சதவீதம் விவசாயம் அல்லது அதைச் சார்ந்த வாழ்வாதாரங்களில் ஈடுபட்டுள்ளனர். எதிர்காலச் சந்ததியினரின் முன்னேற்றத்துக்காக இயற்கை விவசாயம் தொடர்பில் அவர்கள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். அவ்வாறு செய்ய ஊக்குவிக்க வேண்டும் மற்றும் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். தரமான சேதனப் பசளைகளை உரிய நேரத்தில் விநியோகிப்பதன் மூலம் வெற்றிகரமான பெறுபேறுகளை அடைய முடியும் என ஜனாதிபதி இங்கு தெரிவித்தார்.

மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலு ஆதாரங்களை அதிகரிப்பதன் மூலம் தேசிய மின்சாரத் தேவைக்குப் பங்களிக்க முடியும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அரசாங்கத்தின் குறுகிய மற்றும் நீண்டகால

06

# ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை தெரிந்தால் கூறுங்கள்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக நௌபர் மௌலவியையே கருதுவதாகவும் இவருக்கு மேலதிகமாக பிரதான சூத்திரதாரி தொடர்பில் எவருக்கேனும் தகவல் தெரியுமாக இருந்தால், அதுபற்றி தெரிவிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேக்கர நேற்று சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) புதன்கிழமை, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு பிரேரணையில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக அரசாங்கமும், பொலிஸாரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும்,

06



இந்திய தூதரக சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி றிவான்ட் விக்ரம் சிங் (22), செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலாநிதி றிவான்ட் விக்ரம் சிங் கலந்துரையாடினார்.

படம்: யாழ். விஷேட நிருபர்

# கரும்புலிகளை நினைவுகூர முயன்ற அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டம்



**யாழ்.விஷேட நிருபர்**

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மூவர் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அரசியல் கைதிகள் நேற்று அதிகாலை முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக கடிதம் மூலம் சிறைச்சாலை பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளனர்.

இரத்தினசிங்கம் கமலாகரன், வைத்தியலிங்கம் நிர்மலன் மற்றும் பத்மநாதன் ஐங்கரன் ஆகியோரே இவ்வாறு உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கரும்புலிகள் தினத்தை நினைவுகூர முயன்றமை மற்றும் தீய செயல்களைச் ஏற்படுத்தும் பொருட்டு

06

# ஐ.நா. அமர்வு திங்கள் ஆரம்பம்

## பீரிஸ் தலைமையிலான குழு நாளை ஜெனீவா பயணம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொள்ள விசேட பிரதிநிதிகள் குழு, நாளை வெள்ளிக்கிழமை ஜெனீவாவுக்கு செல்கிறது. வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவே இவ்வாறு நாளை பயணிக்கவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகி, ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்சல் பச்லெட் எதிர்வரும் வியாழக்கிழமை இலங்கை தொடர்பான அறிக்கையை பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்த அறிக்கை ஏற்கனவே, இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் எதிர்வரும் வியாழக்கிழமை அதற்கு பதிலளித்து உரையாற்றவுள்ளார்.

# அரசியல் தலையீடுகளின்றி விசாரணைகள் சுயாதீனமாக இடம்பெறுகின்றது

## - நீதி அமைச்சர்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணைகள், எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி சுயாதீனமாக நடைபெற்று வருவதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.


பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், தாக்குதல் நடந்த காலகட்டத்தில் ஆட்சியில் இருந்தவர்கள் தற்போது எதிர்க்கட்சியில் இருப்பதாக குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்கூட்டியே கிடைத்த புலனாய்வுத் தகவல்களை கவனத்தில் எடுத்திருந்தால், இந்தத் தாக்குதலை தடுத்திருக்கலாமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது இது தொடர்பாக எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இதேநேரம் தாக்குதல் தொடர்பாக ஒருவர் மீது வழக்கு தாக்கல் செய்வது, விடுதலை செய்வது உள்ளிட்டவை தொடர்பாக சட்ட மாஅதிபரே தீர்மானிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# வட மாகாணத்தில் கல்விச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு



## கல்வி அமைச்சருடன் அமைச்சர் டக்ளஸ் பேச்சு

வடமாகாணத்தில் கல்விச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்ளும் வகையிலான கலந்துரையாடலொன்று, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவுக்கிடையில் நேற்று நடைபெற்றது. கல்வி அமைச்சில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது, வடமாகாணத்தின் கல்வி தரத்தை மேலும் அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக

06



கொழும்பு,மட்டக்குளி சேர் ராசிக் பரீத் பாடசாலையைச் சேர்ந்த மாணவி ஸீனத் ஸலீம் எழுதிய "உங்களில் பலருக்குத் தெரியாத விலங்குகளும் பறவைகளும்" என்னும் நூலின் முதல் பிரதியை, இலக்கியப் புரவலர் ஹாசிம் உமருக்கு மாணவி ஸீனத் ஸலீம் வழங்கினார். படத்தில் மேமன்கவியும் காணப்படுகிறார். புரவலரின் இல்லத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

# நடைமுறையிலுள்ள சுகாதார கட்டுப்பாடுகளை நீக்க முடியாது:

## சுகாதார அமைச்சு

ஒமிக்ரோன் நிலைமையைக் கருத்திற்கொண்டு, நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள கொரோனா கட்டுப்பாடுகளை விரைவில் நீக்கவோ அல்லது தளர்த்தவோ முடியாதென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்கு தெரிவித்துள்ள சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத், தற்போதைய கொரோனா நிலைமை, நடைமுறையிலுள்ள கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு வழிவகுக்கவில்லையென குறிப்பிட்டார்.

பல மேற்கத்திய நாடுகள் ஏற்கனவே கொரோனா கட்டுப்பாடுகளை நீக்கியுள்ள போதிலும் கட்டுப்பாடுகளை நீக்கிய பின்னர், அந்த நாடுகளில் கொரோனா பாதிப்புகள் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் கொரோனா நிலைமை ஆபத்தானதாக இல்லை. இருப்பினும் அதற்காக கட்டுப்பாடுகளை தளர்த்தலாமென்று அர்த்தம் இல்லையென்றும் அவர் தெரிவித்தார். எனவே, அதை மறுபரிசீலனை செய்து, அதற்கேற்ப நடவடிக்கைகளை எடுக்க சிறிது காலம் தேவைப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

# பேறிவாளனின் பரோல் காலம் ஒரு மாதத்துக்கு நீடிப்பு



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளனுக்கு வழங்கப்பட்டுள்ள பரோல் காலம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, பரோலிலுள்ள பேரறிவாளனின் பரோல் காலம் எதிர்வரும் (28) உடன் நிறைவடைகிறது.


இந்நிலையில், எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் மேலும் ஒரு மாதத்துக்கு அவரின் பிணையை நீடித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பேரறிவாளனின் உடல் நிலையை கருத்திற்கொண்டு பரோல் வழங்குமாறு, அவரின் தாயார் அற்புதம்மாள் கோரிக்கை விடுத்ததற்கமைய, கடந்த வருடம் மே மாதம் 28 ஆம் திகதி 30 நாட்களுக்கு பரோல் வழங்கப்பட்டது.

பேரறிவாளன் வீட்டிலிருந்தே மருத்துவ சிகிச்சைகளை பெறுவதுடன், அடிக்கடி தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவரின் 30 நாட்கள் பரோல் நிறைவடைந்ததையடுத்து, கடந்த வருடம் ஜூன் மாதம் முதல் பரோல் காலத்தை நீடித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

# ஊடகவியலாளர் சமுத்திதவின் உயிருக்கு ஆபத்துள்ளதா?

## புலனாய்வு பிரிவிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது



ஊடகவியலாளர் சமுத்தித்த விக்கிரமவின் உயிருக்கு ஆபத்துள்ளதா என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, தேசிய புலனாய்வு பிரிவினரைக் கேட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேக்கர தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சித் தலைவரின் கேள்விக்கு பதிலளித்தே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பிலியந்தலை நீதவானின் உத்தரவின்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |


தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 12ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு

உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும் வரையில் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும். எனவே உழைப்போர் நிலையை ஒவ்வொரு நாளும் அரசினர் ஆய்ந்தறிந்து ஆவன செய்ய வேண்டும்.

## கொவிட் பொருளாதார சவால்களை வெற்றி கொள்ளும் நடவடிக்கைகள்

கொவிட் 19 பெருந்தொற்றின் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள பொருளாதார நெருக்கடியானது நாட்டின் எல்லாத் துறைகளிலும் தாக்கங்களையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக டொலர் தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி பல துறைகளிலும் தாக்கங்களைச் செலுத்தியுள்ளது. குறிப்பாக புதைபடிம எரிபொருளைச் சீராகவும் தொடராகவும் நாட்டுக்கு இறக்குமதி செய்வதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கும் டொலர் மிகவும் அவசியம். ஆனால் நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார சவாலினால்தான் டொலரைப் பெற்றுக் கொள்வதில் தாமதங்களும் நெருக்கடிகளும் ஏற்பட்டு இருக்கின்றன.

இதன் விளைவாக எரிபொருளை அடிப்படையாகக் கொண்டுள்ள நாட்டின் எல்லாத் துறைகளும் பாதிப்புகளுக்கும் தாக்கங்களுக்கும் முகம் கொடுத்துள்ளன. குறிப்பாக புதைபடிம எரிபொருளை அடிப்படையாகக் கொண்டுள்ள மின்னுற்பத்தி நிலையங்களினால் தொடராகவும் சீராகவும் மின்சாரத்தை தேசிய கட்டமைப்புக்கு வழங்க முடியாத துரதிர்ஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதன் விளைவாக கடந்த சில தினங்களுக்காக தினமும் சில மணித்தியாலயங்கள் மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இதன் காரணத்தினால் மின்சாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள உற்பத்தித் துறைகளும் சேவைகள் துறைகளும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. இது உள்நாட்டு மொத்த தேசிய உற்பத்தியிலும் தாக்கங்களைச் செலுத்தக் கூடிய நிலைமையை ஏற்படுத்தி இருக்கின்றது. இம்மின்வெட்டினால் பொதுமக்கள் மாத்திரமல்லாமல் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களும் பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்திருக்கின்றனர்.

அதேநேரம் புதைபடிம எரிபொருள் பற்றாக் குறை காரணமாக நாட்டிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலும் கடந்த இரண்டொரு தினங்களாக வாகனங்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது. இதேவேளை எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடியினால் தனியார் பயணிகள் பஸ் போக்குவரத்து சேவையைச் சீராகவும் ஒழுங்குமுறையாகவும் முன்னெடுப்பதிலும் நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் மாகாணங்களுக்கு இடையில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சுமார் 250 பஸ்வண்டிகள் சேவையில் ஈடுபடுவதைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் சரத் விஜிதகுமார குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்வாறு பலவிதமான தாக்கங்களும் நெருக்கடிகளும் எரிபொருள் பற்றாக்குறையினால் நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நெருக்கடிகளுக்கும் தாக்கங்களுக்கும் தீர்வு காண்பதிலும் மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களை முடிவுக்குக் கொண்டு வருவதிலும் அரசாங்கம் உச்சபட்ச கவனம் செலுத்தியுள்ளது. இதன் நிமித்தம் பல வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எரிபொருள் பற்றாக்குறையினால் மக்கள் முகம் கொடுத்துள்ள அசௌகரியங்கள் தொடர இடமளிக்கப்படலாகாது. அந்த அசௌகரியங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்காக பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை மின்சார சபைக்கும் தேவையான நிதியை விடுவிக்குமாறும் கடன்களுக்கான நம்பிக்கை பத்திர வசதியை செய்து கொடுக்குமாறும் மத்திய வங்கி ஆளுனர் அஜித் நிவாட் கப்ராலுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதற்கு ஏற்ப மத்திய வங்கி ஆளுனர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். இந்நிலையில் கொழும்பு துறைமுகத்தில் 37,500 மெற்றிக் தொன் டீசலுடன் தரித்து நின்ற கப்பலுக்கு 35.3 மில்லியன் அமெரிக்க டொலர் நேற்று முன்தினமிரவு செலுத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அக்கப்பலில் இருந்து எரிபொருளை இறக்கும் பணிகளும் ஆரம்பமாகியுள்ளன.

இதன் ஊடாக புதைபடிம எரிபொருள் பற்றாக் குறை நீங்குவதோடு அதன் விளைவாக ஏற்பட்டுள்ள அசௌகரியங்களும் நெருக்கடிகளும் முடிவுக்கு வரும். கொவிட் 19 தொற்று தோற்றுவித்துள்ள பொருளாதார நெருக்கடி நீடித்துக் கொண்டிருக்கும் தற்போதைய சூழலில் எரிபொருளை மக்கள் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் வாகனம் சொந்தமாக இருக்கின்றது என்பதற்காக அதனை விரும்பியபடி பயன்படுத்தக் கூடிய கால சூழல் இதுவல்ல. அவ்வாறு பயன்படுத்தும் போது எரிபொருள் பயன்பாடு அதிகரிப்பதைத் தவிர்க்க முடியாது.

ஆகவே கொவிட் 19 தொற்று தோற்றுவித்துள்ள பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்கு எரிபொருளையும் பொறுப்போடு பயன்படுத்துவது அவசியம். அப்போதுதான் எரிபொருள் ஒரு நெருக்கடியாகவே அமையாது.

editor.tkn@lakehouse.lk

# மனித உரிமைகளை மேம்படுத்துவதில் அர்ப்பணிப்பு நிறைந்த செயற்பாடுகள்



## இலங்கையின் முன்னேற்ற நகர்வுகள் குறித்து புதுடில்லியில் உள்ள இராஜதந்திரிகளுக்கு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் விளக்கம்

வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கடந்த 18 ஆம் திகதி புதுடில்லியை தளமாகக் கொண்டுள்ள இராஜதந்திர முக்கியஸ்தர்கள் மத்தியில் உரையாற்றினார். இம்மாதம் இறுதி வாரத்தில் ஆரம்பமாகவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடருக்கு முன்பாக மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான முன்னேற்றம் குறித்த தகவல்களைப் பகிர்வதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

தற்போதைய அபிவிருத்திகளைப் பகிர்ந்து கொள்வதற்காக அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட விளக்கங்களின் தொடர்ச்சியாக, புதுடில்லியைத் தளமாகக் கொண்ட இலங்கைக்கான அங்கீகாரம் பெற்ற தூதரக முக்கியஸ்தர்களுக்கு விளக்கமளிக்கும் வாய்ப்பை வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ் பாராட்டினார். இம்மாநாட்டில் 83 தூதுவர்கள் கலந்து கொண்டனர்.

மனித உரிமைகள் பேரவையின் 2021 செப்ரெம்பர் அமர்வில், மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் மற்றும் மனித உரிமைகள் பேரவை உட்பட ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்ந்தும் செயற்படுவதற்கும் இலங்கையின் அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தியமையை அமைச்சர் நினைவு கூர்ந்தார். இந்நிலையில், ஒத்துழைப்பு மற்றும் உரையாடல் உணர்வுடன் கூடிய சர்வதேச சமூகத்துடனான ஆக்கபூர்வமான ஈடுபாட்டை அமைச்சர் குறிப்பிட்டார்.



இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், காணாமல் போனோர் அலுவலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் நிலைபேறான அபிவிருத்திச் சபை ஆகிய உள்நாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகள் காரணமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளான பொறுப்புக்கூறல், மறுசீரமைக்கப்பட்ட நீதி மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இலங்கை அரசாங்கம் கணிசமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

43 வருடங்களின் பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டம் சர்வதேச நியதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாகக் கொண்டுவரும் நோக்கத்துடன் திருத்தப்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார். பயங்கரவாதத் தடைச் சட்டம் பல மாதங்களாக நீண்ட விவாதங்களுக்குப் பின்னர் திருத்தப்பட்டு வருவதாக விளக்கமளித்த அமைச்சர், முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மிகவும் விரிவான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வெளியிடுவதற்கான ஆரம்பப் படியாகும் எனச் சுட்டிக் காட்டினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கணிசமான திருத்தங்களில் தடுப்புக் காவல் உத்தரவுப் பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளுதல், கட்டுப்பாட்டு ஆணைகள், உத்தரவுகளை வெளிப்படையாக அங்கீகரித்தல், நீண்ட காலமாக தடுப்புக் காவலில் வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக குற்றம் சாட்டப்பட்டவர்களின் வழக்குகளை விரைவாகத் தீர்த்து வைத்தல், கருத்துச் சுதந்திரத்திற்கு இடையூறு விளைவிக்கும் பிரிவுகளை ரத்துச் செய்தல் மற்றும் நீதிவான்கள், சட்ட வைத்திய அதிகாரிகளின் அணுகலுக்கான விதிகளை அறிமுகப்படுத்துதல், தடுப்புக் காவலில் உள்ள காலத்தில் துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதைகளைத் தடுத்தல், குடும்பத்துடன் தொடர்பு கொள்ளும் உரிமை, நீண்டகாலக் கைதிகளுக்கு பிணை வழங்குதல் மற்றும் வழக்குகளை நாளாந்தம் விசாரணை செய்தல் போன்ற அம்சங்கள் உள்ளடங்குவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

உச்ச நீதிமன்ற நீதியரசர் நவாஸ் தலைமையிலான விசாரணை ஆணைக்குழுவின் ஊடாக பொறுப்புக் கூறல் செயற்பாடுகள் தொடர்பிலும் வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டதுடன், முதலாவது இடைக்கால அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இரண்டாவது இடைக்கால அறிக்கையும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பான யோசனைகளை முன்வைப்பதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட 9 பேர் கொண்ட நிபுணர் குழு தொடர்பிலும் வெளிநாட்டு அமைச்சர் குறிப்பிட்டார். நிபுணர் குழு தமது பூர்வாங்க ஆலோசனைகளை நிறைவு செய்துள்ளதாகவும், அதற்கான முன்மொழிவுகள் விரைவில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். அதன் பின்னர், ஜனநாயக நடைமுறையின் அடிப்படையில் பரந்தளவிலான பொது ஆலோசனைகள் பின்பற்றப்படும் எனக் குறிப்பிட்டார்.

கேள்விகளுக்குப் பதிலளித்த வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், புதுடில்லியைத் தளமாகக் கொண்ட தூதுவர்களுடனான ஆக்கபூர்வமான ஈடுபாட்டைப் பாராட்டிய அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் ஏனைய பல்தரப்பு மன்றங்களில் தொடர்ந்து ஒத்துழைப்பதற்கு எதிர்பார்த்தார்.

**வெளிநாட்டு அமைச்சு**

# கழிவுப் பொருட்களில் இருந்து உருவாகும் கண்கவர் பொருட்கள்



## கொரோனா காரணமாக தொழிலை இழந்தவர்களுக்கு தியாவட்டவான், பாலைநகர் கிராமத்தின் குடும்பஸ்தர் காண்பிக்கும் புதிய பாதை

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில், தியாவட்டவான் பகுதியிலுள்ள பாலைநகர் கிராமத்தில் வசிக்கும் முஹம்மட் பரீட் ஜவ்பர் என்பவர் கழிவுப் பொருட்களை பயன்படுத்தி பல்வேறு கண்கவர் பொருட்களை உருவாக்கி வருகின்றார்.

"அரசாங்கத்தின் புத்தாகம அமைச்சின் திட்டத்தின் மூலம் எனக்கு பல்வேறு உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் என்னால் மேலும் பல பொருட்களை உருவாக்க முடிவதுடன் பிரதேசத்தில் உள்ள இளைஞர், யவதிகளுக்கும் இது தொடர்பான பயிற்சிகளை வழங்க முடியும்" என்று முஹம்மட் பரீட் ஜவ்பர் தெரிவிக்கின்றார்.

"இன்று நாட்டில் கொரோனா நிலைமை காரணமாக பலர் தங்களது தொழில்களை இழந்துள்ள நிலையில், அவர்கள் விரும்பினால் என்னோடு இணைந்து கழிவுப் பொருட்கள் மூலம் பல்வேறு பொருட்களை உருவாக்கவும், புதிய பொருட்களை கண்டுபிடிக்கும் பணியை மேற்கொள்ளவும் முடியும். கொரோனா நிலைமை காரணமாக எனக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினைகளை காரணமாக வேலைகள் இல்லாமல் போயுள்ளன. தற்போது நான் மேற்கொள்ளும் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவும் பட்சத்தில் என்னால் இன்னும் அதிகமாக சாதிக்க முடியும். கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்கு எனக்கு களம் அமைக்கப்படுமாக இருந்தால் இத்தொழிலை இன்னும் விருத்தி செய்ய முடியம்" என்று கூறுகின்றார் ஜவ்பர்.

"நாட்டில் சமாதானம் பிரதிபலிக்க வேண்டும் என்ற நோக்கில் ஆயிரம் ரூபா நாணயத்தாளில் எனது கைவண்ணத்தின் திறமையைக் கொண்டு அச்சிட்டார்கள். அதற்காக எனக்கு பாராட்டி ஜனாதிபதி செயலகம், நிதி அமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோரால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. எனது திறமைக்கு பல்வேறு திணைக்களங்கள் மூலம் சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி என்னால் உருவாக்கப்படும் பொருட்களின் வடிவமைப்புக்கு ஏற்றாப் போல் விலை நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்து வருகின்றேன்.

எனக்குத் தெரிந்த தொழிலை இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சியாக வழங்க வேண்டும் என்ற ஆர்வத்தில் பாடசாலை மட்டங்களுக்கு அறிவித்திருந்தேன். ஆனால் இதுவரை யாரும் அக்கறை கொள்ளவில்லை. இதில் ஆர்வம் உள்ளவர்கள் என்னோடு வந்து இணைந்தால் அவர்களுக்கு இந்தத் தொழிலை இலகுவில் கற்றுக் கொள்வதற்கான பயிற்சிகளை வழங்க முடியும். கழிவுப் பொருட்களை பயன்படுத்தி எனது திட்டமிடல் மூலம் பல்வேறு பொருட்களை புதிய கண்டுபிடிப்பின் மூலம் உருவாக்கி வருகின்றேன். எனது தொழிலை விருத்தி செய்ய அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்" என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

**எஸ்.எம்.எம்.முர்ஷித்...**
(கல்குடா தினகரன் நிருபர்)

# 'தொழுகையை மீளக் கண்டடைதல்' நூல் பிரதிகள் அக்கரைப்பற்று மக்களுக்கு இலவச விநியோகம்

நூலாசிரியர் அஹ்மத் பஸ்ஸாம் ஸாஈ அவர்களினால் அரபு மொழியில் எழுதப்பட்ட 'தொழுகையை மீளக் கண்டடைதல்' நூலின் தமிழ்மொழி பெயர்ப்புப் பிரதிகள் அக்கரைப்பற்றில் இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அக்கரைப்பற்று கல்வி வலய ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.அபுதாஹிர் இப்பணியினை முன்னெடுத்து வருகின்றார்.

'தொழுகையை மீளக் கண்டடைதல்' நூற்பிரதிகளை, அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஏ.ஜி.பஸ்மில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக்; கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் நூலாசிரியர் அஹ்மத் பஸ்ஸாம் ஸாஈ அவர்களினால் அரபு மொழியில் எழுதப்பட்டு, கலாநிதி பீ.எம்.எம்.இர்பான் நளீமியினால் தமிழ்மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட, 'தொழுகையை மீளக் கண்டடைதல்' நூற்பிரதிகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் உரையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் கூறுகையில், "தொழுகையை நிர்வகித்தல் எனும் கருத்துச் சுருக்கம் கொண்ட இந்நூலை ஒவ்வொருவரும் வாசித்து பயன்பெற வேண்டும். அமைதி, ஆழம், ஆன்மீகம், அறிவியல் ரீதியாக இந்நூலை படிக்கும் போது, அதனில் அடங்கியுள்ள இன்பத்தை அடைந்து கொள்ள முடியும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். உழைத்து, களைத்து கையிருப்பினை அடிக்கடி சரிபார்த்துக் கொள்ளும் மனிதன், இஸ்லாத்தின் இரண்டாவது கடமையான தொழுகையில் தான் கண்ட இலாபம், நட்டம் பற்றி சுய விசாரணை செய்து கொள்வதற்கும், தன்னை மனிதப் புனிதனாக மாற்றிக் கொள்வதற்கும் இந்நூல் வழி வகுக்கும் என்றால் அது மிகையாகாது. தொழுகையை தொழுகையாக தொழ வேண்டும், உணர்வு, ஆத்மீக ரீதியாகத் தொழ வேண்டும் போன்ற விடயங்களுடன் பல இன்னோரன்ன விடயங்களை எளிய மொழிநடையில் விளக்கும் இந்நூல் படிப்பவர்களை இரசிக்கவும், ருசிக்கவும் செய்கின்றது. இந்நூலை தமிழாக்கம் செய்து, தனது சொந்த செலவில் அச்சிட்டு இலவசமாக வழங்கும் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.அபுதாஹிரின் அர்ப்பணிப்புப் பணியை இறைவன் பொருந்திக் கொள்ள வேண்டும்" என்றார்.





இறைவனால் மனிதனுக்கு அருளப்பட்ட பெரும் பரிசு தொழுகையாகும். அதனை நிர்வகிப்பது தொடக்கம் வாழ்வையே தொழுகையாக மாற்றுவது வரைக்குமான விடயங்களை சிறப்பான உதாரணங்கள் மற்றும் சொல்லாட்சிகள் மூலம் இந்நூல் சிறப்பாக விளக்கியிருக்கின்றது என்றால் அது மிகையாகாது. சுமையான தொழுகையினை சுகமாக மாற்றிட, பொறுமையைக் கைக்கொள்ளும் போது, அதுவே நாகரிகத்தின் உறைவிடமாகவும் மாறுகின்றது என நூலாசிரியர் விளக்குவதும் செயலிழந்த இதயங்களை புத்துயிர்ப்படுத்தும் செயலி என அவர் தொழுகையினை வர்ணிப்பதும் வெகுவாக கவர்ந்துள்ளதாக வாசகர்கள் தெரிவிக்கின்றனர். பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர், ஊழியர்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு நூல் பிரதியைப் பெற்றுக் கொண்டனர்.

**முகம்மட் றிஸான்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# தமிழக உள்ளாட்சித் தேர்தலில் வெற்றிவாகை சூடியது தி.மு.க

**தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தலில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் வெற்றியை ஈட்டியுள்ளது. மாபெரும் கட்சியாகத் திகழ்ந்த அ.தி.மு.க படுதோல்வி அடைந்து, 'கழுதை தேய்ந்து கட்டெறும்பு' என ஆகியுள்ளது. ஒரு மாநகராட்சியைக் கூட அக்கட்சியால் கைப்பற்ற முடியவில்லை.**

மொத்தம் உள்ள 21 மாநகராட்சிகளையும் ஆளும் தி.மு.கவே கைப்பற்றியுள்ளது. நகராட்சி, பேரூராட்சிகளிலும் தி.மு.க அமோக வெற்றி பெற்றுள்ளது. தனித்துப் போட்டியிட்ட பா.ஜ.க தமிழகத்தில் தலையெடுக்க தொடங்கி உள்ள நிலையில், கமல்ஹாசன் கட்சி காணாமல் போயுள்ளது. 'தி.மு.க, அ.தி.மு.கவுக்கு மாற்று நானே' என்று சொன்ன சீமான் கட்சி, பேரூராட்சியில் வெறும் ஆறே இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

தமிழகத்தில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் அடங்கிய நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு கடந்த 19 ஆம் திகதி ஒரேகட்டமாக வாக்குப் பதிவு நடத்தப்பட்டது.

சட்டசபைத் தேர்தல் வெற்றிக்கு உதவிய அதே கூட்டணியை கூடவே வைத்து ஆளும் தி.மு.க களமிறங்கியது. அதேநேரத்தில், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க கூட்டணி சிதறியது. ஊரக உள்ளாட்சி தேர்தலில் பா.ம.க.,வையும், பா.ஜ.கவையும் கூட்டணியில் வைத்திருந்த அ.தி.மு.க தலைமை, இந்தத் தேர்தலில் கூட்டணிக்கு முக்கியத்துவம் தர மறுத்தது. அதனால், முதலில் பா.ம.கவும், தேர்தல் அறிவிப்புக்கு பின்னர் பா.ஜ.கவும் 'கழன்று' கொள்ள, த.மா.கா போன்ற சிறிய கட்சிகளின் ஆதரவில் அ.தி.மு.க களத்தில் இறங்கியது.

இக்கட்சி எடுத்த முடிவால், பா.ஜ.க, பா.ம.க, தே.மு.தி.க தனித்து போட்டியிடும் சூழல் உருவானது. அத்தோடு சேர்ந்து மக்கள் நீதி மய்யம், நாம் தமிழர், அ.ம.மு.க, கட்சிகளும் வழக்கம் போல் தனித்துப் போட்டியிட்டன. மொத்தமுள்ள 12 ஆயிரத்து 838 கவுன்சிலர் பதவிகளுக்கு, 74 ஆயிரத்து 416 பேர் மனு தாக்கல் செய்திருந்தனர். இறுதியாக, 57, 778 பேர் களத்தில் இருந்தனர். மாநகராட்சியில் நான்கு பேர், நகராட்சிகளில் 18 பேர், பேரூராட்சிகளில் 196 பேர் என 218 பேர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.



## காணாமல் போனது கமலின் மக்கள் நீதி மய்யம்!

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா காலங்களில் யானைப் பலத்துடன் இருந்த அ.தி.மு.க கடந்த சட்டசபை தேர்தலில் மண்ணைக் கவ்வியது. ஊரக உள்ளாட்சி தேர்தலிலும் பெரிய வெற்றி காணவில்லை. தற்போது நடைபெற்ற நகர்ப்புற தேர்தலில் படுதோல்வியை சந்தித்து கட்டெறும்பாகி விட்டது. ஒரு மாநகராட்சியை கூட அக்கட்சியால் கைப்பற்ற முடியவில்லை.

அதேநேரத்தில், முதல்வர் ஸ்டாலின் விடுத்த சவாலின்படி மொத்தமாக 21 மாநகராட்சிகளையும் தி.மு.க அள்ளியுள்ளது. அ.தி.மு.க கோட்டை என கூறப்பட்ட கொங்கு மண்டலத்திலும், தி.மு.க இம்முறை கொடியை நாட்டியுள்ளது.

இதுமட்டுமின்றி நகராட்சி, பேரூராட்சிகளிலும் தி.மு.க அமோக வெற்றியை பதிவு செய்துள்ளது. நேற்றுமுன்தினம் இரவு நிலைவரப்படி, 7,65 இற்கும் மேற்பட்ட வார்ட்டுகளை ஆளும் கட்சி கைப்பற்றியுள்ளதாக மாநில தேர்தல் கமிஷன் அறிவித்தது. தனித்து போட்டியிட்ட பா.ஜ.க இத்தேர்தல் வாயிலாக தமிழகத்தில் தலையெடுக்கத் தொடங்கி உள்ளது. நேற்றுமுன்தினம் இரவு வரையான முடிவுகளின்படி மாநகராட்சிகளில் 22 இடங்களிலும், நகராட்சிகளில் 56 இடங்களிலும், பேரூராட்சிகளில் 230 இடங்களிலும், பா.ஜ.க வெற்றி பெற்றிருந்தது. இதன் வாயிலாக தமிழகத்தில் தி.மு.க, அ.தி.மு.கவுக்கு மாற்று சக்தியாக பா.ஜ.க உருவெடுக்கத் தொடங்கியுள்ளது.

மாற்றத்தை ஏற்படுத்துவதாகக் கூறிய நடிகர் கமலின் மக்கள் நீதி மய்யம் ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை. அந்த கட்சியின் பெயர் கூட மாநில தேர்தல் கமிஷன் தேர்தல் முடிவுகள் பட்டியலில் இடம்பெறவில்லை.

சீமானின் 'நாம் தமிழர் கட்சிக்கு' மாநகராட்சி, நகராட்சிகளில் ஒரு வார்ட் கூட கிடைக்கவில்லை. பேரூராட்சிகளில் மட்டும் ஆறுதல் அளிக்கும் வகையில் ஆறு இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

அ.தி.மு.க., தலைமை அலுவலகம் வெறிச்சோடி காணப்பட்டது. அ.தி.மு.க எதிர்பார்த்த வெற்றியை பெறாததால் அக்கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் யாரும் சென்னை ராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலையில் அமைந்துள்ள, அ.தி.மு.க., தலைமை அலுவலகத்திற்கு வரவில்லை. இதன் காரணமாக, அலுவலக வளாகம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

தமிழகத்தில் உள்ள 138 நகராட்சிகளில் உள்ள 3843 வார்ட் உறுப்பினர்கள் பதவிகளில், தி.மு.க கூட்டணி மட்டுமே 2571 வார்ட்களில் வெற்றியைப் பதிவு செய்துள்ளது. தி.மு.க மட்டும் 2360 வார்டுகளில் வென்றுள்ள நிலையில், அ.தி.மு.கவால் வெறும் 638 வார்ட்களில் மட்டுமே வெல்ல முடிந்தது. அடுத்து காங்கிரஸ் 151 வார்ட்களிலும், பா.ஜ.க 56 வார்ட்களிலும் வென்றுள்ளன. அதைத் தொடர்ந்து இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் முறையே 41 மற்றும் 19 வார்ட்களை கைப்பற்றியுள்ளன. கடந்த 2011 மாநில எதிர்க்கட்சியாக இருந்த தே.மு.தி.கவால் 12 வார்ட்களில் மட்டுமே வெல்ல முடிந்தது. இதர கட்சியினரும் சுயேச்சைகளும் 565 நகராட்சி வார்ட் உறுப்பினர்கள் பதவிகளை கைபற்றி உள்ளனர்.



பேரூராட்சிகளைப் பொறுத்தவரை மொத்தம் 490 பேரூராட்சிகளில் மொத்தம் 7621 வார்ட் உறுப்பினர்கள் பதவிகள் உள்ளன. அதில் தி.மு.க கூட்டணி 4833 வார்ட்களில் வென்றுள்ளது. 4388 வார்ட் உறுப்பினர் பதவி இடங்களை தி.மு.க கைப்பற்றி உள்ள நிலையில், எதிர்க்கட்சியான அ.தி.மு.க 1206 வார்ட்களில் மட்டுமே வென்றுள்ளது. அடுத்து காங்கிரஸ் கட்சி 368 பேரூராட்சி வார்ட்களில் வென்று உள்ளது.

அ.தி.மு.க உடனான கூட்டணியில் இருந்து வெளியே வந்து, இந்தத் தேர்தலில் தனித்து களம் இறங்கிய பா.ஜ.க 230 பேரூராட்சி வார்ட்களில் வென்றுள்ளது. இவை தவிர தி.மு.க கூட்டணியில் களமிறங்கிய சி.பி.எம் 101 வார்ட்களிலும், சி.பி.ஐ 26 வார்ட்களிலும் வெற்றியைப் பதிவு செய்துள்ளன. இதற்கு அடுத்து தே.மு.தி.க 23 வார்ட்களில் மட்டுமே வென்றுள்ள நிலையில், மற்றவர்கள் 12 வார்'களில் வென்றுள்ளனர்.

கடந்த தேர்தல்களை விடவும் இந்த முறை கமல்ஹாசன் தனது மக்கள் நீதி மய்யம் கட்சிக்காக கடும் பிரசாரம் செய்தார். நிறைய செய்தியாளர்களை சந்தித்தார். மக்கள் நீதி மய்ய வேட்பாளர்கள் வெற்றி பெற்று ஓராண்டுக்குள் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால் ராஜினாமா செய்வது என வீடு வீடாக பத்திரத்தில் கையெழுத்திட்டு கொடுத்திருந்தனர்.

இத்தனை செய்த பிறகும் மக்கள் நீதி மய்யம் ஒரு இடத்தில் கூட வெல்லவில்லை. இக்கட்சி சுமார் 1300 இடங்களில் போட்டியிட்டு ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை. அது போல் சிவகங்கை நகராட்சியில் 1வது வார்ட் ம.நீ.ம வேட்பாளருக்கு 1 வாக்கு கூட கிடைக்கவில்லை. இந்த வேட்பாளரின் குடும்பத்தினர் கூட ஒரு வாக்கு கூட அளிக்கவில்லையா என்ற கேள்வி எழுகிறது.

அந்த வார்ட்டில் வேட்பாளருக்கு வாக்கு இருக்குமே! அவரும் அவருக்கே வாக்கு போட்டுக் கொள்ளவில்லையா என நெட்டிசன்கள கேலி செய்து வருகிறார்கள். இந்த கேள்வியை கமல்ஹாசன் கேட்பது போல் மீம்ஸ்கள் சமூகவலைதளங்களில் உலா வருகின்றன. கோவை தொழிலதிபர் டொக்டர் மகேந்திரன் கட்சியிலிருந்து விலகிய போதே மக்கள் செல்வாக்கு மிக்கவர்கள் ஒதுங்கி விட்டதாகவும் விலகி விட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன. இதனால் இக்கட்சிக்கு மக்கள் செல்வாக்கு இன்றி தோற்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

சினிமாவையும் அரசியலையையும் ஒரே பாதையில் இயக்கலாம் என கமல்ஹாசன் இனியும் சொல்லிக் கொண்டிருந்தால் கட்சி தானாக கரைந்து விடும். எம்.ஜி.ஆர் உள்ளிட்டோர் அரசியல் பணிக்காக நேரத்தை ஒதுக்கி சாதித்துக் காட்டினர். தினந்தோறும கட்சியினரை சந்தித்தார். மக்கள் நல பணிகளில் ஈடுபட்டார். ஆனால் கமல்ஹாசன் அப்படியில்லை, தேர்தல் நேரத்தில் மட்டுமே மக்களை சந்திப்பதாக ஒரு குற்றச்சாட்டு எழுகிறது. எனவே இந்தப் பிரச்சினைகளை எல்லாம் கமல்ஹாசன் சரி செய்தால் கட்சியாவது மிஞ்சும். இல்லாவிட்டால் நெட்டிசன்கள் கிண்டல் செய்வது போல் மக்கள நீதி மய்யம் காணாமலே' போய் விடும்.

இந்த விடயத்தில் ரஜினி மிகவும் தந்திரமானவர். தேர்தலில் நின்றால் படுதோல்வி நிட்சயம் என்பதை ரஜினி முன்கூட்டியே நன்றாக அறிந்து கொண்டார்.



## கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் அ.தி.மு.க

எனவேதான் சாக்குப்போக்கு சொல்லி அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்டார் ரஜினி. அவர் தப்பி விட்டார்.

ஆனால் கமல் நிலைமை புரியாமல் அகப்பட்டுக் கொண்டார் என்பதுதான் உண்மை!

இதேவேளை தொடர் தோல்விகளால் விஜயகாந்தின் தே.மு.தி.க.வில் இருந்து பலர் வெளியேறிய நிலையில் அந்த கட்சியின் கட்டமைப்பும் ஆட்டம் கண்டுள்ளது. இது நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலிலும் எதிரொலித்துள்ளது.



## அரசியல் தோல்வியை முன்கூட்டியே கணித்து ஒதுங்கிக் கொண்ட ரஜினிதான் தந்திரமான புத்திசாலி!

---

# அனைத்து இனங்களும் சமஉரிமையுடன் வாழும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்

## தேசிய காங்கிரஸின் 18 வது பேராளர் மாநாட்டில் கட்சித் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா

**தேசிய காங்கிரஸின் 18 ஆவது பேராளர் மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தலைமையில் அக்கரைப்பற்றில் உள்ள கட்சியின் தலைமைக் காரியாலயமான 'கிழக்கு வாசலில்' நடைபெற்றது.**

சுகாதார வழிமுறைகளைப் பேணி நடைபெற்ற இம்மாநாட்டில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பேராளர்கள் கலந்து கொண்டதுடன் நடப்பு வருடத்துக்கான உயர்பீட, அரசியல் பீட உறுப்பினர்களையும் கட்சித் தலைவர் அறிவித்ததுடன், மாநாட்டு தீர்மானங்களும் பேராளர்களினால் நிறைவேற்றப்பட்டன.

அங்கு உரையாற்றிய தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எ.எல்.எம் அதாஉல்லா தெரிவித்ததாவது:

"30 ஆண்டுகளாக தலைவிரித்தாடிய பங்கரவாதத்தை இல்லாதொழித்து நாட்டு மக்களுக்கு நிம்மதியை பெற்றுத் தந்த தலைவராக மஹிந்த ராஜபக்ஷ திகழ்கின்றார். முஸ்லிம் மக்கள் உட்பட ஏனையவர்களும் பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து மீட்கப்பட்டார்கள். வரலாற்றில் முஸ்லிம்கள் நன்றி கெட்டவர்கள் என்ற அவப்பெயர் வந்து விடக் கூடாது என்பதற்காக தேர்தல்களில் தேசிய காங்கிரஸ் தீர்க்கமான முடிவுகளை எடுத்தது.

இனவாதம் ஒழிக்கப்பட வேண்டும். அவரவர் தத்தமது மத விழுமியங்களை சுதந்திரமாகப் பின்பற்றி ஏனையவர்களையும் அரவணைத்து வாழக் கூடிய சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். முஸ்லிம் மக்கள் பல இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம்கள் பயங்கரவாதிகள் எனும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஒருபோதும் பயங்கரவாதத்தை ஆதரிக்காதவர்கள் முஸ்லிம்கள். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பதனை அரசாங்கம் இந்த நாட்டிற்க்கும் சர்வதேசத்திற்கும் வரலாற்றுக்கும் வெளிப்படுத்த வேண்டும் .

அன்று தொடக்கம் இன்றுவரையில் இனவாத செயற்பாடுகளில் தேசிய காங்கிரஸ் ஈடுபட்டதில்லை. அன்று பயங்கரவாதம் ஒழிக்கப்பத்தை போன்று நமது நாட்டில் இனவாதமும் ஒழிக்கப்பட வேண்டும்." இவ்வாறு அதாவுல்லா தெரிவித்தார்.

இம்மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★ நாட்டின் எல்லா இனங்களும் சமாதானமாகவும் சுபீட்சமாகவும் உரிமைகளோடும் வாழக் கூடியவாறான வகையில், பாலமுனை பிரகடனத்தில் கூறப்பட்டவாறான யாப் பொன்றுநமதுஉருவாக்கப்பட வேண்டும்.

★ 2019 ஏப்ரல் 21 இல் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பதனை அரசாங்கம் இந்த நாட்டிற்கு தெரியப்படுத்த வேண்டும்.

★இனங்களுக்கிடையில் குறைந்தபட்சம் விகிதாசார அடிப்படையிலாவது நிலங்கள் பகிரப்பட வேண்டிய சூழ்நிலையிலும், மாறாக வெளிநாட்டவர்களுக்கு நிலம் கையகப்படுத்தப்படுவதனை கண்டிக்கின்றோம்.

★ பொழிகின்ற மழைநீரையும் கடலோடு கலக்கின்ற ஆற்றுநீரையும் தேக்கி வைத்து பயன்படுத்துவதற்கான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

★ நெற்செய்கை, அது போன்ற தானிய வகைகளுக்கான உற்பத்தியை அதிகரிப்பதற்கு விவசாயிகளுடன் இணைந்து முறையான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். நமது பிரதான உணவுகளில் ஒன்றான பால், நமது நாட்டில் உற்பத்தி செய்யப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை நாடு உணர்ந்துள்ள சூழ்நிலையில் நாடு முழுவதும் 'பால் கிராமங்கள்' உருவாக்கப்பட வேண்டும்.







ராஜகிரிய குறூப் நிருபர்

---

# இரு நகரங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை பரிமாறி கொள்வதே யாழ் விஜயத்தின் நோக்கம்

## யாழ் சென்ற குழுவுக்கு தலைமை தாங்கிய கொழும்பு மேயர் ரோஸி கூறுகிறார்

**இரண்டு நகரங்களுக்கிடையில் சகோதரத்துவம், நல்லிணக்கம் மற்றும் நிறுவனம், தாபனம் ரீதியிலான அறிவை பரிமாற்றம் செய்து கொள்வதுடன் ஒருவருக்கொருவர் உதவி, ஒத்தாசைகளை செய்து கொள்வதற்கான அவசியமான பின்புலத்தை கட்டியெழுப்புவதும்தான் கொழும்பு மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாய் உள்ளூராட்சி மன்றங்களுக்கான நல்லெண்ண விஜயத்தின் நோக்கமாகும் என கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாண மாநகர மேயர் வீ.மணிவண்ணன் மற்றும் மானிப்பாய் நகராட்சி மன்ற தலைவரின் அழைப்பின் பேரில் கொழும்பு மேயர் தலைமையில் பல்வேறு கட்சிகளின் மாநகர சபை உறுப்பினர்கள் 80 பேர் யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாய் உள்ளூராட்சி மன்றங்களுக்கான நல்லெண்ண விஜயத்தை அண்மையில் மேற்கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தின் போது கொழும்பு மாநகராட்சியின் பொதுநூலகத்தினால் யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்கு நானூறு புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கும் குழுவினர் மேற்பார்வை விஜயம் மேற்கொண்டனர். இந்த பிரதேச சபைக்கு ஒரு தொகுதி N93 Mask முகக்கவசங்களை அன்பளிப்புச் செய்த கொழும்பு மேயர், சபைக்கு குறைபாடாகவுள்ள இரண்டு பவுசர்களைப் பின்னர் பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார். கொழும்பு மாநகர சபைக்கு வருகை தந்து நல்லெண்ண விஜயத்துக்கான அழைப்பினை விடுத்த யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாய் நகர சபை முதல்வர்களுக்கு நன்றி தெரிவித்துள்ள கொழும்பு மேயர், மானிப்பாய் மக்களுக்கு கொழும்பு மாநகர சபையினால் ஏதேனும் சேவையை வழங்குமாறு மானிப்பாய் நகர முதல்வர் வேண்டுகோள் விடுத்ததாகவும் கொழும்பு மேயர் தெரிவித்துள்ளார்.



"நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டது இந்த Sister City Programme ஆகும். அதாவது, நகர சபையினால் நகர சபைக்கு, நகர சபையினால் பிரதேச சபைக்கு சகோதரத்துவத்துடன் செயல்பட முடிந்த சுற்றாடலை கட்டியெழுப்புவதற்காகவே அவர்கள் எமக்கு அழைப்பு விடுத்தார்கள்.அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டுதான் நாம் நல்லெண்ண விஜயம் மேற்கொண்டோம். தெற்குடன் இல்லாதிருந்த சகோதரத்துவம், பிணைப்பு உள்ளிட்ட பலவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான சூழலை உருவாக்க நாம் செயல்படுவோம்" எனவும் கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க

# அனைத்துக் கட்சிகளும் இணைந்த பொது வேலைத்திட்டம் அவசியம்

## இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



விமர்சனங்களையும் அரசாங்கத்தின் மீதான குற்றச்சாட்டுகளையும் விடுத்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க, அனைத்து கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியமென இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கத்தின் மீது மட்டும் விரல் நீட்டாமல் இந்த நாட்டை ஆட்சி செய்த அனைத்து அரசாங்கங்களும் அதற்கு பொறுப்புக்கூற வேண்டுமென தெரிவித்த அவர், இந்த நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ஒன்றிணைந்த வேலைத்திட்டம் அவசியமென்றும் சபையில் தெரிவித்தார்.

இதற்காக கட்சி, இன, பிரதேச, வர்ண பேதங்களைக் கடந்து அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென அவர் சபையில் அழைப்பு விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தி எம் பி இரான் விக்கிரமரட்ண முன்வைத்த நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில், உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

நாட்டில் தற்போது எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, பொருளாதார நெருக்கடி நிலை ஆகியவற்றை மறுக்க முடியாது. இதற்கு எமது அரசாங்கம் மட்டும் காரணமல்ல. கடந்த அரசாங்கங்கள் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட பெருமளவிலான கடன்களும் இதற்கு அடிப்படைக் காரணமாகும்.

அதேபோன்று கடன்களை மீளச் செலுத்துவதற்கு மீண்டும் கடன் பெற்றுக் கொள்வது புதிதல்ல. இலங்கை மட்டுமன்றி பல்வேறு நாடுகளிலும் அதுவே நடைமுறையிலுள்ளன.

நஷ்டம் ஈட்டும் நிறுவனங்கள் முதலீடுகளுக்காக வழங்கப்படவேண்டும். மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் பொருத்தமில்லாத கொள்கைகளை கொண்டுள்ளன. எனினும் நாட்டுக்கு வருமானம் அவசியமாகும். அதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில், பல்வேறு கருத்துக்கள் சபையில் முன்வைக்கப்பட்டன. தற்போது அது தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் அந்த அறிக்கை மறைக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் அது தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

70 ஆயிரம் பக்கங்கள் அதில் காணப்படுகிறது. அதனை சுருக்கி 'சொப்ட் கொப்பி'யாக அதனை தயாரிக்க வேண்டியது அவசியமாகும். அதன் பிரதியை நாம் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு வழங்க முடியும். அதேபோன்று, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அதனை வழங்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

### எண்ணெய் உற்பத்தி...

எரிபொருளை பெற்றுக்கொள்ள பேச்சுவார்த்தையை நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், நாட்டின் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக ஆளுங்கட்சி எம்பி மொஹமட் முஸம்மில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் உதய கம்மன்பில இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் எந்தவித தடைகளுமின்றி செயற்பட வேண்டுமானால் மாதாந்தம் ஒரு இலட்சத்து 81 ஆயிரம் மெற்றிக்தொன் மசகு எண்ணெய் தேவைப்படுகிறது.

அந்த வகையில் வருடாந்தம் 2.16 மில்லியன் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் தேவைப்படுகிறது. ஒரு வருடத்துக்கு அண்ணளவாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் மசகு எண்ணெய் கொள்வனவுக்காக ஒதுக்கப்படுகின்றன. எனினும் தற்போதைய விலை நிர்ணயத்துக்கமைய மாதத்திற்கு 500 மில்லியன் டொலர்கள் எரிபொருள் கொள்வனவுக்காக செலவிடப்படுகிறது.

எரிபொருள் தட்டுப்பாடு,மருந்து தட்டுப்பாடு, ஏனைய அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு, மின்சார தட்டுப்பாடோவன்றி டொலர் தட்டுப்பாடும் வெளிநாட்டு கையிருப்பு இல்லாமையுமே அனைத்துப் பிரச்சினைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

எனினும் தற்போது நாட்டுக்கு வந்துள்ள மூன்று எரிபொருள் கப்பல்களில், இரண்டு கப்பல்களுக்கு நிதி செலுத்தி எரிபொருளை இறக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மூன்றாவது கப்பலுக்கான நிதி இதுவரை செலுத்தப்படவில்லை. நாட்டில் தற்போது டீசல் தட்டுப்பாடு நிலவுகின்றமை உண்மையே.எம்மிடமுள்ள டீசலை மட்டுப்படுத்தியே விநியோகித்து வருகிறோம்.

எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்படுமென அவ்வப்போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதால், எரிபொருள் பதுக்கல் இடம்பெற்றமையும் உண்மையே,

எனினும், இன்றுள்ள சூழ்நிலையில் ரஷ்யா உக்ரைன் மோதல் நிலைமைகள் காரணமாக இன்று நள்ளிரவுடன் உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை அதிகரிக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த டிசம்பர் தொடக்கம் நேற்று வரையில் 38 வீதத்தினால் எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. எனினும், எரிபொருள் விலையை நாம், அதிகரிக்கவில்லை. அதேபோன்று நேற்று கூடிய அமைச்சரவை கூட்டத்தில் நீண்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. எரிபொருள் விலையை அதிகரிப்பதில்லையென்ற தீர்மானமும் அங்கு எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிய நாடுகளில் இலங்கையில் மட்டுமே குறைந்த விலையில் எரிபொருள் வழங்கப்படுகின்றது.

அதேபோல், மார்ச் மாதம் (15) உலகில் மசகு எண்ணெய் உற்பத்தியில் ஈடுபடும் சகல நாடுகளினதும் தூதுவர்களை வரவழைத்து நீண்டகால கடன் திட்டத்துக்கமைய, தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### சிறந்த நடைமுறைகளுக்கு...

மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடருக்கு முன்னதாக, மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான முன்னேற்றம் குறித்த தவல்களைப் பகிர்வதே இந்த மாநாட்டின் நோக்கமாகுமென வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

43 வருடங்களின் பின்னர், சர்வதேச நியதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைய, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கொண்டுவரும் நோக்கில், இச்சட்டம் திருத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் பல மாதங்களாக நீண்ட விவாதங்களுக்குப் பின்னர் திருத்தப்பட்டு வருவதாக விளக்கமளித்த அமைச்சர், முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மிகவும் விரிவான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வெளியிடுவதற்கான ஆரம்பப் படியாகுமென சுட்டிக் காட்டினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கணிசமான திருத்தங்களில் தடுப்புக் காவல் உத்தரவுப் பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்தல், கட்டுப்பாட்டு ஆணைகள், உத்தரவுகளை வெளிப்படையாக அங்கீகரித்தல், நீண்ட காலமாக தடுப்புக் காவலில் வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக குற்றம் சாட்டப்பட்டவர்களின் வழக்குகளை விரைவாகத் தீர்த்து வைத்தல்,

கருத்துச் சுதந்திரத்திற்கு இடையூறு விளைவிக்கும் பிரிவுகளை இரத்துச் செய்தல், நீதவான்கள் மற்றும் சட்ட வைத்திய அதிகாரிகளின் அணுகலுக்கான விதிகளை அறிமுகப்படுத்துதல்,

தடுப்புக் காவலிலுள்ள காலத்தில் துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதைகளைத் தடுத்தல், குடும்பத்துடன் தொடர்பு கொள்ளும் உரிமை, நீண்டகாலக் கைதிகளுக்கு பிணை வழங்குதல், வழக்குகளை நாளாந்தம் விசாரணை செய்தல் போன்ற அம்சங்கள் உள்ளடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### இலங்கை அரசை கேள்வி கேட்கும்...

தெரிவித்துள்ளார்.

விழுது சமூக மேம்பாட்டு அமையத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரசியல்வாதிகளை அணுகும் நிகழ்வில் "13வது திருத்தச் சட்டத்தில் காணி,பொலிஸ் அதிகாரம் இருந்தும் இல்லாத நிலை "தொடர்பாக மக்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே, அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இந்தியாவுக்கு கடிதம் எழுதி அனுப்பி அவர்களுடன் உறவை ஏற்படுத்தக் காரணம்;

இந்தியஇலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தை இது தொடர்பாக கேள்வி கேட்கும் தார்மீக உரிமை, சட்டரீதியான உரிமை இந்தியாவிடம் தான் இருக்கிறது.

இந்தியா இது தொடர்பாக கோரிக்கை விடுத்தால் இலங்கை அரசாங்கம் அதை செவிடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நாம் இந்தியாவைக் கோரியுள்ளோம்.

சட்டத்திலிருக்கும் ஒன்றை நடைமுறைப்படுத்தாதுள்ள இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்குதல்கள் ஏற்பட்டால், அதனை செய்ய முன்வருவார்கள் என்பது எனது கருத்து. நாமாக இலங்கை அரசாங்கத்திடம் கேட்டு அதனைப் பெற இயலாது. நான் முதலமைச்சராக இருக்கும் போது, இது தொடர்பாக அரசாங்கத்திடம் கோரியிருந்தேன். இது தொடர்பில் நாம் யோசிக்கிறோம். கொள்கையின்படி மாகாணத்துக்கு காணி, பொலிஸ் அதிகாரம் கொடுக்க முடியாதென பதிலளித்தனர்.

கொள்கை அடிப்படையில் தர முடியாது என்றால் கொள்கை அடிப்படையில் சிந்தித்தே கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

இலங்கைஇந்திய ஒப்பந்தத்தின் போது கொள்கை பற்றி சிந்திக்காது கையொப்பமிட்டு, கொள்கை அடிப்படையில் முடியாதென்பது சரியானதல்ல.பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் கட்டாயம் தரப்பட வேண்டும். இது சம்பந்தமாக இந்தியாவின் தலையீட்டை நாங்கள் எதிர்பார்த்திருக்கின்றோம்.

எங்களின் இலக்கு ,கொள்கை,எதிர்பார்ப்பு ஒரு சமஷ்டி ரீதியிலான அதிகாரம் வடக்குகிழக்கிற்கு வழங்கப்பட வேண்டும் என்பதே.

13ஆவது திருத்தச்சட்டம் தற்போது சட்டத்தில் இருப்பதனை நடைமுறைப்படுத்தக் கோருவதே என்னும் அவர் மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

### மலையக தமிழ் மக்களது...

பின்னரே இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் அவர் கூறினார்.

மலையக மக்களின் அரசியல், கலாசார, பொருளாதார மற்றும் சமூகத்துறைகள் இலங்கை அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டு வரப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

காலம் காலமாக மலையக மக்கள் பாகுபாடு காட்டப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட சந்தர்ப்பங்களை மேற்கோளிட்ட அவர், இந்த நிலை மாறவேண்டும் என்றும் அதற்காக அரசாங்கம் உட்பட அனைத்து தரப்பினருடனும் இணைந்து செயற்படத் தயாரென்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கையர்களுக்கான கடப்பாடுகளின் தொகுப்பில் பெரும் பங்கு வகிக்கின்றனர். தாம்நம்புகின்ற இந்திய அரசாங்கத்திடம் இதை எடுத்துச் செல்வோம் என்றும் மனோ கணேசன் கூறினார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தும். அதன் பின்னர் தமிழகம் சென்று முதல்வர் மு.க. ஸ்டாலின் மற்றும் பிற அரசியல் கட்சிகளுடன் பேசவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துமாறு, கூட்டமைப்பு தலைமையிலான ஏழு தமிழ் அரசியல் கட்சிகள் கடந்த மாதம் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளன.

அத்தோடு புதிய அரசியலமைப்பு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வின் இலக்கை பாதிக்காதென்பதை உறுதி செய்வதற்காக, தமிழ்நாட்டின் நேரடி ஈடுபாட்டைக் கோரி கூட்டமைப்பு கடந்த வாரம் ஸ்டாலினுக்கு கடிதம் எழுதியிருந்தமை குறுப்பிடத்தக்கது.

### யாழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள...

03 ஆம் பக்கத் தொடர்

வெடிபொருள் தயாரிப்புக்கு உதவியமை போன்ற குற்றச்சாட்டில் இவர்கள் கைதாகினர். 2020, 07, 03 மற்றும் 06 ஆம் திகதிகளிலும், 2021, 05, 28 இலும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதியில் வைத்து இவர்கள்,கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, இச்சிறைக் கைதிகளின் உறவினர்கள் கைதிகளுக்கு ஆதரவாக வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக, தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் நேற்றுக் காலை முதல் ஈடுபட்டு வருகிறனர்.

மனிதாபிமான அடிப்படையில் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும், பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் இந்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

### ஈஸ்டர் தாக்குதலின் பிரதான...

(03 ஆம் பக்கத் தொடர்)

விசாரணை நடவடிக்கைகளில் அரசாங்கம் மந்த கதியில் செயற்படுகிறது என்றும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் மிகவும் அநியாயமானது.

இதனால் அந்தக் குற்றச்சாட்டுகளை நாங்கள் நிராகரிக்கின்றோம். அத்துடன் இந்தத் தாக்குதல் தொடர்பாக குரலெழுப்பும் நபர்களை ஒடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதுவும் பொய்யானதென்றும் அவர் தெரிவித்தார்.

### வட மாகாணத்தில் கல்விச்...

03ஆம் பக்க தொடர்...

ஆராயப்பட்டது. வடக்கு கல்விச் சமூகத்தினரால் கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கல்வி தொடர்பான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்புச் செயலாளர் திருமதி அம்பிகை போர்மன் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

### கொட்டதெனியாவ 'அல்கய்தா' குழுவின்....

காலை கைது செய்யப்பட்டதோடு அவர்களை மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### இரு நாட்டு மீனவர்களின்...

'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலினை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், பிரதமரின் இணைப்புச் செயலாளரான செந்தில் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர் (21) சந்தித்து கலந்துரையாடினர்.

இலங்கை தமிழரின் நலன் விடயங்கள், மீனவர் பிரச்சினை உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. கச்சதீவு உடன்படிக்கை முறையானதாக அமையாததன் காரணமாகவே, இரு நாட்டு மீனவர்களின் நட்பில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தமிழக முதல்வரை சந்தித்த பின்னர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் முதல்வருடன் கலந்துரையாடியதாகவும் இது குறித்து பரிசீலிப்பதாக தமிழக முதல்வர் கூறியதாகவும் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர் தெரிவித்துள்ளனர்.

### நாட்டில் ஆயுதக் கலாசாரம்...

ஜே.வி.பி சுமத்தி வரும் குற்றச்சாட்டு குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

1971ஆம் ஆண்டு இந்த நாட்டுக்கு ஆயுத கலாச்சாரத்தை அறிமுகம் செய்தவர்கள் யார்? ஐக்கிய தேசியக் கட்சியும், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதனைச் செய்யவில்லை. இந்த ஆயுதக் கலாச்சாரத்தையே பின்னர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கற்றுக் கொண்டார்.

1989ஆம் ஆண்டில் ஜே.வி.பி இந்த நாட்டுக்கு மீண்டும் பாரிய அழிவை ஏற்படுத்தியது.

இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்திய தரப்பே இந்த ஜே.வி.பி.

அபிவிருத்தியடைந்த நாடுகளை விடவும் இலங்கையில் பல்வேறு சேவைகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. எனவே ஜே.வி.பி. குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மின் துண்டிப்பு ஏற்படுவதை தடுக்க...

பாராளுமன்றத்தில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மின்சார சபை உயரதிகாரிகள் உள்ளிட்ட துறைசார்ந்த அதிகாரிகளுடன் நேற்று முன்தினமிரவு மின் துண்டிப்பு தொடர்பில் விஷேட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை செயற்பாடுகள் நிறைவு பெறும்வரை, மின் துண்டிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கு முடிந்தளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

தமது கேள்வியின் போது கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நடவடிக்கைகள் நிறைவு பெறும் வரை நாட்டின் மின்சாரத் துண்டிப்பை மேற்கொள்ள வேண்டாமென்றும், அது தொடர்பில் தாம் ஏற்கெனவே அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்கையிலே, அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.(ஸ)

### சிங்கப்பூர் எரிபொருள் கப்பலுக்கு...

கடந்த ஞாயிற்றுக்கிழமை இக்கப்பல் இலங்கைக்கு வந்தது. கப்பலிலிருந்து எரிபொருளை இறக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென மின்சாரத்துறை அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

டொலர் பற்றாக்குறை காரணமாக, எரிபொருள் இறக்குமதியில் தடங்கல் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, எரிபொருள் விநியோகத்திலும் நெருக்கடி நிலை ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உக்ரைன் பதற்றம் காரணமாக எரிபொருட்களின் விலை மேலும் உயருமென்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

### பாவனையாளர்களுக்கு பொலிஸார்...

என்ற ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்புக்குச் சொந்தமான Whats app குறூப் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த Whats app குறூப்புக்குள் ஒருதடவை இணைந்து விட்டால் வெளியேற முடியாது என்பதுடன் தனது Whats app குறூப்பில் இருக்கும் அனைவரையும் இதனோடு இணைக்குமாறும் குறுந்தகவல் கிடைக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஒழுங்கான முறையில் விசாரணைகளை நடத்துமாறு, மேல்மாகாண பிரதி பொலிஸ்மா அதிபருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### மீண்டும் இந்தியா செல்லும்...

நிதியமைச்சர், அண்மையில் இந்தியாவுக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தியமை வெற்றியளித்ததாக தெரிவித்த அரசாங்கம், இந்தியாவினால் வழங்கப்படும் நிதியுதவி தொடர்பான ஒப்பந்தங்களை இறுதி செய்வதற்கு மீண்டும் அவர் இந்தியாவுக்கு விஜயம் செய்வாரென தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஐக்கிய மக்கள் சக்தி...

வரி அறவிடக்கூடிய வருமானத்தை ஈட்டும் நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு ஒரு தடவை மாத்திரம் அறிவிடப்படும் இந்த 25 சதவீத மிகை வரி தொடர்பான சட்டமூலத்துக்கு அண்மையில் அமைச்சரவை அனுமதியளித்திருந்தது. எவ்வாறாயினும் இந்த வரி ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் 09 பிற நிதியங்களுக்கு அறவிடப்படமாட்டாதென நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

### மறைத்து வைக்கும் நிலையங்கள்...

எதிர்காலத்தில் கூட்டுத்தாபனம் தீர்மானம் எடுக்குமென அதன் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

### ஊடகவியலாளர் சமுத்திதவின்...

03ஆம் பக்க தொடர்...

பேரில் ஊடகவியலாளருக்கு பாதுகாப்பு அளிப்பது தொடர்பில், பாதிக்கப்பட்டவர்கள் சாட்சியங்கள் பாதுகாப்பு அதிகார சபையின் ஆலோசனையை நாடியுள்ளதாகவும் அதன் பதில் வரும்வரை பாதுகாப்புக்கு பொலிஸாரை அமர்த்தியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அந்தப் பகுதியில் பொலிஸ் ரோந்து பிரிவினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிசிடிவி கமராக்களை ஆராய்ந்து வருகின்றோம். சில பதிவுகள் தெளிவாக இல்லை. அவற்றை மேலதிகமாக ஆராய்வதற்காக மொரட்டுவை பல்கலைக்க ழகத்துக்குகு அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### மக்களின் எதிர்பார்ப்புகளை...

03ஆம் பக்க தொடர்...

இலக்குகளை அடைவதற்கு உதவுமாறு அழைப்பு விடுத்தார்.

தன்னிறைவு வேலைத்திட்டத்தின் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தை முகாமைத்துவப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்தியாவசியப் பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, கிராம மட்டத்தில் குறைபாடுகளை ஆராய்ந்து தகவல்களைப் பெறுவதற்கு பிரதேச செயலகங்களினால் பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, ஆளுநர்கள், அமைச்சுக்கள், மாகாண மற்றும் மாவட்டச் செயலாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

# கிழக்கின் குரல்



# இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் முயற்சியால் விவசாயிகளுக்கு காப்புறுதி

(கல்லடி குறூப் நிருபர்)

பெரும்போக வேளாண்மைச் செய்கையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்புறுதி வழங்குவது தொடர்பான ஆலோசனைச் சபையின் கலந்துரையாடலொன்று செவ்வாய்க்கிழமை (22) பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் பெரும்போக வேளாண்மைச் செய்கையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவாக இழப்பீட்டு காப்புறுதியினை வழங்க வேண்டுமென, இக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட பின் தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக, இக் கலந்துரையாடலின் போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட வயல்களுக்கு ஏக்கருக்கு நாற்பதாயிரம் ரூபா தொடக்கம் இழப்பீட்டினையும், ஏனைய பகுதியளவில் பாதிக்கப்பட்ட வயல்களுக்கு பாதிப்பிற்கு ஏற்ப காப்புறுதியினையும் எதிர்வரும் (28) ஆம் திகதி முதல் வழங்குவதற்கான ஏற்பாட்டினை மேற்கொள்ளவுள்ளதாக விவசாய அமைச்சர் வாக்குறுதியளித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.



விவசாயிகளுக்கான இழப்பீட்டு காப்புறுதியினை எதிர்வரும் (28) திகதி மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டபத்தடி, ஆயித்தியமலை, கரடியனாறு மற்றும் ஏறாவூர் ஆகிய நான்கு பகுதிகளில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை முதல்கட்டமாக வழங்கி வைக்கவுள்ளதாக தெரிவித்தார்.

# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.எம். நவாஸ் கௌரவிப்பு



(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

இலங்கை உதைப்பந்தாட்ட துறைக்கு பங்காற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.எம். நவாஸ், திகாமடுல்ல உதைப்பந்தாட்ட அபிவிருத்தி லீக்கின் தலைவராக ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டமைக்காக அவரை கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை (20) அட்டாளைச்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

திகாமடுல்ல உதைப்பந்தாட்ட அபிவிருத்தி லீக்கின் சிரேஷ்ட உப தலைவர் ஐ.எச்.ஏ.வஹாப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நவாஸ் உதைப்பந்தாட்டத் துறைக்கு ஆற்றிய பங்களிப்பினைப் பாராட்டி பொன்னாடை போர்த்தியும் நினைவுச்சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார். அக்கரைப்பற்றை பிறப்பிடமாகக் கொண்ட இவர், இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றி வருகின்றார்.

அத்தோடு இலங்கை பொலிஸ் மகளிர் உதைப்பந்தாட்ட அணியின் செயலாளராகவும் பதவி வகித்து வருவதுடன், சுற்றுலாப் பிரிவின் பணிப்பாளராகவும் இருந்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் அட்டாளைச்சேனை ஜும்ஆப்பள்ளிவாசல் தலைவர் எம். எஸ்.எம்.ஜுனைதீன், அட்டாளைச்சேனைப் பிரதேச சபையின் உதவித் தவிசாளர் எஸ்.எம்.எம்.ஹனீபா, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். உவைஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தொடர்பாடல் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படுமா?

(காரைதீவு குறூப் நிருபர்)

காரைதீவு தொழிற்பயிற்சி நிலையத்தில் இடைநிறுத்தப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் பயிற்சிநெறி, மீண்டும் ஆரம்பிக்கப்படுமா? என பெற்றோர் ஆதங்கப்படுகின்றனர்.

காரைதீவு தொழிற்பயிற்சி நிலையத்தில் கடந்த 1997 இல் ஆரம்பிக்கப்பட்டு பல வருடகாலமாக சிறந்த முறையில் இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் இப் பயிற்சிநெறியின் போதனாசிரியர் 2020 இல் இருந்து இடை நிறுத்தப்பட்டார்.

அப் போதனாசிரியருக்கு பதிலாக வேறு போதனாசிரியர்கள் இன்று வரைக்கும் நியமிக்கப்படவும் இல்லை, பயிற்சிநெறிகள் இடம்பெறவும் இல்லை.

தற்காலத்திற்குத் தேவையான இப்பயிற்சி நெறியை மீண்டும் ஆரம்பிக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வர வேண்டும் என பெற்றோர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## அதி சொகுசு காரில் கேரள கஞ்சா கடத்திய இருவர் கைது

கேரள கஞ்சாவினை அதி சொகுசு காரில் கடத்திய குற்றச்சாட்டில் இரு சந்தேக நபர்களை பெரிய நீலாவணை பகுதியில் புதன்கிழமை (23) மதியம் கல்முனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீண்ட காலமாக கேரளா கஞ்சா வாகனங்களின் மூலம் கடத்தப்பட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கல்முனை பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து பெரியநீலாவணை பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பு காவலரணில் பாதுகாப்பினை பலப்படுத்தி இருந்தனர்.

இந்நிலையில் பொலனறுவை பகுதியில் இருந்து பொத்துவில் நோக்கி ஹொன்டா ரக அதி சொகுசு காரில், 10 கிலோவுக்கும் அதிகமான கஞ்சா பொதிகளுடன் பயணம் செய்த இரு சந்தேக நபர்களை பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மேற்கொண்ட திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்டது.

கைதாகிய 27 மற்றும் 28 வயதுடைய சந்தேக நபர்கள் உட்பட மீட்கப்பட்ட சான்று பொருட்கள் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டு, மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

தோப்பூர் குறூப் நிருபர்

மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலிம்சேனை பகுதியில் வைத்து ஹெரோயின் போதைப் பொருளுடன் குடும்பஸ்தர் ஒருவரை மூதூர் பொலிஸார் செவ்வாய்கிழமை (22) கைது செய்துள்ளனர். குறித்த நபரிடமிருந்து 05 கிராம் 100 மில்லி கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூர் ஆலிம்சேனை பகுதியைச் சேர்ந்த 06 பிள்ளைகளின் தந்தையான 34 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். போதைப்பொருள் வைத்திருப்பதாக மூதூர் சிறு குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலே இக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகபொலிஸார்தெரிவித்தனர்.

# அரச காணியை சுவீகரித்தோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்

(ஒலுவில் விசேட நிருபர்)



அட்டாளைச்சேனை கோணவத்தை ஆற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அரச காணியை சட்டவிரோதமாக பிடித்து வைத்திருப்பவர்களுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை கோணவத்தை ஆற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அரச காணியை சட்டவிரோதமாக பொது மக்கள் அடாத்தாக பிடித்துள்ளதை தடை செய்வதற்கு, அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் தீர்மானத்திற்கமைய இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இத் தீர்மானத்திற்கமைய பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர், கரையோரம் பேணல் திணைக்களத்தின் பொறியியலாளர், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர், நீர்ப்பாசன பணிப்பாளர், நில அளவை திணைக்களத்தின் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ மாவட்ட உதவிப் பணிப்பாளர், பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் நேரடியாக கடந்த வியாழக்கிழமை (17) கள விஜயம் மேற்கொண்டு குறித்த பிரதேசங்களை பார்வையிட்டனர்.

அண்மைக்காலமாக ஆற்றின் இரு மருங்கிலுமுள்ள அரச காணியை பொது மக்கள் அடாத்தாக பிடித்து எல்லையிட்டு மண் நிரப்பி வருவதை காண முடிகின்றது. இதனால் இயற்கை அனர்த்தங்களின் போது ஏற்படக் கூடிய சேதங்கள் அதிகரிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுமெனவும் தெரிவித்தார்.

# மாற்றுத்திறனாளிகளின் கல்வி தொடர்பான விழிப்புணர்வு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாற்றுத்திறனாளிகளின் உட்படுத்தல் கல்வி தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் புதன்கிழமை (23) புதிய காத்தான்குடியில் இடம் பெற்றது.

நவஜீவன நிறுவனத்தின் அனுசரணையுடன் காத்தான்குடி பிரதேச செயலகம் மற்றும் காத்தான்குடி பிரதேச மட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பினால் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் இடம் பெற்றது.

இதன் போது மாற்றுத்திறனாளிகளின் உட்படுத்தல் கல்வி தொடர்பாக வலியுறுத்தப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதர், சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.ஏ.சி.நஜிமுதீன், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.ராதிகா உட்பட உத்தியோகத்தர்கள் காத்தான்குடி பிரதேச மட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் நிருவாகிகள் கலந்து கொண்டனர்.

விழிப்புணர்வு ஊர்வலம் காத்தான்குடி சமூக பராமரிப்பு அலுவலகத்துக்கு முன்னால் இருந்து ஆரம்பமாகி பதுறியா வீதிக்கு சென்று, மீண்டும் சமூக பராமரிப்பு அலுவலகத்துக்கு முன்னால் நிறைவடைந்தது.

# தோப்பூரில் அரக்கொட்டியான் தாக்கம்; விவசாயிகள் கவலை

தோப்பூர் குறூப் நிருபர்

தோப்பூர் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட மல்லிகைத்தீவு பிரதேசத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட பெரும் போக நெற்செய்கையில், அரக்கொட்டியான் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியாதுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இம்முறை மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையில் இரசாயன உரமின்மையால் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளதுடன், இந்நோய்தாக்கத்தாலும் இன்னும் விளைச்சல் குறைவடைந்துள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப் பிரதேசத்தில் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில், ஏக்கரொன்றுக்கு 15 மூட்டைகளுக்கும் குறைவாகவே விளைச்சல் கிடைக்கப்பெறுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இம்முறை பெருமளவு நட்டத்தை எதிர்நோக்கியுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்கவேண்டுமென பிரதேச விவசாயிகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# களுவாஞ்சிகுடி சந்தையில் தீ

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



களுவாஞ்சிகுடி பொதுச் சந்தைத் தொகுதியில் அமைந்துள்ள கடை ஒன்று திங்கட்கிழமை (21) மாலை திடீரென தீப்பிடித்ததில் கடையிலிருந்த பல பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

திங்கட்கிழமை மாலை வியாபார நடவடிக்கைகளை முடித்துவிட்டு கடையை வழக்கமாக பூட்டுவதுபோல் பூட்டிவிட்டு கடை உரிமையாளர் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். பின்னர் மாலை 5.45 அளவில் குறித்த கடையினுள்ளிருந்து புகை வெளிவருவதை அயலிலிருந்தவர்கள் அவதானித்துள்ளனர்.

இவ்விடையம் குறித்து உரிய கடை உரிமையாளருக்கும் அயலவர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, அவர் விரைந்து சென்று தனது கடையைத் திறந்தபோது கடையினுள் இருந்த அனைத்துப் பொருட்களும் தீப்பற்றிக் கொண்டிருந்ததை அவதானித்தார்.

அங்கிருந்த அயலவர்களின் உதவியுடன் ஏனைய கடைகளுக்குத் தீ பரவாமல் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அணைத்துள்ளனர்.



ஒலுவில் மின்னல் வெளியீட்டகம் ஒலுவில் பரண் தோட்டத்தில் ஏற்பாடு செய்திருந்த கலைஞர்கள் ஒன்றுகூடல், கௌரவிப்பு நிகழ்வு புதன்கிழமை (16) நடைபெற்றது. இந் நிகழ்வில் வானொலி தேசிய விருது பெற்ற நாவலாசிரியர் ஜே.வஹாப்தீன், அண்மையில் கலாபூஸண விருது பெற்ற சிறுகதையாளர் கவிஞர் சொல்லன்பன் நசுறுதீன் ஆகியோருக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.எம்.ஐயூப் பொன்னாடை போர்த்தி,நினைவுப் பரிசுகள் வழங்கி வைத்த போது.

(படம்: மருதமுனை தினகரன் நிருபர்)


திகதி 22.02.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4686
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 13,670,230.00
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 3 6 0 0 4 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 46,299,451.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2981
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,432,440.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 10 40 49 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,269,162.40

Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1034
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,951,940.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 237,556,786.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து C
சுப்பர் இலக்கம் 20
வெற்றி இலக்கங்கள் 34 45 53 61

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 0716
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,662,200.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 23 63 67 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,612,559.20

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0027
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,335,320.00
இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 08 32 55 60
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,605,110.84

செவன
சீட்டிழுப்பு இலக்கம் :358
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,555,120.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 44 65 72 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,375,148.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 பெப்ரவரி 24
வியாழக்கிழமை

# மன்னார் மாவட்டத்தில் பெப்ரவரி மாதம் கொரோனா பரவல் தீவிரம்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன்


**மன்னார் குறூப், தலைமன்னார் விசேட நிருபர்கள்**

மன்னார் மாவட்டத்தில் இம்மாதம் 488 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய தற்போது வரை 3672 கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார். மன்னாரில் நேற்று புதன் கிழமை (23) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,,

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (22) மேலும் புதிதாக 14 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய பெப்ரவரி மாதம் தற்போது வரை 488 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் 2022 ஆம் ஆண்டு 689 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 3672 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



மன்னார் மாவட்டத்தில் மொத்தம் 39 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த வருடம் ஜூலை மாதத்தின் பின்னர் டெல்டா பிறழ்வு மேலோங்கிய சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு நூறு தொற்றாளர்களுக்கும் 1.1 என்ற வீதத்தில் மரணங்கள் இடம்பெற்றது.

எவ்வாறாயினும் இவ்வருடம் ஜனவரி மத்திய பகுதியின் பின்னர் ஒமிக்ரோன் பிறழ்வு மேலோங்கியதன் பின்னர் ஒவ்வொரு நூறு தொற்றாளர்களுக்கும் 6 பேர் என மரண வீதம் குறைவடைந்துள்ளது.

எவ்வாறாயினும் ஒமிக்ரோன் தொற்றினால் மாவட்டத்தில் 3 மரணங்கள் ஏற்பட்டுள்ளது.

எனவே மக்கள் சுகாதார நடைமுறைகளை கடைபிடித்து, மேலதிக வலுவூட்டல் தடுப்பூசிகளை பெற்று தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 2 ஆவது தடுப்பூசியை பெற்றவர்களில் சுமார் 55.5 சதவீத மானவர்கள் மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர்.

மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை 70 தொடக்கம்,75 சதவீதமானவர்கள் செலுத்திக் கொண்டால் மாத்திரமே தொற்றின் சங்கிலியை நாங்கள் முற்றாக முறியடிக்க முடியும்.

எனவே மக்கள் மூன்றாவது மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாவிட்டால் உடனடியாக தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

பாடசாலை மாணவர்களில் இதுவரை 12,649 பேர் தமது முதலாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர். 16 தொடக்கம் 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 2 ஆவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகின்றது.

தற்போது வரை மொத்தமாக 1,649 பேர் தமது 2 ஆவது தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர்.

மேலும் எதிர்வரும் மார்ச் 1 ஆம் திகதி மகா சிவராத்திரி நிகழ்வுகள் மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் இடம்பெறவுள்ளன.

இதற்காக வருகை தரவுள்ள பக்தர்கள் கட்டாயம் மூன்று தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.





நிறைவான கிராமம் செயற்திட்டம் ஊடாக தென்மராட்சிப் பிரதேச செயலகபிரிவுக்குட்பட்ட வரணிமாசேரி ஜே/340 கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்ட சனசமூக நிலையம் கடந்த திங்கட்கிழமை காலை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

படம்: சாவகச்சேரி விசேட நிருபர்

# கிரவல் மண் அகழ்வின் பின் கைடவிடப்படும் குழிகளால் ஆபத்து

**பரந்தன் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு புத்துவெட்டுவான் முதிரைச்சோலைப்பகுதியில் பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டு கிரவல் மண் அகழ்வு செய்யப்படுகின்ற போதும் தமது பகுதிகளில் எந்தவித அபிவிருத்திகளும் இடம்பெறுவதில்லையென கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு புத்துவெட்டுவான் மருதன்குளம் ஐயன்கன்குளம் போன்ற கிராமங்களை அண்மித்துக் காணப்படுகின்ற புத்துவெட்டுவான்; முதிரைச்சோலை பகுதியில் பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டு கிரவல் மண் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு கிரவல் அகழ்வுகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றது. இப்பிரதேசத்தில் 25 தொடக்கம் 30 அடி ஆழத்திற்கு மேல் இவ்வாறு கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதனால் பாரிய குழிகள் ஏற்பட்டு நீர்தேங்கிக்காணப்படுகின்றன.

அதுமட்டு மின்றி எதிர்காலத்தில் கால்நடைகள் வீழ்ந்து இறக்கக்கூடிய ஆபத்து நிலை காணப்படுவதாகவும் பிரதேசமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். பிரதேச மக்கள் தினமும் தமது பகுதியில் இருந்து பெருமளவான கிரவல் மண் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கின்றனர். எனினும் தமது கிராமத்திற்கான பிரதான போக்குவரத்து வீதி கூட பத்து வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வருவதாகவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

# ஹெரோயின் விற்பனை இருவர் கைது

**கரவெட்டி தினகரன் நிருபர்**

நெல்லியடி குடவத்தை பகுதியில் ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்ட சந்தேகத்தில் 13 வயது சிறுமியும் தாயும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டது.

சிறுமியை காவலுக்கு வைத்து வருபவர்களை அடையாளம் கண்டு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கொரோனா தொற்றாளரை காணவில்லை

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கொரோனா தொற்றாளர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம், மீசாலை வடக்கு பகுதியை சேர்ந்த 45 வயதான நபரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

காய்ச்சல் காரணமாக கடந்த 16ஆம் திகதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு அன்டிஜன் பரிசோதனை செய்யப்பட்டதில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

நோய் தீவிரமடைந்ததால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். மறுநாள் 17ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அவரது மனைவி சென்று பார்த்தபோது கணவனை அங்கு காணவில்லை.

இதனையடுத்து சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



சாரண ஸ்தாபகர் பேடன் பவலின் 165ஆவது வருட தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை யாழ். மாவட்ட சாரணர் தலைமைச் செயலகத்தில் சாரணர் தலைவர் மஞ்சுதன் தலைமையில் இடம்பெற்றது. படம் சாவகச்சேரி விசேட நிருபர்

# இளைஞர் குழு அட்டகாசம்: இருவர் காயம்

## தொடர்ச்சியாக வன்முறையில் ஈடுபடுவதாக குற்றச்சாட்டு

**வவுனியா விசேட, ஓமந்தை விசேட நிருபர்**

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் இளைஞர் குழுவின் அட்டகாசத்தால் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (22.02) மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, வைரவபுளியங்குளம், வைரவர் கோவில் வீதியில் இளைஞர் குழு வீதியில் நின்று அடிதடியில் ஈடுபட்டனர். பொதுமக்கள் செறிவாக வாழும் பகுதியாகவும், பல கல்வி நிலையங்கள் அமைந்துள்ள பகுதியாகவும் உள்ள இடத்திலேயே இந்த அட்டகாசம் இடம்பெற்றுள்ளது.

பொல்லுகள், போத்தல்கள், கல்லுகள் கொண்டு வந்த குழுவினர் தாக்குதலில் ஈடுபட்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் இரு இளைஞர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இளைஞர் குழுவின் அட்டகாசம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு அப்பகுதியில் வசிப்பவர்கள் தெரிவித்த போதும் தாமதமாக வந்த பொலிஸார் கைகலப்பில் ஈடுபட்டவர்களை அவ்விடத்தில் இருந்து விரட்டி விட்டு சென்றுள்ளனர்.

இதேவேளை, வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் தொடர்ச்சியாக இளைஞர் குழுக்களின் அட்டகாசம் இடம்பெற்று வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



வவுனியாவில் பதற்றம்

பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட போதும், அவர்கள் சீராக அப்பகுதியில் கடமையில் இன்மையால் அசம்பாவிதங்கள் தொடர்வதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# முல்லைத்தீவில் திருடியவர்கள் யாழ்ப்பாணத்தில் கைது

**யாழ்.விசேட நிருபர்**

முல்லைத்தீவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் யாழ்ப்பாணத்தில் வைத்து மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் முல்லைத்தீவு நகர பகுதியிலுள்ள வீடு ஒன்றில் இரவு நேரத்தில் 20 பவுண் நகைகளை கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவர் நேற்றைய தினம் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் சாவகச்சேரி, நெல்லியடி, ஊர்காவற்துறை, பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகின்றது. இத்திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 17 பவுண் நகையும் மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் பலர் கைது செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஏற்கனவே பல குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் என யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

# கடல் ஆய்வில் ஈடுபட்ட அமெரிக்க பிரஜையின் உடைமைகள் திருட்டு

**யாழ்.விசேட நிருபர்**

கடல் ஆய்வில் ஈடுபட்டு வரும் அமெரிக்க பிரஜையின் உடைமைகள் சில குருநகர் கடற்பகுதியில் களவாடப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க பிரஜை ஒருவர் இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார், அதன் ஒரு கட்டமாக யாழ்ப்பாணத்திற்கு கொழும்பில் இருந்து கடந்த 19ஆம் திகதி சிறிய படகொன்றில் வந்துள்ளார்.

படகில் யாழ்ப்பாணம் வந்தவர் குருநகர் கடற்பகுதியில் தனது படகினை நிறுத்தி விட்டு, தங்குவதற்காக யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் உள்ள நட்சத்திர விடுதிக்கு சென்றுள்ளார்.

விடுதியில் தங்கி விட்டு மறுநாள் படகுக்கு சென்ற போது , படகில் இருந்த சுழியோடி கண்ணாடிகள் , பாதுகாப்பு அங்கிகள் , கடல் ஆய்வு உபகரணங்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதை அவதானித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சர்வதேச செய்திகள்

## ஹொங்கொங்கில் அனைவருக்கும் கொவிட்–19 சோதனை கட்டாயம்



ஹொங்கொங்கில் உள்ள 7.5 மில்லியன் மக்களுக்குக் கட்டாயமாக கொவிட்–19 பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என ஹொங்கொங் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

கொவிட்–19 வைரஸ் தொற்றுக்கு எதிராகப் போராடும் வேளையில் அவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் நடுப்பகுதி முதல் மக்கள் மூன்று முறை பீ.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என ஹொங்கொங்கின் தலைமை நிர்வாகி கேரி லாம் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் கோடைக்கால விடுமுறை விரைவில் ஆரம்பிக்கப்படும். அதனைத் தொடர்ந்து நோய்ப் பரவல் சம்பவங்களை முற்றிலும் நீக்கும் உத்தியைக் கையாளத் திட்டமிடப்படுகிறது. இருப்பினும், ஒமிக்ரோன் திரிபு அதிவேகமான பரவலால் அங்குள்ள மருத்துவமனைகளிலும் பரிசோதனை நிலையங்களிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பரிசோதனைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் அன்றாடம் ஒரு மில்லியன் பரிசோதனைகள் வரை நடத்தப்படும் என கேரி லாம் கூறினார். நகரில் அனைவருக்கும் பரிசோதனைகளை நடத்த 7 நாட்கள் ஆகும் என்று அவர் தெரிவித்தார்.

## அமேசானில் பாரிய காடழிப்பு அச்சுறுத்தல் பற்றி எச்சரிக்கை



அமேசான் மழைக்காட்டின் இங்கிலாந்து அளவான ஒருங்கிணைந்த பகுதி புதிய சுரங்கப் பணிகள் மற்றும் காடழிப்பு அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாக புதிய அறிக்கை ஒன்று குறிப்பிட்டுள்ளது.

அமேசானில் இந்த பாதுகாக்கப்பட்ட பழங்குடியினர் பகுதிகளில் சுரங்கம் தோண்டுவது தற்போது சட்டவிரோதமாக உள்ளது.

எனினும் இதில் மாற்றத்தை கொண்டுவந்து பொருளாதார அபிவிருத்திக்காக மேலும் வளங்களை பயன்படுத்த அனுமதி அளிக்க பிரேசில் ஜனாதிபதி ஜெயிர் பொல்சொனாரோ விரும்புகிறார்.

இதில் புதிய சுரங்கங்கள் தோண்டுவற்கு அமெரிக்க மற்றும் பிரிட்டன் நிறுவனங்களும் விண்ணப்பித்திருப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அமேசான் காட்டில் உள்ள பெரும் எண்ணிக்கையான மரங்கள் வளிமண்டலத்தில் இருந்து கரிமத்தை உறிஞ்சுவதன் காரணமாக காலநிலை மாற்றத்தை மட்டுப்படுத்தும் போராட்டத்தில் அமேசான் காட்டை பாதுகாப்பது தீர்க்கமானதாக பார்க்கப்படுகிறது. புதிய அபிவிருத்தித் திட்டங்களால் இந்தப் பகுதிகளில் வாழும் ஆயிரக்கணக்கான பழங்குடி மக்களும் பாதிக்கப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'உக்ரைனில் படையெடுப்பு ஆரம்பம்'

# அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகளின் ரஷ்யா மீதான தடைகள் உக்கிரம்



உக்ரைனில் ரஷ்யாவின் படையெடுப்பு ஒன்று ஆரம்பித்திருப்பதாக அறிவித்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்யா மீது பரந்த அளவிலான தடைகளை அறிவித்துள்ளார்.

'மேற்கத்தேய நிதி அமைப்பில் இருந்து ரஷ்ய அரசை நாம் துண்டிக்கிறோம்' என்று பைடன் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு உக்ரைனின் இரு கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு துருப்புகளை அனுப்ப ரஷ்ய அரசியல்வாதிகள் அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு அனுமதி அளித்ததை அடுத்தே பைடனின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த கிளர்ச்சியாளர் பகுதிகளில் சுதந்திரத்தை ரஷ்யா அங்கீகரித்துள்ளது. இது உக்ரைன் நாட்டின் இறைமைக்கு எதிரான செயலாக பார்க்கப்படுகிறது.

ரஷ்யாவின் இந்த செயல் பரந்த அளவான ஆக்கிரமிப்பு ஒன்றுக்கான காரணியாகவே மேற்கத்தேய நாடுகள் பார்க்கின்றன. அமைதி காப்பு பணிகளுக்காக உக்ரைனில் இருந்து பிரிந்துள்ள டொனட்ஸ்க் மற்றும் லுஹன்ஸ்க் பிராந்தியங்களுக்கு ரஷ்ய துருப்புகள் நுழைய புட்டின் கடந்த திங்கட்கிழமை உத்தரவிட்டிருந்தார். இதனை முட்டாள்தனமானது என்று அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் மேற்கு ரஷ்யாவில் பல்வேறு புதிய துருப்பினர் மற்றும் தளபாடங்கள் குவிக்கப்பட்டிருப்பது மற்றும் பெலாரஸில் உக்ரைன் எல்லைக்கு அருகில் விமானத்தளத்தில் 100க்கும் அதிகமான வாகனங்கள் நிறுத்தப்பட்டிருப்பதை செய்மதி படங்களை ஆதாரம் காட்டி அமெரிக்க விண்வெளி தொழில்நுட்ப நிறுவனமான மக்சார் குறிப்பிட்டுள்ளது.

ரஷ்ய இராணுவம் சார்பில் எந்த பதிலும் அளிக்கப்படாததோடு கிழக்கு உக்ரைனுக்கு ரஷ்ய துருப்புகள் அனுப்பப்பட்டது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

இந்நிலையில் ரஷ்ய அரசை நேரடியாக இலக்குவைத்த நடவடிக்கைளில் முதல் கட்ட திட்டத்தை அறிவித்த ஜோ பைடன், 'எளிமையாகக் கூறுவதென்றால், உக்ரைனின் பெரும் பகுதியை வசப்பமுத்தும் அறிவிப்பையே ரஷ்யா வெளியிட்டுள்ளது' என்று தெரிவித்தார்.

இதில் ரஷ்ய வெளிநாட்டு கடனுக்கு எதிராகவும் அமெரிக்கா தடை விதித்துள்ளது. இதன்மூலம் மேற்கத்தேய நிதி நிறுவனங்களில் இருந்து தனது நிதி உதவிக்காக இனியும் நிதி திரட்டுவதற்கு ரஷ்யாவுக்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ரஷ்யாவின் உயர் மட்டத்தில் உள்ளவர்களையும் அமெரிக்கா தண்டித்துள்ளது. 'கிரெம்லின் கொள்கைகளில் மோசடி இலாபங்களை அவர்கள் பகிர்ந்துகொள்வதோடு அதன் வலிகளையும் அவர்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும்' என்று பைடன் தெரிவித்தார்.

கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டில் உள்ள டொனட்ஸ்க் மற்றும் லுஹன்ஸ்க் பிராந்தியங்களுடன் கொடுக்கல் வாங்கல் வைப்பதற்கு அமெரிக்க நிறுவனங்களுக்கு அந்த நாடு ஏற்கனவே தடை விதித்தபோதும் சில நிறுவனங்களே அதனை செயற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய வங்கிகள் மற்றும் தனி நபர்கள் மீது பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியமும் கடந்த செவ்வாய்க்கிழமை தடைகளை விதித்தன.

இதில் உக்ரைனின் பிரிந்த பிராந்தியங்களை சுதந்திர நாடாக அங்கீகரிப்பதற்கு வாக்களித்த ரஷ்ய பாராளுமன்ற மேலவையின் 351 உறுப்பினர்களை இலக்கு வைத்து பரந்த அளவில் ரஷ்ய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐரோப்பிய ஒன்றியத்தில் 27 உறுப்பு நாடுகளும் இணங்கியுள்ளன.

ரஷ்யாவின் ஐந்து வங்கிகள் மற்றும் அதன் பிரிட்டனில் இருக்கும் சொத்துகள் முடக்கப்படுவதாக பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் அறிவித்துள்ளார். மூன்று ரஷ்ய செல்வந்தர்கள் மீது பிரிட்டன் பயணத் தடை விதிக்கவுள்ளது. கனடா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளும் இவ்வாறான நடவடிக்கைகள் பற்றி உறுதி செய்துள்ளன.

மறுபுறம் நார்டு ஸ்ட்ரீம்–2 எனும் முக்கிய எரிவாயு குழாய்க்கு வழங்கிய ஒப்புதலை ஜெர்மனி நிறுத்தி வைத்துள்ளது. ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் அருகே உள்ள கடலோரப் பகுதியில் இருந்து ஜெர்மனியின் லப்மின் வரை பால்டிக் கடலுக்கு கீழே 1200 கிலோ மீற்றர் நீளத்துக்கு இந்த எரிவாயு குழாய் அமைந்துள்ளது.

ரஷ்ய அரசு மற்றும் மேற்கத்திய எரிவாயு நிறுவனங்கள் ஆகியவற்றால் கூட்டாக அமைக்கப்பட்டுள்ள இந்த எரிவாயுக் குழாய் ரஷ்யாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு எரிவாயுவை சுமந்து செல்ல அமைக்கப்பட்டது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் இதற்கான பணிகள் முழுமையடைந்தாலும் இன்னும் எரிவாயு கொண்டு செல்லப்படுவது ஆரம்பிக்கப்படவில்லை. இந்நிலையிலேயே இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டதை ஜெர்மனி ரத்து செய்துள்ளது.

நார்டு ஸ்ட்ரீம் என்ற முதல் எரிவாயு குழாய் 2011ஆம் ஆண்டு முதல் இயக்கத்தில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் உக்ரைன் மீதான முழு அளவிலான ஆக்கிரமிப்பின் போது எடுப்பதாக அச்சுறுத்தப்பட்ட தடைகள் அளவுக்கு தற்போதைய தடைகள் செல்லவில்லை. நிலைமை மோசமடைந்தால் மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க மற்றும் ஐரோப்பிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்காவும் ரஷ்யாவின் எல்லையில் அல்லது அதற்கு அருகில் இருக்கும் எஸ்தோனியா, லத்வியா மற்றும் லிதுவேனியா ஆகிய நேட்டோ உறுப்பு நாடுகளுக்கு தமது துருப்புகளை நகர்த்தி வருவதாக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தாலியில் இருக்கும் சுமார் 800 துருப்புகள் மற்றும் எப்–35 போர் விமானங்கள் மற்றும் 20 தாக்குதல் ஹெலிகொப்டர்கள் வேறு இடத்திற்கு மாற்றப்படவிருப்பதோடு இதன்போது போலந்திற்கு படையினர் அனுப்பப்படவுள்ளனர்.

உக்ரைன் பிரச்சினை தொடர்பான இராஜதந்திர முயற்சிகள் இதுவரையில் தோல்வியை சேந்தித்துள்ளன. பல ஆண்டுகளாக நீடிக்கும் கிழக்கு உக்ரைன் பிரச்சினையை தடுக்கும் நோக்கிலான உக்ரைன் உடன்படிக்கைகள் இனியும் நடைமுறையில் இல்லை என்று ஜனாதிபதி புட்டின் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ரஷ்ய வெளியுறவு அமைச்சருடன் இன்று வியாழக்கிழமை இடபெறவிருந்த சந்திப்பு ரத்துச் செய்யப்படுவதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

'ஆக்கிரமிப்பு ஆரம்பித்திருப்பதை எம்மால் பார்க்க முடிகிறது. இராஜதந்திரத்தை ரஷ்யா ஒட்டுமொத்தமாக நிராகரித்திருப்பது தெளிவாகத் தெரியும் நிலையில், இந்த நேரத்தில் சந்திப்பை ஏற்படுத்துவது அர்த்தமற்றது' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.


எனினும் தமது அணுகுமுறையை மாற்றினால் அமெரிக்காவால் ரஷ்யாவுடன் பேச முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடி காரணமாக ரஷ்யாவுடனான இராஜதந்திர உறவுகளை துண்டிப்பதற்கு அலோசித்து வருவதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி கூறியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நாட்டு மக்களுக்கு உறையாற்றிய செலென்ஸ்கி, மேலதிக இராணுவத்தினரை பயிற்சிக்கு அழைத்தார். எனினும் உக்ரைன் தொடர்ந்தும் இராஜதந்திர முயற்சி ஒன்றை தொடர்வதாக தெரிவித்துள்ளார்.

முழுமையான இராணுவ குவிப்பு ஒன்றுக்கு தேவை இருக்காது என்று அவர் கூறினார்.

## சீனாவில் ஒன்லைன் விளையாட்டு இளம் வயதினரிடையே அதிகரிப்பு



ஒன்லைன் விளையாட்டுக்கு எதிரான சட்டங்கள் கடந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டபோதும் சீனாவில் வயது குறைந்தவர்கள் இடையே ஒன்லைன் விளையாட்டு அதிகரித்துள்ளது.

ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்து கடந்த மாதம் ஒன்லைன் விளையாட்டுத் துறை வருவாய் 3.5 பில்லியன் டொலர்களாக 17.8 வீதம் அதிகரித்திருப்பதாக தொழில்துறை ஆய்வாளரான கெம்மா டேட்டா வெளியிட்ட தரவில் கூறப்பட்டுள்ளது.

டென்சன்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட முன்னணி ஒன்லைன் விளையாட்டான 'ஹொனர் ஒப் கிங்ஸ்' விளையாட்டில் கடந்த மாதத்தில் 165 மில்லியன் வீரர்கள் செயற்பட்டிருந்ததோடு, இது ஓர் ஆண்டுக்கு முன்னர் இருந்த அதே எண்ணிக்கை என்று அந்தத் தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவின் நடுத்தர மற்றும் ஆரம்ப பாடசாலைகளின் குளிர்கால விடுமுறை ஜனவரி 20 தொடக்கம் பெப்ரவரி 20 வரை நீடிப்பதோடு இந்தக் காலத்தில் ஒன்லைன் கேம் விளையாடுவது பிரபலமாக உள்ளது.

## இஸ்ரேலிய படை சூடு: பலஸ்தீன சிறுவன் பலி



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய படையினரால் பலஸ்தீன சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பெத்லஹாம் நகரில் அல் கதர் பகுதியில் இஸ்ரேலிய படைகளின் துப்பாக்கிச் சூட்டில் 14 வயது முஹமது ஷெஹதா கொல்லப்பட்டுள்ளார் என்று அமைச்சின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சர்வதேச விசாரணை ஒன்றுக்கு அது அழுத்தம் கொடுத்துள்ளது.

ஷெஹதா மீது இஸ்ரேலிய படையினர் நேரடி துப்பாக்கிச் சூடு நடத்தி காயம் ஏற்படுத்திய பின் அவரை தடுத்து வைத்ததோடு அம்புலன்ஸ் வண்டி அவரை அனுகுவதை தடுத்தனர் என்று உள்ளூர் செயற்பாட்டாளர் ஒருவர் வாபா செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

பலஸ்தீனர் ஒருவரின் உயிரிழப்பை இஸ்ரேலிய இராணுவம் உறுதி செய்துள்ளது. அவர் 'தம்மை கடந்து செல்லும் ஓட்டுநர்கள் மீது அவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் பெட்ரோல் குண்டுகள் வீசிய மூன்று சந்தேக நபர்களில் ஒருவர் என்று கூறியுள்ளது.

## உய்குர்களுக்கு எதிராக குடியேற்ற காலனித்துவம்



சீன அரசு 2017 தொடக்கம் சுமார் 1.8 மில்லியன் உய்குர்களை தடுத்து வைத்திருப்பதை சுட்டிகாட்டியுள்ள மானுடவியலாளர் ஒருவர், இந்த பாரிய தடுப்பு நடவடிக்கை சின்ஜியாங் உய்குர் சுயாட்சி பிராந்தியத்தில் சீனர்களின் குடியேற்றம் மற்றும் வளங்களை சுரண்டும் அங்கமாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

கனடாவின் சிமன் பிரேசர் பல்கலைக்கழகத்தில் சர்வதேச கற்கைகளின் உதவிப் பேராசிரியரான மானுடவியலாளர் டரன் பெய்லர் எழுதிய தனது புத்தகத்தில்: சின்ஜியாங் தலைநகர் உரும்கியில் உய்குர் முஸ்லிம்கள் மீதான சீனாவின் குடியேற்ற காலனித்துவம் பற்றி ஆய்வு செய்யப்பட்டிருப்பதாக ரேடியோ பிரீ ஏசியாவில் நூரிமான் அப்துரஷித் எழுதியுள்ளார்.

பயங்கரவாத முதலாளித்துவம் என்பது உய்குர்களை பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று அடையாளப்படுத்தி அவர்களை கண்காணிப்பது மற்றும் கட்டுப்படுத்துவதற்கு கொள்ளை மற்றும் கண்காணிப்பு தொழில்நுட்பங்களில் அரச முதலீட்டை உருவாக்கி ஒடுக்குமுறையை நியாயப்படுத்தும் முறையாகும் என்று பெய்லர் குறிப்பிட்டுள்ளார்.

## நெதர்லாந்தில் பிணை பிடிக்கப்பட்டோர் மீட்பு



நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் உள்ள ஆப்பிள் கடையொன்றில் பலரைப் பிணைக்கைதிகளாக பிடித்த நபர் பல மணிநேர முற்றுகைக்குப் பின்னர் பிடிபட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.


பிணை பிடிக்கப்பட்டிருந்த அனைவரும் பாதுகாப்பாய் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கபட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சுமார் 5.40 மணிக்கு கொள்ளைச் சம்பவம் குறித்துத் தகவல் கிடைத்ததையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றனர். அந்த நபர் பலரைப் பிணையில் பிடித்திருந்தார். சம்பவம் ஆரம்பித்ததில் இருந்து பலரால் கடையிலிருந்து தப்பிக்க முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடைசியாகப் பிணையில் இருந்த ஒருவரும் காப்பாற்றப்பட்டார்.

துப்பாக்கி முனையில் ஒருவரை அந்த நபர் பிணை பிடித்திருந்த புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டன. ஆப்பிள் கடைக்குள் துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் பல முறை கேட்டதாகவும் கூறப்படுகிறது.

கொள்ளையில் ஈடுபட முயன்றபோதே அந்த துப்பாக்கிதாரி கடையில் இருந்தவர்களை பிணைக் கைதிகளாக பிடித்துள்ளார்.

## சிரியாவின் எல்லைப் பகுதியில் இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல்



சிரியாவின் எல்லை மாகாணமான குனைத்ரா மீது இஸ்ரேல் நடத்திய பல ஏவுகணைத் தாக்குதல்களில் பொருட்சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

நேற்றுக் காலை இந்தத் தாக்குதல் இடம்பெற்ற பகுதி பற்றி சிரிய இராணுவத்தின் அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

சிரியாவின் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் குன்று பகுதியில் இருந்து வீசப்பட்ட இந்த ஏவுகணைகள் குனைத்ரா நகருக்கு அருகில் தாக்கியதாக பெயர் குறிப்பிடாத சிரிய இராணுவ அதிகாரி ஒருவர் சிரிய அரச தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார்.

நள்ளிரவுக்கு பின் அதிகாலை நேரத்தில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் எந்த உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

சிரியா மீது இஸ்ரேல் இந்த மாதத்தில் நடத்தும் மூன்றாவது வான் தாக்குதலாக இது உள்ளது.

எனினும் ஒரு தசாப்த கால சிரிய உள்நாட்டு யுத்தத்தில் அந்த நாட்டின் மீது இஸ்ரேல் நூற்றுக்கணக்கான தாக்குதல்களை நடத்தியபோதும், அது பற்றி இஸ்ரேல் வெளியுலகுக்கு அரிதாகவே அறிப்புகளை வெளியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 'மன்ஹஜ்' அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின்

# மார்க்க விவகாரங்களில் இலங்கை முஸ்லிம்களுக்கான நிலைப்பாடுகளும் வழிகாட்டல்களும்

எமது நாட்டில் அண்மைக் காலமாக இடம்பெற்ற சில நிகழ்வுகளைத் தொடர்ந்து, முஸ்லிம் சமூகத்தை கட்டுக்கோப்பான முறையில் வழி நடாத்த வேண்டிய தேவை பலராலும் உணரப்பட்டு, இது தொடர்பான கலந்துரையாடல்கள் பல மட்டங்களில் நடைபெற்று வந்துள்ளன.

இந்த அடிப்படையில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா இலங்கை முஸ்லிம்களுக்கு மார்க்க ரீதியான வழிகாட்டல்களையும் நிலைப்பாடுகளையும் அவற்றிற்கான வரையறைகளையும் விரிவாக வழங்க வேண்டும் என தீர்மானித்து இப்பணியில் கடந்த இரண்டு வருடங்களாக ஈடுபட்டு வந்துள்ளது.

அந்த வகையில் இவ்வாறாதொரு ஆவணத்தை தயாரிப்பதற்காக பிரத்தியேகக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறித்த குழு, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நிறைவேற்றுக் குழு, பத்வாக் குழு, துறை சார்ந்தவர்கள் மற்றும் சட்டத்தரணிகள் என பலருடனும் பல அமர்வுகளில் கலந்துரையாடி 'மன்ஹஜ்' இலங்கை முஸ்லிம்களுக்கான வழிகாட்டல்களும், நிலைப்பாடுகளும் எனும் ஆவணத்தை தயாரித்தது.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் வரலாறு நெடுகிலும் தமக்கு மத்தியில் ஒற்றுமையுடனும் ஏனைய சமூகங்களுடன் சகவாழ்வைப் பேணியும் மார்க்க விவகாரங்களில் ஆலிம்களின் வழிகாட்டல்களுக்கு அமையவும் செயலாற்றி வந்துள்ளனர். அதன் தொடரில் சமூக ஒற்றுமையைப் பேணக்கூடிய, மார்க்க விவகாரங்களை ஆலிம்களின் வழிகாட்டல்களுக்கேற்ப நிதானமாகவும் நடுநிலையாகவும் அணுகக்கூடிய, மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய, மாற்று மதத்தவர்களுடன் சகவாழ்வைப் பேணக்கூடிய, தேசப்பற்றுடன் தேசத்திற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய ஒரு முன்மாதிரிமிக்க, கட்டுக்கோப்பான சமூகத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இவ்வழிகாட்டல் முஸ்லிம்களின் நம்பிக்கைக் கோட்பாடுகள் தொடர்பான விடயங்களையும் இறுதி நபித்துவம், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது குடும்பத்தார்கள் மற்றும் தோழர்கள் பற்றிய நிலைப்பாடுகளையும் இறைநேசர்கள், மத்ஹப்கள், தஸவ்வுப் (உளப் பரிசுத்தம்) பிற மதத்தவர்களுடனான உறவு, வழிதவறிய சிந்தனைகள் மற்றும் இஸ்லாமிய போதனைகளை முன்வைக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவான வழிகாட்டல்களையும் உள்ளடக்கியுள்ளது. குறித்த ஆவணம் கடந்த 30.01.2022 ஆம் திகதி கொழும்பு சாஹிரா கல்லூரியின் கபூர் மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

நம் நாட்டில் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் "அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்" கோட்பாட்டினைச் சார்ந்தவர்களாக தமது சன்மார்க்கக் கடமைகளையும் கிரியைகளையும் நிறைவேற்றி வந்துள்ளதுடன் நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு, அமைதி ஆகியவற்றுக்கு பங்களிப்புச் செய்தும் வந்துள்ளனர்.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் கோட்பாட்டினை பாதுகாப்பதோடு ஆன்மிகம், ஒழுக்கம், கல்வி, பண்பாடு, நாகரிகம், சமூகக் கட்டுக்கோப்பு ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கவும் அவற்றை மேம்படுத்தவும் மஸ்ஜித்கள், தக்கியாக்கள், ஸாவியாக்கள், பள்ளிக்கூடங்கள், அரபுக் கல்லூரிகள் என பல்வேறு சமூக அமைப்புக்கள் வரலாறு நெடுகிலும் பாடுபட்டு வந்துள்ளன.

மார்க்க அறிஞர்களுக்கு மத்தியில் காணப்படும் கருத்து வேறுபாடுள்ள விடயங்களை நாம் கையாளும் சந்தர்ப்பத்தில், அதற்கென எமது முன்னோர்களால் வரையறுக்கப்பட்ட ஒழுங்குகளை மதித்து செயற்பட வேண்டும். அதன்போதே, நமது முன்னோர்களின் வழிகாட்டல்களையும் வழிமுறைகளையும் பணிகளையும் நாம் பாதுகாத்து செயற்பட்டதாக அமையும்.

எமது சமய, சமூக, பண்பாடு ரீதியான விடயங்களை பேணி, பாதுகாத்து, மேம்படுத்துவதற்காக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்புடனும், புரிந்துணர்வுடனும் நடந்து கொள்வதோடு, அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத் கோட்பாட்டின் வரையறைக்குள் நின்று, தெளிவான அடிப்படைகளை வகுத்து, அனைவரும் ஒன்றித்து பயணிப்பதே இந்த மன்ஹஜின் நோக்கமாகும்.

அவ்வடிப்படையில் பின்வரும் நிலைப்பாடுகளை இலங்கை முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் இஸ்லாமிய அமைப்புகளும் தமது சமய, சமூக பொது விடயங்களில் மதித்து செயற்படுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அன்பாக வேண்டிக்கொள்கிறது.

### அகீதா (நம்பிக்கைக் கோட்பாடு):

அகீதா (நம்பிக்கைக் கோட்பாடு) விவகாரத்தில் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தை தழுவிச் செயற்படல், அல்லாஹ் அவன் ஒருவனே, அல்லாஹ் (யாவற்றை விட்டும்) தேவையற்றவன், அவன் (எவரையும்) பெறவுமில்லை, (எவராலும்) அவன் பெறப்படவுமில்லை. மேலும், அவனுக்கு நிகராக எவருமில்லை.

### அல்லாஹ்வுக்குரிய தாத் மற்றும் ஸிபாத்கள் (பண்புகள்)

### மலக்குமார்கள்

மலக்குமார்கள் என்போர் அல்லாஹுத் தஆலாவினால் ஒளியின் மூலம் படைக்கப்பட்ட ஒரு சிரேஷ்ட படைப்பினராவர். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஒருபோதும் மாறு செய்யாதவர்கள் என்பதுடன் அவற்றை அப்படியே ஏற்று நடப்பவர்கள் என நம்புதல்.

### வேதங்கள்

மனித சமுதாயம் இவ்வுலகில் நேரான வழியில் நடப்பதற்காகவும் மறுமையில் வெற்றி பெறுவதற்காகவும் அல்லாஹ் தனது தூதர்களின் மூலம் அவர்களுக்கு வழங்கிய கட்டளைகளும் வழிகாட்டல்களுமே வேதங்களாகும் என்பதையும், அல்குர்ஆன் என்பது எமது உயிரிலும் மேலான நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அருளப்பட்ட இறுதி வேதம் என்பதையும் உறுதியாக நம்புதல்.

### நபிமார்கள் மற்றும் றஸூல்மார்கள்

அல்லாஹ்வினால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட நபிமார்கள், றஸூ ல்மார்கள் என அல்குர்ஆன் மற்றும் ஹதீஸில் அறியப்படும் அனைவரையும் அவர்கள் அல்லாஹ்வின் தூதர்கள் என்றும், பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்ட 'மஃஸூம்'கள் என்றும் உறுதியாக நம்புதல்.

### இறுதி நபித்துவம்;

முஹம்மத் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட இறுதி நபியும் ரஸூலும் ஆவார்கள். இது இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும். இதற்கு மாற்றமான கொள்கைகளுக்கும் இஸ்லாத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதை ஏற்றுக்கொள்ளல்.

முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பின்னர் தன்னை ஒரு நபியென வாதிட்ட அல்லது வாதிடுகின்ற ஒருவரை ஒரு முஸ்லிம் தமது மதத் தலைவர் அல்லது சன்மார்க்க சீர்திருத்த வாதி என அங்கீகரிப்பது மேற்கூறிய இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைக்கு முரணானதாகும்.

> ❝ மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய, மாற்று மதத்தவர்களுடன் சகவாழ்வைப் பேணக்கூடிய, தேசப்பற்றுடன் தேசத்திற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய ஒரு முன்மாதிரிமிக்க, கட்டுக்கோப்பான சமூகத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். ❞

நபி முஹம்மத் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களை நேசிப்பதும் அவர்களைப் புகழ்வதும் அவர்கள் மீது ஸலவாத் சொல்வதும் அவர்களது சுன்னத்துகளைப் பின்பற்றுவதும்.

அன்பு நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தனது உயிரை விடவும் தாய், தந்தையர்களை விடவும், தனது பிள்ளைகளை விடவும், இவ்வுலகில் அனைவரை விடவும் நேசிப்பது ஒரு முஃமினின் பரிபூரண ஈமானுக்கு அடையாளமாகும். அன்னவர்களை உலகத்தார் அனைவருக்கும் மிகப் பெரும் அருட்கொடையாக அல்லாஹ் அனுப்பி வைத்தான். அவ்வருட்கொடைக்கு நன்றி செலுத்துவதும் அதனைப் பிரஸ்தாபிப்பதும் மார்க்கத்தில் ஆர்வமூட்டப்பட்ட விடயங்களாகும்.

நபி முஹம்மத் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் படைப்பினங்களில் மிகவும் உயர்வானவர். அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமானவர். எல்லா விதமான பாவங்களில் இருந்தும் பாதுகாக்கப்பட்டவர். அவர்களின் உறுதி செய்யப்பட்ட சொல், செயல், அங்கீகாரம் அனைத்தும் மார்க்கமாகும். அவர்களை கண்ணியப்படுத்துவதும் அவர்களுடன் நேசம் கொள்வதும் ஈமானின் ஓர் அம்சமாகும். அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வது தொழுகையில் கட்டாயமானதாகும் என்பதுடன், ஏனைய சந்தர்ப்பங்களிலும் மிகவும் விஷேடமான அமலாகும்.

நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் மகிமை, கீர்த்தி, வாழ்க்கை வரலாறு, குணாதிசயம் மற்றும் சுன்னா என்பவற்றை மார்க்க வரையறைகளைப் பேணி முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதோருக்கும் எடுத்துச் சொல்வது, அது பற்றி பிரஸ்தாபம் செய்வது, அவர்களது நேசத்தை உள்ளங்களில் வேரூன்றச் செய்வது முஸ்லிம்களின் மீது கடமையாகும். இதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்த ரபீஉனில் அவ்வல் மாதம்; பொன்னான சந்தர்ப்பமாகும். அம்மாதத்தில் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவது மிகவும் ஏற்றமானதாகும்.

நபி முஹம்மத் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களது சங்கையான அடக்கஸ்தலத்தை ஸியாரத் செய்தல்

நபி முஹம்மத் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களது முபாரக்கான உடல் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் மஸ்ஜிதுன் நபவிக்குச் சென்று அவர்களது சங்கையான அடக்கஸ்தலத்தை ஸியாரத் செய்வது முக்கிய ஸுன்னத்தாகும்.

### இறுதி நாள்

அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் கூறப்பட்டுள்ள இறுதி நாளையும் அதனுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் நம்புதல்.

### கழா கத்ர்

நன்மை, தீமை அல்லாஹ்வின் விதிப்படியே நடைபெறும் என்று நம்புதல்.

- ✦ நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது அஹ்லுல் பைத், குடும்பத்தார்கள் மற்றும் தோழர்கள் (ஸஹாபிகள்)

அவர்களின் ஸஹாபிகளில் அல்குலபாஉர் ராஷிதூன்களான ஹழ்ரத் அபூபக்ர், ஹழ்ரத் உமர், ஹழ்ரத் உஸ்மான், ஹழ்ரத் அலீ றழியல்லாஹு அன்ஹும் ஆகியோர் மிக சிரேஷ்டமானவர்களாவர்.

நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தார்கள், (அஹ்லுல் பைத்), 'உம்மஹாத்துல் முஃமினீன்களான நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவிமார்கள் அனைவரும் சிறப்புக்குரியவர்கள். அவர்கள் அனைவரையும் நேசிப்பது ஈமானின் முக்கிய பண்புகளில் உள்ளதாகும்.

ஸஹாபிகள் அனைவரும் நேர்மையானவர்கள். அவர்கள் இஸ்லாத்தின் எழுச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு பல்வேறு தியாகங்கள் செய்தவர்கள். அவர்களை நேசிப்பது ஈமானின் அடையாளங்களில் உள்ளதாகும். அத்தகைய நபித் தோழர்களை விமர்சிப்பதும் தூற்றுவதும் மார்க்கத்தில் தடுக்கப்பட்டதாகும். நபித் தோழர்களான சங்கைமிகு ஸஹாபிகளை தூற்றுவது அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத் கோட்பாட்டுக்கு மாற்றமானதும் முற்றுமுழுதான வழிகேடுமாகும்.

### சங்கைமிகு அவ்லியாக்கள் (இறைநேசர்கள்)

அவ்லியா என்பது நேசன் எனும் பொருள்கொண்ட "வலீ" எனும் அரபுச் சொல்லின் பன்மையாகும். அல்லாஹுத் தஆலாவின் கட்டளைகளை மதித்து வாழ்வில் எடுத்து நடப்பதுடன் நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளைப் (சுன்னத்களைப்) பின்பற்றி தங்களது அகத்தையும் புறத்தையும் பரிசுத்தப்படுத்தி அல்லாஹுத்தஆலாவின் நெருக்கத்திலும் நேசத்திலும் உயர் நிலையை அடைந்தவர்களே சங்கைமிகு அவ்லியாக்கள் (இறைநேசர்கள்) ஆவார்கள். இத்தகைய இறைநேசர்களுக்கு உலக வழமைக்கு மாற்றமான 'கராமத்' எனப்படும் அதிசயிக்கத்தக்க நிகழ்வுகள் சில வேளைகளில் அல்லாஹ்வின் நாட்டப்படி இடம்பெறலாம் என்பது அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்தின் நிலைப்பாடாகும்.

### சுன்னாவும் பித்ஆவும்

நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உறுதி செய்யப்பட்ட சொல், செயல், அங்கீகாரம் என்பன ஸுன்னத் ஆகும். ஸுன்னத்தைப் பின்பற்றுவது நன்மையான காரியமாகும். நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் இல்லாத, மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட விடயம் பித்அத் எனப்படும். அது ஷரீஅத்திற்கு முரணில்லா திருப்பின் வரவேற்கத்தக்க பித்அத் ஆகும். நபியவர்களது ஸுன்னாவுக்கு அல்லது ஸஹாபிகளின் கூற்றுக்களுக்கு அல்லது இஜ்மாஉக்கு முரண்படக்கூடியதாக அமையுமாயின் அது வழிகேட்டுக்குரிய பித்அத்தாகும். இதுவே பித்அத் தொடர்பான சங்கையான இமாம்களின்; நிலைப்பாடாகும்.

### அல்ஃபிக்ஹ்

மார்க்க சட்ட விவகாரங்களில் முடிவெடுப்பதற்கு அல்குர்ஆன், அல்ஹதீஸ், அல் இஜ்மாஉ, அல்கியாஸ் ஆகிய மூலாதாரங்களிலிருந்து பெறப்படும் ஆதாரங்களையும் அவற்றுக்கு எமது முன்னோர்களான ஸஹாபிகள், தாபிஃகள், இமாம்கள் வழங்கியுள்ள விளக்கங்களையும் அடிப்படையாகக் கொள்ளல்.

### மத்ஹப்கள்

அல்குர்ஆன், அல்ஹதீஸ், அல்இஜ்மாஉ, அல்கியாஸ் ஆகிய மூலாதாரங்களிலிருந்து 'முஜ்தஹித் முத்லக்' என்ற தகுதியுள்ளவர்களால் அடிப்படைகளை ( உஸூல்களையும் கவாஇத்களையும்) வைத்து காலா காலம் தோன்றிய மார்க்க அறிஞர்களினால் தொகுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டதே மத்ஹப்களாகும். மார்க்க கிளை விவகாரங்களில் பின்பற்றப்படத் தகுந்த, உலக முஸ்லிம்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹனபி, மாலிகி, ஷாபிஈ, ஹன்பலி ஆகிய நான்கு மத்ஹப்களும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. அவற்றைப் பின்பற்றுவோர் நேர்வழியில் இருக்கின்றனர். குறித்த நான்கு மத்ஹப்களைப் பின்பற்றக் கூடாது. அவ்வாறு பின்பற்றுவது வழிகேடு என்ற கூற்று முற்றிலும் பிழையானதாகும். மத்ஹப்களைப் புறக்கணித்து அல்குர்ஆன், அல்ஹதீஸுக்கு தன்னிச்சையாக விளக்கமளிப்பது வழிகேட்டின் பால் இட்டுச் செல்லும்.

### ஷாபிஈ மத்ஹப்

அன்றாட வணக்க செயற்பாட்டு விவகாரங்களில் ஆரம்ப காலம் தொட்டு ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் இயல்பாக காணப்படுகின்றன. இலங்கையில் அன்று முதல் இன்று வரை பெரும்பான்மை முஸ்லிம்கள் ஷாபிஈ மத்ஹபைப் பின்பற்றியவர்களாகவே இருந்து வந்துள்ளனர். அவ்வாறே அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் மார்க்கத் தீர்ப்புக்களும் (ஃபத்வாக்களும்) வழிகாட்டல்களும் ஷாபிஈ மத்ஹபை அடிப்படையாகக் கொண்டவையாகவே அமையப்பெற்று வருகின்றன.

மிக இக்கட்டான அல்லது சங்கடமான சூழ்நிலைகளில் மாத்திரம் ஹனபி, மாலிகி, ஹன்பலி ஆகிய உலக முஸ்லிம்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய மத்ஹப்களின் கருத்துக்களை உள்வாங்கும் பொழுது அவற்றுக்கான முறைகளைப் பேணியே ஜம்இய்யா செயலாற்றி வருகின்றது.

### அல்குர்ஆன் மற்றும் ஹதீஸு க்கு தன்னிச்சையாக விளக்கம் கொடுத்தல்

அல்குர்ஆன் மற்றும் ஹதீஸை விளங்க, அவற்றுக்கு வியாக்கியானம் செய்ய முனைவோர் அவற்றுக்கான அடிப்படைகளை (உஸூல்கள்) கட்டாயம் பின்பற்றியாக வேண்டும் என்பதோடு குறித்த வசனம் மற்றும் ஹதீஸ் தொடர்பில் முபஸ்ஸிரீன்கள் மற்றும் முஹத்திஸீன்கள் கூறும் கருத்துக்களையும் விளக்கங்களையும் அவசியம் கவனத்திற் கொள்ளல் வேண்டும். அதற்கு மாற்றமாக தமது தனிப்பட்ட கருத்துக்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அவற்றை விளங்க முயற்சிப்பது, அவற்றுக்கு வியாக்கியானம் செய்வது வழிகேடாகும். அவற்றை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

### அல்இஹ்ஸான் (தஸவ்வுப், தஸ்கிய்யா) உளப் பரிசுத்தம் மற்றும் இறை நெருக்கம்

.முஹத்திஸீன்களிடம் "ஹதீஸு ஜிப்ரீல்" எனப் பிரபல்யமான ஹதீஸில் வந்துள்ள "அல்இஹ்ஸான்" என்பது உளப் பரிசுத்தத்தைக் குறிக்கிறது. அதற்கு 'தஸ்கியதுன் நப்ஸ்', 'பிக்ஹுல் பாதின்', 'தஸவ்வுப்' போன்ற பல்வேறு பெயர்கள் உபயோகிக்கப்படுகின்றன என்பதுடன், அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தைச் சேர்ந்த ஷைகுமார்களுடைய வழிகாட்டலின் கீழ் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்தின் அடிப்படைகளுக்கு உட்பட்டு நெறிபிறழாது இயங்கும் ஆன்மிக தரீக்காக்களும் அவற்றின் ஆன்மிகப் பயிற்சிகளும் ஹதீஸு ஜிப்ரீலில் வந்துள்ள "அல்இஹ்ஸான்" எனும் உளப் பரிசுத்தத்தை உருவாக்கிக் கொள்ள உதவுகின்றன என்பதை மனதார ஏற்றுக் கொள்ளுதல். மேலும், அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்துடைய கோட்பாட்டுக்கு முரணாகவோ, ஷரீஆவுக்கு முரணாகவோ செயற்படும் எந்த ஒரு தஸவ்வுப் சிந்தனைகளையும் நாம் அங்கீகரிப்பதில்லை.

### ஸியாரத்துல் குபூர் (அடக்கஸ்தலங்களைத் தரிசித்தல்)

அடக்கஸ்தலங்களைத் தரிசிப்பது ஸுன்னத்தாகும். அது மரணத்தையும் மறுமை வாழ்வையும் நினைவூட்டுகிறது. ஸியாரங்கள் எமது நல்லடியார்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடங்களாகும். இவற்றைப் பாதுகாப்பது எமது பொறுப்பாகும். அவ்வகையில் மார்க்க வழிகாட்டல்களுக்கு அமைய ஸியாரங்களுக்கு சென்று வருவது ஏனைய அடக்கஸ்தலங்களுக்குச் சென்று வருவது போன்றதொரு ஸுன்னத்தாகும்.

### பிற மதங்கள் மற்றும் அவர்களால் வணங்கப்படுபவை

பிற மதங்களையும் பிற மதத்தவர்களால் வணங்கப்படுபவற்றையும் அவர்களின் வணக்கஸ்தலங்களையும் அவர்களது மதம் சார்ந்த கொள்கை, கோட்பாடுகளையும் நம்பிக்கைகளையும் புராதன இடங்களையும் அவமரியாதை செய்வது அல்லது தூற்றுவது அல்லது சேதப்படுத்துவது அல்லது இவை போன்ற வேறு செயல்களில் ஈடுபடுவது முற்றிலும் தடுக்கப்பட்டதாகும். இஸ்லாம் இவற்றை வன்மையாகக் கண்டிக்கிறது.

### பிற மதத்தவர்களுடனான உறவு

முழு மனித குலமும் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வழித்தோன்றலாகும் என்பது எமது நம்பிக்கையாகும். எனவே, மனிதர்கள் அனைவரும் இனம், மதம், மொழி, முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதவர்கள் என்ற வித்தியாசங்களைக் கடந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மற்றவரின் உயிர், பொருள், மானம், உரிமை ஆகியவற்றை முறையாக பாதுகாத்து, அவரவருக்கு நாட்டில் கொடுக்கப்பட்டுள்ள மத உரிமைகளை மதித்து, ஒருவருக்கொருவர் புரிந்துணர்வோடும் ஒத்துழைப்போடும் வாழ வேண்டும் என்பதே இஸ்லாத்தின் வழிகாட்டலாகும்.

இஸ்லாம் எந்த ஆட்சிக்குக் கீழும் வாழ்வதற்கு தடைசெய்யவில்லை. முஸ்லிம்கள் எந்த ஆட்சிக்குக் கீழும் வாழ்வதற்கு முடியும். முஸ்லிம்கள் இஸ்லாமிய ஆட்சிக்குக் கீழ் மட்டுமே வாழ வேண்டும் என்பது முற்றிலும் தவறான கொள்கையாகும். எந்த ஆட்சிக்குக் கீழ் வாழ்ந்தாலும் அல்லாஹ்வினால் ஏவப்பட்டுள்ள ஏவல்களை (பர்ளுகளை) நிறைவேற்றுதல் வேண்டும். அவனால் தடுக்கப்பட்டுள்ள (ஹராமான)வற்றை விலகி நடத்தல் வேண்டும்.

### வழிதவறிய சிந்தனைகள்

அகிலத்தாருக்கு ரஹ்மத்தாக அனுப்பப்பட்ட எங்களது உயிரிலும் மேலான இறுதித் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கண்ணியத்திற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் நடத்தல்.

- ✦ முஸ்லிம் உம்மத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹதீஸ்களை மறுத்தல்.
- ✦ ஸஹாபாக்கள் விடயத்தில் அவமரியாதையாக நடந்துகொள்ளல்.
- ✦ இமாம்கள் மற்றும் மார்க்க அறிஞர்களை அவமதித்தல் மற்றும் அவர்களின் வழிகாட்டல்களைப் புறக்கணித்தல்.
- ✦ மத்ஹப்களைப் புறக்கணிப்பதோடு அவற்றைப் பின்பற்றுவதை வழிகேடாகக் கருதுதல்.
- ✦ மார்க்கத்தின் உட்பிரிவு விவகாரங்களில் தமது கருத்துக்கு முரண்படுவோரை ஏற்க மறுத்து அவர்களை வழிகேடர்கள் எனக் கருதி அவர்களின் உரிமைகளை மறுத்தல்.
- ✦ நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு, அமைதி ஆகியவற்றுக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் நடந்துகொள்ளல், அதற்குப் பிறரைத் தூண்டுதல்.
- ✦ பிற மதங்களை நிந்தித்தல், முஸ்லிம்கள் இஸ்லாமிய ஆட்சிக்குக் கீழ் மட்டுமே வாழ வேண்டும் அல்லது ஓர் இஸ்லாமிய ஆட்சியை நிலைநாட்டுவதே இஸ்லாத்தின் அடிப்படை என்ற கொள்கையைக் கொண்டிருத்தல்.
- ✦ 'அல்வலாஃ வல்பராஃ' என்பதை தவறாக விளங்கி, முஸ்லிம்கள் முஸ்லிம்களுடன் மாத்திரமே நல்லுறவு கொள்ள வேண்டும் என்பதுடன் முஸ்லிமல்லாதவர்களுடன் நல்லுறவு கொள்ளக்கூடாது என்ற தவறான சிந்தனையைக் கொண்டிருத்தல்.

மேற்கூறப்பட்டவைகள் வழிதவறிய சிந்தனைகளாகும். அவற்றை வஹ்ஹாபிஸம் என்ற பெயரிலோஅல்லதுவேறெந்தப்பெயர்களிலோ அழைக்கப்பட்டாலும் அவையனைத்தையும் ஜம்இய்யா முற்று முழுதாக நிராகரிக்கின்றது. (11ஆம் பக்கம் பார்க்க)

# மார்க்க விவகாரங்களில் இலங்கை முஸ்லிம்களுக்கான...

(10ஆம் பக்கத் தொடர்)



### இஸ்லாமிய போதனைகளை முன்வைக்கும் போது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள்

- அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தின் கோட்பாட்டின் வரையறைக்கு உட்பட்டிருத்தல்.
- அன்பு, சகோதரத்துவம், மனிதநேயம் போன்றவற்றை வளர்க்கக்கூடிய விதத்தில் அமைந்திருத்தல்.
- இந்நாட்டின் ஜனநாயக விழுமியங்களை மதித்து செயற்படக்கூடியதாக இருத்தல்.
- பிறரின் கௌரவம், மானம் பாதுகாக்கப்படும் விதத்தில் அமைதல்.
- முஸ்லிம்கள் மற்றும் ஏனைய சமூகங்களுக்கு இடையில் விரோதங்களையும் குரோதங்களையும் உண்டாக்கும் விதத்தில் அமையாதிருத்தல்.
- கருத்துத் திணித்தலோ வற்புறுத்தலோ இன்றி மிருதுவான முறையிலும் நளினமான முறையிலும் அழகிய உபதேசங்களின் மூலமும் மார்க்கத்தை முறையாகவும் நடுநிலையாகவும் போதித்தல்.
- மார்க்க விவகாரங்களில் மேற்கூறப்பட்ட ஜம்இய்யாவின் நிலைப்பாடுகளை ஏற்று செயற்படல்.

மேற்கூறப்பட்ட அடிப்படைகளில் சமூகத்திலுள்ள இஸ்லாமிய போதனை முறைகள் அமைய வேண்டுமென ஜம்இய்யா வலியுறுத்துகின்றது.

மேற்கூறிய விடயங்களை இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவரும் ஏற்று கடைப்பிடிக்குமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கேட்டுக்கொள்கின்றது. மேலும், அனைத்து முஸ்லிம்களும் தமக்கு மத்தியிலும் ஏனைய சமூகங்களுடனும் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து அன்பு, இரக்கம், நடுநிலை மற்றும் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடித்து ஒரு முன்மாதிரியான சமூகத்தை உருவாக்க ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றது.

அத்துடன் இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் போதனைகளின் அடிப்படையில் வாழுகின்ற, மார்க்கத்தின் மேம்பாட்டிற்கும் சமூகத்தினதும் தேசத்தினதும் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்கின்ற, ஒரு கட்டுக்கோப்பான முன்மாதிரி முஸ்லிம் சமூகத்தை உருவாக்க ஆலிம்கள், சமூகப் பிரதிநிதிகள், முக்கியஸ்தர்கள், மஸ்ஜித் நிர்வாகிகள், ஊர் தலைமைகள், கல்விமான்கள், துறைசார்ந்தவர்கள், சிவில் அமைப்புக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வேண்டிக் கொள்கின்றது.

> **இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் போதனைகளின் அடிப்படையில் வாழுகின்ற, மார்க்கத்தின் மேம்பாட்டிற்கும் சமூகத்தினதும் தேசத்தினதும் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்கின்ற, ஒரு கட்டுக்கோப்பான முன்மாதிரி முஸ்லிம் சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

அஷ்ஷைக் எம்.ஐ.எம். ரிஸ்வி (முஃப்தி) தலைவர், அஷ்ஷைக் ஏ.சீ. அகார் முஹம்மத் (பிரதித் தலைவர் ), அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித் (பொதுச் செயலாளர்), அஷ்ஷைக் ஏ.எல்.எம். கலீல் ( பொருளாளர்) , அஷ்ஷைக் எச். உமர்தீன்( உப தலைவர் ), அஷ்ஷைக் ஏ.எல்.எம். ரிழா (உப தலைவர் ), அஷ்ஷைக் எம்.ஜே. அப்துல் ஹாலிக் (உப தலைவர் ), அஷ்ஷைக் ஐ.எல்.எம். ஹாஷிம் சூரி ( உப தலைவர்), அஷ்ஷைக் எஸ்.எச். ஆதம்பாவா( உப தலைவர்), அஷ்ஷைக் எம். எஸ்.எம். தாஸிம் (உதவிச் செயலாளர்), அஷ்ஷைக் எம்.எம். முர்ஷித் (உதவிச் செயலாளர் ), கலாநிதி அஷ்ஷைக் அஹ்மத் அஸ்வர் (உதவிப் பொருளாளர்), அஷ்ஷைக் எம்.எல்.எம் இல்யாஸ் (நிறைவேற்றுக் குழு உறுப்பினர், செயலாளர் பத்வாக் குழு ).

- நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களான; அஷ்ஷைக் எம்.எப். எம். பாழில், அஷ்ஷைக் கே.எம். முக்ஸித் அஹ்மத், அஷ்ஷைக் எம்.எம் ஹஸன் பரீத், அஷ்ஷைக் எஸ்.எல். நவ்பர், அஷ்ஷைக் எஸ். ஏ.எம். ஜஃபர், அஷ்ஷைக் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம், அஷ்ஷைக் எம்.இஸட்.எம். நுஃமான், அஷ்ஷைக் எம்.எப்.எம். பரூத் , அஷ்ஷைக் எம்.ஐ.எம் சுஜப், அஷ்ஷைக் எம்.எஸ்.எம் நாழிம்,அஷ்ஷைக் ஏ.எச். இஹ்ஸானுத்தீன்,
- நிறைவேற்றுக் குழு மற்றும் பத்வாக் குழு உறுப்பினர்களான; அஷ்ஷைக் முப்தி எம்.எச்.எம். யூசுப், அஷ்ஷைக் ஏ.ஸி.எம். பாழில், அஷ்ஷைக் எம்.கே. அப்துர் ரஹ்மான், அஷ்ஷைக் ஏ.ஆர். அப்துர் ரஹ்மான், அஷ்ஷைக் எம்.எச்.எம். புர்ஹான், அஷ்ஷைக் கே.எம். ஸகீ அஹ்மத், கலாநிதி அஷ்ஷைக் எம்.எல்.எம். முபாரக், அஷ்ஷைக் எம்.ஏ.ஏ.எம். பிஷ்ர், அஷ்ஷைக் எம்.டி.எம் ஸல்மான் (உதவிச் செயலாளர், பத்வாக் குழு) அஷ்ஷைக் ஏ.எம். ஆஸாத் ( உதவிச் செயலாளர், பத்வாக் குழு)
- பத்வாக் குழு உறுப்பினர்களான; அஷ்ஷைக் எம்.எச்.எம். யஹ்யா, அஷ்ஷைக் முப்தி கே.எச்.எம்.ஏ. மபாஸ், அஷ்ஷைக் முப்தி எம்.எப்.எம் ரியாழ், அஷ்ஷைக் முப்தி ஏ.எம். நஜ்முத்தீன், அஷ்ஷைக் ஏ.ஜி. ஹாமித் ஸதகா, அஷ்ஷைக் எம்.இஸட்.எம் அமீனுத்தீன் , அஷ்ஷைக் எஸ்.எச்.எம். இஸ்மாஈல், கலாநிதி அஷ்ஷைக் எம்.இஸட்.எம் முபீர், அஷ்ஷைக் முப்தி ஏ.ஆர் அமானுல்லாஹ், அஷ்ஷைக் எம்.ஏ.எம். ழுபர், அஷ்ஷைக் முப்தி என்.எம். இர்ஸான், அஷ்ஷைக் ஏ.எம். ஹாரூன், அஷ்ஷைக் முப்தி ஜாவித் இக்பால், அஷ்ஷைக் எம்.என்.எம் இர்ஷாத், அஷ்ஷைக் நாகூர் ளரீப், அஷ்ஷைக் எம். என். அப்ராஸ், அஷ்ஷைக் எம்.எப். எம். ரம்ஸி, அஷ்ஷைக் எம்.ஐ. ஹஜ்ஜி முஹம்மத், அஷ்ஷைக் எம்.ஐ. கலீல் ரஹீம், அஷ்ஷைக் முப்தி எம்.எம். ழியாஉத்தீன், அஷ்ஷைக் முப்தி எம்.ஏ. எம் அன்பாஸ், அஷ்ஷைக் எம். ஸவ்மி கரீம், அஷ்ஷைக் ஏ.எச்.எம். அக்ரம் , அஷ்ஷைக் ஏ.ஜே.எம். மக்தூம், அஷ்ஷைக் எம்.எம்.ஏ இம்தியாஸ், அஷ்ஷைக் எஸ்.எஸ்.எம். ரூமி, அஷ்ஷைக் எம்.எச்.எம். ஹுதைபா மற்றும் அஷ்ஷைக் ஏ.ஆர். றமீன் ஆகியோர் இந்த ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.






# ஜீனியஸ்பார்க் தனியார் கல்வி நிறுவனத்தின் கல்வி சுற்றுலா











பாணந்துறை ஹேனமுல்லை ஜீனியஸ்பார்க் தனியார் கல்வி நிறுவனத்தின் மாணவர்கள் நேற்று முன்தினம் கொழும்புக்கு மேற்கொண்ட கல்விச் சுற்றுலாவில் கோள் மண்டலம், நூதனசாலை, சுதந்திர சதுக்கம் மற்றும் பத்திரிகையின் தாய் வீடான லேக் ஹவுஸ் நிறுவனம் ஆகியவற்றை பார்வையிட்ட போது பிடிக்கப்பட்ட படங்கள்... (படங்கள் : சுதத் மலவீர)







# தலவாக்கலை ஆசிரியர் உயிரிழப்பு; குற்றவாளிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை

## குடும்பத்தினருக்கு நஷ்டஈடு







**ஹற்றன் விசேட, தலவாக்கலை குறூப், ஹற்றன் சுழற்சி நிருபர்கள்**

தலவாக்கலை பகுதியில் முறையற்ற விதத்தில் 200 வருடம் பழமை வாய்ந்த ஆலமரத்தை வெட்டி ஒருவரின் உயிரிழப்புக்கு காரணமான நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தோட்ட உட்டகட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தலவாக்கலை லிந்துலை நகர சபை மண்டபத்தில் அவசர கூட்டமொன்று (23)நேற்று ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜீவன் தொண்டமான் தெரிவிக்கையில்,

இது போன்ற சம்பவங்கள் இனியும் நடைபெறா வண்ணமும், இச்சம்பவம் குறித்து உடனடியாக விரிவான அறிக்கையொன்றினை தனக்கு சமர்ப்பிக்குமாறும் ஆசிரியரின் மரணத்திற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் தகுந்த தண்டனையினை பெற்றுக்கொடுக்க துரித கதியில் நடவடிக்கைகளை எடுக்குமாறும் பணித்துள்ளார். உயிரிழந்த ஆசிரியர் வேலுசாமி மகேஸ்வரன் இப்பகுதியில் ஒரு பிரசித்தி பெற்ற ஆசிரியர். ஆசிரியரின் அகால மரணம் எம்மை துயரத்துக்குள்ளாக்கியது மட்டுமல்லாமல் மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவரின் குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன். இது போன்ற அபாயகரமான சம்பவங்கள் மலையகத்தில் இனி ஒரு போதும் நிகழாத வண்ணம் இதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் உறுதியளித்துள்ளார். அவரின் இழப்பு முழு சமூகத்திற்குமான இழப்பாகும். வீதியில் ஒரு பாதுகாப்பும் இல்லாமல் மரம் ஒன்றினை வெட்டியது பாரிய குற்றமாகும். இதனுடன் சம்பந்தபட்ட சந்தேக நபர்களை 24 மணித்தியாலயத்துக்குள் கைது செய்ய நுவரெலியா மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளேன். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளேன் என்றார்.

அதனை தொடர்ந்து தலவாக்கலை லோகி தோட்ட இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள வேலுசாமி மகேஸ்வரனின் பூதவுடலுக்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். அதே வேளை இறந்த ஆசிரியரின் குடும்பத்தாருக்கு தனது இரங்கலை தெரிவித்ததோடு லோகி தோட்ட மக்களுக்கு ஆறுதலும் தெரிவித்தார். பின்னர் விபத்து இடம்பெற்ற இடத்திற்கு சென்று அதனை பார்வையிட்டார். 200 வருடம் பழமை வாய்ந்த இந்த ஆலமரத்தை வெட்டுவதற்கு யார் அனுமதி வழங்கியது? இதெல்லாம் எமது அடையாளங்கள் இதனை அழிப்பதற்கு யார் அனுமதி வழங்கியது? போன்ற கேள்விகளை உயர் அதிகாரிகளிடம் தொடுத்து ஆதங்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் இரண்டு பெண்கள் உட்பட ஐவரை லிந்துலை பொலிஸார் (22) கைது செய்தனர்.

தலவாக்கலை லோகி மல்லியப்பு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள், ஆலமரத்தினை வெட்டிய நானுஓயா பகுதியைச் சேர்ந்த இருவர் மற்றும் மரம் வெட்டுவதற்கு ஒப்பந்தம் பெற்ற நுவரெலியா பகுதியைச் சேர்ந்த ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் (22) நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது சந்தேக நபர்களை எதிர்வரும் 28ம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பசறை இலக்கம் 02 பாடசாலை கட்டடம் மறுசீரமைப்பு

## செந்தில் தொண்டமான் நடவடிக்கை





ஹனிபா தோட்டத்திலுள்ள பசறை இலக்கம் 2 பாடசாலை கட்டடம் மறுசீரமைக்கப்பட்டு இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமானினால் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை கட்டடம் முற்றாக சேதமடைந்திருந்த நிலையில் செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்தை புனரமைத்து தருமாறு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மஹவில தோட்ட ஸ்ரீ ராமர் ஆலயத்தில் திருட்டு

**கம்பளை நிருபர்**



கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹவில தோட்டத்தில் ஸ்ரீ ராமர் ஆலயத்தில் நேற்று மதியம் ராமர் சிலை காணாமல் போயுள்ளது.

மஹவில ஸ்ரீராமர் ஆலயத்தில் சில நாட்களுக்கு முன்னர் தான் கும்பாபிஷேகம் நடைபெற்று புதிதாக ராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த சிலையே இவ்வாறு காணாமல் போயுள்ளது.

நேற்று மதியம் மஹவில தோட்டத்திலுள்ள பக்தர் ஒருவர் விளக்கு ஏற்றுவதற்காக கோவிலுக்கு சென்று பார்த்த போது திடீரென சிலை காணாமல் போயிருப்பதை அவர் கண்டுள்ளார்.

சிலை கொண்டு வந்து தற்போது நாற்பது நாட்களே ஆகின்றது .

கோவிலின் கூரையை கழற்றி அதற்கு உள்ளே இறங்கியே சிலை திருடப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர்களை இனங்கண்டு கொள்ளாமல் இருப்பதற்காக கோவில் முன்னால் மிளகாய் தூளை வீசியவாறு சந்தேக நபர்கள் சென்றுள்ளனர். கோவில் நிர்வாகம் கம்பளை பொலிஸ் நிலையத்தில் இதுதொடர்பில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து கம்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





மாத்தளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அங்கந்த தோட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப்பணிகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான நாலக்க கொட்ட கொட நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

படம்: மாத்தளை சுழற்சி நிருபர்

# ஆசிரிய உதவியாளர்களுக்கு விரைவில் நியமனம்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**



பதுளை மாவட்டத்தில் இதுவரையில் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படாத 271 ஆசிரியர் உதவியாளர்களுக்கும், அடுத்த மாதம் இறுதிக்குள் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் என ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அம்பன் வெல உறுதியளித்துள்ளார்.

பதுளை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பதுளை அரச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. அக்கூட்டத்தின் போதே, ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அம்பன் வெல மேற்படி உறுதிமொழியை வழங்கினார்.

இக்கூட்டத்தின் போது, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார், இதுவரையில் ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்படாத 271 ஆசிரியர் உதவியாளர்கள் குறித்து, தமது முன்மொழிவை முன்வைத்தார். அதற்கு பதிலளிக்கும் வகையில், மாகாண கல்வியமைச்சின் செயலாளர் மேற்படி உறுதிமொழியை வழங்கினார். இதுதொடர்பில் அ. அரவிந்தகுமார் எம்.பி தொடர்ந்து தெரிவிக்கையில், கடந்த 2015ஆம் ஆண்டு 3963 பேருக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்கள் வழங்கப்பட்டன. ஆறாயிரம் ரூபா மாத சம்பளம் என்றடிப்படையிலேயே, இந்நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அத்துடன் இவ் உதவி ஆசிரியர்கள் இரு வருடங்களுக்குள் ஆசிரிய பயிற்சிகளை நிறைவு செய்திருக்க வேண்டும் அல்லது பல்கலைக்கழக பட்டங்கள் பெற்றிருக்க வேண்டும். இவைகள் இரண்டில் ஏதாவது ஒன்றினை நிறைவு செய்திருக்க வேண்டுமென்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டிருந்தது. அந்நிபந்தனை பூர்த்தி செய்யப்பட்டிருப்பின், அவர்கள் நிரந்தர ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்படுவரென்றும், ஏற்கனவே வழங்கப்பட்ட நியமனப்

பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வகையில், ஆசிரிய உதவியாளர்கள் மூன்று வகைகளில் அரச நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ளனர். ஆசிரிய உதவியாளர்கள் ஒரு சிலர் பட்டதாரிகளாகியுள்ளனர். ஒரு சிலர் ஆசிரிய பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர். மேலும் ஒரு சிலர் பட்டங்களையும் பெற்று ஆசிரியர் பயிற்சிகளையும் நிறைவு செய்துள்ளனர்.

பதுளை மாவட்டத்தின் 925 பேருக்கு, ஆசிரியர் உதவியாளர்களாக 2015ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நியமனங்கள் வழங்கப்பட்டன. இவர்களில், 654 பேர் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

மிகுதி 271 பேர், இதுவரை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படவில்லை. ஆனாலும், அவர்கள் அனைவரும் மேற்கூறிய மூன்று வகைகளில் அரச நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ளனர். இவர்களுக்கு தற்போதைய நிலையில், மாதம் பத்தாயிரம் ரூபா சம்பளமே வழங்கப்பட்டு வருகின்றது. ஆகவே இவர்கள் ஆசிரிய சேவைக்கு உள்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

சேவைக்கு உள்வாங்கப்பட்டதும், அவர்கள் அரசின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யப்பட்ட தினம் தொடங்கி, ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட்ட தினம் வரையிலான, நிலுவைச் சம்பளமும் அவர்களுக்கு வழங்கப்படும். இந்நிலுவைச் சம்பளம் இலட்சக்கான ரூபா என்ற வகையில் பெருந்தொகையாகவே அமைந்துள்ளது.

ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட்ட பெருந்தொகையானோர், இந்நிலுவைச் சம்பளங்களை பெற்றுமுள்ளனர். நான் இச்சபை அமர்வில் கூறுவது யாதெனில், இதுவரை ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்படாத 271 பேர், விடயத்தில், கூடிய அக்கறை செலுத்தி, அவர்களை ஆசிரிய சேவைக்கு உள்வாங்கும் படி கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவித்தார்.

# ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை விமர்சித்து அரசாங்கத்தை பலவீனப்படுத்த முடியாது

**கம்பளை தினகரன் நிருபர்**

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை மலினப்படுத்தி விமர்சிப்போர், அரசாங்கத்துக்கு இந்தக் கட்சி வழங்கும் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள வேண்டுமென, நுவரெலியா மாவட்ட அமைப்பாளரும் மஸ்கெலிய பிரதேச சபையின் உப தவிசாளருமான பெரியசாமி பீரதிபன் தெரிவித்தார். கம்பளை நகரில் ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று கருத்து தெரிவித்த அவர், அரசாங்கத்திற்கு முதுகெலும்பாக செயற்படுவது ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை இலக்கு வைத்து சிலர், எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். இது வேதனை தரும் விடயமாகும்.

இந்த அரசாங்கம் உருவாகுவதற்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் செயற்பட்ட சிலரும் இவ்வாறு விமர்சிக்க முற்பட்டுள்ளனர். இவ்வாறானவர்களுக்கு கடந்த காலத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இந்நிலைமை ஏற்பட்டிருக்காது. இந்த அரசாங்கத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி செய்துள்ள உடன்படிக்கைகள் சிலவும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களுக்கு பிரதேச சபையில் கூட நிதி ஒதுக்கப்படுவதில்லை என்றும் அவர் கூறினார்.

# கிழக்கின் குரல்



## கல்முனை மாநகர சபை கணக்காளராக நியமனம்



(கல்முனை விசேட நிருபர்)

கல்முனை மாநகர சபையின் புதிய கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ள கே.எம்.றியாஸ், செவ்வாய்க்கிழமை (22) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சார் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம்.ஆரிப் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

கடந்த சில வருடங்களாக கல்முனை மாநகர சபையின் கணக்காளராக கடமையாற்றி வந்த ஏ.எச்.தஸ்தீக், இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்தே, மஹாஓய வலயக் கல்வி பணிமனையில் கணக்காளராக கடமையாற்றி வந்த கே.எம்.றியாஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார். மருதமுனையைச் சேர்ந்த இவர், கடந்த 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை கணக்காளர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, 2016ஆம் ஆண்டு தொடக்கம் மஹாஓய வலயக் கல்வி பணிமனையின் கணக்காளராக கடமையாற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அரசாங்க அதிபர் தலைமையில்

# மட்டக்களப்பு மாவட்ட விவசாய குழு கூட்டம்

(மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்கள்)



மட்டக்களப்பு மாவட்ட விவசாய குழுக்கூட்டம் அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே. கருணாகரன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (22) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின்போது மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி, வங்கிகள் ஊடாக குறைந்த வட்டியுடனான கடன் வசதிகளை அரச வங்கிகள் ஊடாக பெற்றுக் கொடுப்பது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், நீர்ப்பாசனம் தொடர்பாக விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகள், தேசிய உரச் செயலகத்தினால் விவசாயிகளுக்கும், சேதனைப்பசளை உற்பத்தியாளர்களுக்கும் வழங்கப்படவுள்ள சலுகைகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கடந்த போகத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான விவசாய கமநல காப்புறுதி சபையின் ஊடக வழங்கப்படவுள்ள நட்ட ஈட்டுக் கொடுப்பனவு தொடர்பாகவும், 2022 இற்கான சிறுபோக பயிர்ச்செய்கைக்கான கால அட்டவணை தயாரிப்பது தொடர்பாகவும், விவசாயிகள் தொடர்பான ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டு அவற்றிற்கான தீர்வுகளும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள்சார் அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில், மட்டக்களப்பு மாவட்டம் பசுமை புரட்சி காண வேண்டும் அதுவே எமது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நஞ்சற்ற, ஆரோக்கியமான உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் அதற்காக இயற்கைப் பசளை உற்பத்தியை அதிகரிக்க அனைவரும் ஒத்துழைப்பதுடன், இயற்கை உரப்பாவனையை முழுவதுமாக நடைமுறைப்படுத்த அனைத்து விவசாயிகளும் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டுமென அவர் இதன்போது கேட்டுக் கொண்டார்.

## இயற்கை உரப் பாவனை தொடர்பன விழிப்புணர்வு



(மூதூர் தினகரன், கந்தளாய் தினகரன் நிருபர்கள்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தில் இயற்கை உரத்தை பயன்படுத்தி விவசாய நடவடிக்கையை மேற்கொள்ளுதல் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு, செவ்வாய்க்கிழமை (22) இலங்கை இராணுவத்தின் கட்டைபறிச்சான் 223 படைப் பிரிவினரால் நடாத்தப்பட்டது.

மூதூர் விவசாய அபிவிருத்தி திணைக்களத்தில் இடம்பெற்ற இச்செயலமர்வில், உரப்பாவனையை அதிகரித்தல், இயற்கை உரத்தினை கொண்டு எவ்வாறு விவசாய செய்கைகளை மேற்கொள்வது, கடந்த வருடத்தில் இயற்கை உரத்தின் மூலம் நாட்டின் வருமானம் மற்றும் விதைகளின் தெரிவு போன்ற ஆழமான ஆலோசனைகளும் ,வழிகாட்டல்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், கட்டைப்பறிச்சான் இராணுவ கட்டளை அதிகாரி, பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரி, விவசாய திணைக்கள அதிகாரிகள், விவசாய காப்புறுதிக்கு பொறுப்பான அதிகாரி, மூதூர் வர்த்தக சங்க தலைவர், விவசாய சம்மேளன தலைவர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தரின் கடின முயற்சி நமக்கு சிறந்த பாடம்

### மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் புவனேந்திரன்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தரின் கடினமுயற்சி நமக்கு சிறந்த ஒரு பாடமாகும் என மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் தெரிவித்தார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் 10வது உபவேந்தர் வல்லிபுரம் கனகசிங்கத்தை கௌரவிக்கும் நிகழ்வு கிரான்குளத்தில் திங்கட்கிழமை (21) நடைபெற்றது.

கிரான்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த கிழக்கு பல்கலைக்கழகத்தின் 10வது உபவேந்தர் வல்லிபுரம் கனகசிங்கத்திற்கான கௌரவிப்பு வைபவம் கிரான்குளம் பிரதேசத்தில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் சி.புவனேந்திரன் தலைமையில் இடம் பெற்றது.

இங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், பேராசிரியரின் கடினமுயற்சி எமக்கான ஒரு பாடமாகும். இக் கௌரவிப்பால் அனைவரும் மகிழ்வடைகின்றோம். உபவேந்தரின் பணி மாவட்டத்திற்கும் நாட்டுக்கும் பயனளிக்க வேண்டும் அவர் சிறப்பான சேவையாற்றுவார் என்பது திடமாகும்.

சாதாரண குடும்பத்தில் பிறந்த பேராசிரியர் கனகசிங்கம், கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று நகரப் பாடசாலையில் வர்த்தகப் பிரிவில் கற்று பல்கலைக்கழகம் சென்று உதவி விரிவுரையாளராக, விரிவுரையாளராக, பீடாதிபதியாக, திருகோணமலை வளாக முதல்வராக பணியாற்றி தற்போது பேராசிரியராக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 10 வது உபவேந்தராகியமை எமது கிராமம் பெருமையடைவதுடன், இவ்விழாவை எனது தலைமையில் கிராம அமைப்புக்களை ஒன்றிணைத்து நிறைவேற்றுவதிலும் மகிழ்வடைகின்றேன்.

எதிர்காலத்தில் இவரைப்போல் கல்விமான்கள் பலரை நாம் காண வேண்டும் அதற்கான ஊகக்கப்படுத்தலாகவும் இந்நிகழ்வு அமைகின்றது என தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் தி.அமலநாதன் அவர்களால் உபவேந்தர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

## சாரணர் இயக்க தலைவர் பேடன் பவுலின் 165வது ஜனன தின நிகழ்வு



மட்டக்களப்பு விசேட நிருபர்

சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவர் பேடன் பவுலின் 165வது ஜனன தின நிகழ்வுகள் அன்னாரின் சிலை அமைக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு மாநகர சபையின் நீடூற்றுப் பூங்கா வளாகத்தில் செவ்வாய்க்கிழமை (22) நடைபெற்றது.

முதலில் சாரணர் இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஆணையாளர் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பேடன் பவுலின் சிலையின் கழுத்திற்கு ஆணையாளர் பட்டியை அணிவித்து மரியாதை செலுத்தினார். சர்வமத நிகழ்வைத் தொடர்ந்து முன்னாள் சாரணர் இயக்கத்தின் மாவட்ட ஆணையாளர் ஏ.இருதயநாதன், சமூகத்தின் மறுமலர்ச்சிக்காக பேடன் பவுலின் அர்ப்பணிப்பு, தியாகம் மற்றும் சமூக சேவைகளை வெளிப்படுத்தியதோடு, மாணவர்கள் சமூக விழுமியங்களைக் கடைப்பிடித்து நாட்டிற்கும் சமூகத்திற்கும் நற்பெயரை தோற்றுவிக்கும் சிறந்த பிரஜைகளாக மிளிர வேண்டும் என தனது உரையில் தெரிவித்தார்.

## கோரக்கர் அறநெறி பாடசாலை திறப்பு விழா



(காரைதீவு குறூப் நிருபர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கோரக்கர் அறநெறிப் பாடசாலைக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதியுதவியுடனும் சிவனருள் பவுண்டேசன் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட அறநெறிப் பாடசாலை கட்டடமானது ஞாயிற்றுக்கிழமை (20) திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர் எஸ். தினேஸ்குமார் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீஸன் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம். எல். தாஸிம், சிவனருள் பவுண்டேசனுடைய தலைவர் கலாநிதி அனுசியா, சேனாதிராஜன், செயலாளர் வே. வாமதேவன், பொருளாளர் க. ஜனாத்தனன், மாவட்ட இந்துசமய கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி சம்மாந்துறை பிரதேச செயலக இந்துக் கலாசார உத்தியோகத்தர் திருமதி க. ஸ்ரீபிரியா, பாடசாலை அதிபர் எஸ். இளங்கோபன் மற்றும் ஆலய உபசெயலாளர் வி.மோகன், ஆலய நிர்வாகத்தினர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள்,ஆசிரியர்கள், பெற்றோர்கள், முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், மாணவர்களுக்கு சிவனருள் பவுண்டேசனால் பரிசுகள் வழங்கப்பட்டது.

## மூதூர் பொது சந்தை வீதியில் வாகன நெரிசல்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பொது சந்தை முன் வீதி இரு பக்கமாக மோட்டார் வாகனங்கள் நிறுவத்தப்படுவதால் பெரும் நெருசலுக்கு உள்ளாகி வருவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதி வழியாக பிரதேச செயலகம், கல்வி அலுவலகம், வங்கி, வைத்தியசாலை மற்றும் நீதிமன்றம் உள்ளிட்ட பல்வேறு அலுவலகங்களுக்கு மக்கள் பயணிக்கின்றனர். இதேவேளை சந்தை கட்டடத் தொகுதி அமைந்துள்ள கடைகளுக்கு முன்னுள்ள வீதி இரு பகுதிகளிலும், வாகனங்கள் கொண்டு வருபவர்கள் தொடர்ச்சியாக நீண்ட நேரம் தமது தேவைக்காக நிறுத்தி வருவதால், பகல் வேளைகளில் இவ்விடத்தில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதாக சுட்டிக் காட்டுகின்றனர்.

## சம்மாந்துறை அல்–அமீர் வித்தியாலயத்துக்கு விஜயம்



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

சம்மாந்துறை அல்அமீர் வித்தியாலய அதிபர் ஐ.எல்.எம்.சலீமின் அழைப்பில் பொதுஜனபெரமுன கட்சியின் கல்முனைத் தொகுதி செயற்பாட்டாளர் றிஸ்லி முஸ்தபா பாடசாலைக்கு விஜயம் செய்து பாடசாலை குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன், அதிபர் காரியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலிலும் கலந்துகொண்டார்.

இதன்போது பாடசாலை அதிபரினால் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பாடசாலை பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், அபிவிருத்தி குழு பிரதிநிதிகள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## கிழக்கு கல்வி பணிப்பாளர் நாளை கல்முனைக்கு விஜயம்

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் நாளை (24) கல்முனை வலயக் கல்வி அலுவலகத்துக்கு வருகை தரவுள்ளதோடு, மாலை இடம்பெறும் வருட இறுதி ஒன்றுகூடல் நிகழ்விலும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

மாகாண கல்விப் பணிப்பாளருக்கு மகத்தான வரவேற்பு நலன்புரிச் சங்கத்தால் அளிக்கப்பட விருக்கிறது.

வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், இடமாற்றம் பெற்றுச் சென்றோருக்கான ஒய்வுநிலை பெற்றவர்களுக்கான பாராட்டும் பரிசு வழங்கலும் இடம்பெறவுள்ளதாக, நலன்புரிச் சங்க பொருளாளரும் வலய கணக்காளருமான வை.ஹபீபுல்லாஹ் தெரிவித்தார். கிராமிய மணங்கமழும் கலை கலாசார நிகழ்வுகள் கல்விசார் கல்விசாரா உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பங்களிப்புடன் இங்கு மேடையேற்றப்பட விருக்கின்றன.

நிகழ்வின் கௌரவ அதிதியாக மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர்.என்.எம்.றபீக் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா காரணமாக தடைபற்றிருந்த வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வுகள் தற்போது கல்முனை வலய அரச அலுவலகங்களில் இடம்பெற்று வருகின்றன.



அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்டத்தில் சாரணர் பயிற்சி கலைக் கூறு ஒன்று முடித்தவர்களுக்கான சின்னம் சூட்டு விழா கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் திங்கட்கிழமை (21) நடைபெற்றது. இந் நிகழ்வில் ஆசிரியர் ஒருவருக்கு சாரணர் பயிற்றுவிப்பாளர் சலாம் ஏ.எல்.ரீ.சின்னம் சூட்டுவதையும்,உதவி ஆணையாளர் எஸ்.தஸ்தகீர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்; பாலமுனை தினகரன் நிருபர்

## மட்டக்களப்பில் குரங்கு தொல்லை



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)


மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திலுள்ள பல கிராமங்களுக்குள் குரங்குகள் ஊடுருவுவதால் அப்பகுதிகளிலுள்ள மக்கள் பலத்த அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு வாவியோரத்தில் இருக்கும் காண்ணா பற்றைகளில் இரவில் தங்கியிருக்கும் இக்குரங்குகள், பகல் வேளைகளில் களுதாவளை, களுவாஞ்சிகுடி, தேத்தாதீவு, மாங்காடு, உள்ளிட்ட பல கிராமங்களுக்குள் உட்புகுந்து, அங்குள்ள தோடங்களிலுள்ள காய்கறிகளையும், வீடுகளில் உள்ள பழ மரங்களையும் சேதப்படுத்தி வருவதாக அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

எனவே தாம் பெரும் பிரயத்தனத்திற்கு மத்தியில் மேற்கொள்ளும், மேட்டுநில விவசாயச் செய்கையை குரங்குகளின் அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு தகுந்த பொறிமுறையை அமுல்ப்படுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# நகர்வலம்



## புனித மிஃராஜ் தின நிகழ்வுகள் வெள்ளவத்தை ஜும்ஆ பள்ளிவாசலில்

ருசைக் பாரூக்



புனித மிஃராஜ் தின நிகழ்வுகள் எதிர்வரும் (28) திங்கட்கிழமை இரவு வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கொழும்பு வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலுடன் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்ராஹீம் அன்சார் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி பிரதம அதிதியாகவும் ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில், பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், காதர் மஸ்தான் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பிப்பர்.

இந்நிகழ்வில், அரச உயர் அதிகாரிகள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் உலமாக்கள், ஜமாஅத்தார்கள் எனப்பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக திணைக்கள பணிப்பாளர் மொஹமட் அன்ஸார் தெரிவித்தார்.

## உள்நாட்டில் டின் மீன் உற்பத்தியை 100 சதவீதம் அதிகரிக்க நடவடிக்கை

### இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர

மாத்தறை தினகரன் நிருபர்



நாட்டின் பாவனையாளர்களின் டின்மீன் தேவையினை பூர்த்தி செய்ய டின்மீன் உற்பத்தியை நூற்றுக்கு நூறு சதவீதம் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கான சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளதாக மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மீன்பிடி இராஜாங்க அமைச்சருமான கஞ்சன விஜேசேக்கர நம்பிக்கை தெரிவித்தார்.

தெவிநுவர பிரதேசத்தில் (21) நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இராஜாங்க அமைச்சர் மேலும் பேசுகையில், கடந்த ஆண்டு டிசம்பர் மாதமாகும் போது எமது நாட்டில் டின்மீன் உற்பத்தி 80 சதவீமதமாக அதிகரித்தது. தற்போது இதனை நூறு சதவீதமாக அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

நாம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் டின்மீன் அளவை 60 சதவீதமாக குறைத்து விட்டோம். இதனால் எமது நாட்டுக்கு வெளிநாட்டு செலாவணி மீதமாகி உள்ளது.

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டின் போது பாவனையாளர்களின் டின்மீன் தேவையினைப் பூர்த்தி செய்து உள்நாட்டில் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிட்டுள்ளேம். நியாயமான விலையில் பாவனையாளர்களுக்கு தட்டுப்பாடின்றி டின்மீனை விநியோகிக்க நடிவடிக்கை எடுத்துள்ளோம்.

தற்போது நாட்டிலுள்ள டின்மீன் தொழிற்சாலைகளையும் மீன்பிடி அமைச்சின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் இதன்போது தெரிவித்தார்.

## இந்து சமய கலாசார திணைக்கள வெளியீடுகளின் கண்காட்சி நிகழ்வு

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் புத்தகக் கண்காட்சி நிகழ்வு நல்லூர், ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் எதிர்வரும் 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்நிகழ்விலே, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடுகளின் கண்காட்சி நிகழ்வும் விசேட விலைக்கழிவுடன் கூடிய விற்பனையும் இடம்பெறவுள்ளது. பயனுள்ள இந்நிகழ்விற்கு அனைவரும் வருகை தந்து பயன்பெறுமாறு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் அழைப்பு விடுக்கின்றது.

புதிய நெல் விலை அறிமுகம்;

## உற்பத்தி செய்த நெல்லை சந்தைப்படுத்தல் சபைக்கு விற்பனை செய்ய தீர்மானம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய நெல் விலையின் காரணமாக விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு விற்பதற்கு முன்வந்துள்ளதாக அநுராதபுரம் நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிரதேச முகாமையாளர் ரீ.எம். நிமல் தென்னகோன் தெரிவித்தார்.

தற்போது அநுராதபுரம் மாவட்டத்தில் மழை நீர் மற்றும் சிறிய நீர்ப்பாசனத்தில் செய்கை பண்ணப்பட்ட நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது நெல்லுக்கான அதிக விலையை அரசாங்கம் வழங்குகிறது.

ஒரு கிலோ நாடு நெல்லுக்கு 90 ரூபாவும், ஒரு கிலோ சம்பா நெல்லுக்கு 92 ரூபாவும் , ஒரு கிலோ கீரி சம்பா நெல்லுக்கு 95 ரூபாவும் வழங்கப்படுகின்றன.

அதன்படி மேற்படி மாவட்டத்தில் பெப்ரவரி 14 ம் திகதி வரை 3300 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இம்முறை காலபோகத்தின் போது இம் மாவட்டத்தில் மாத்திரம் குறைந்த பட்சம் 40 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

விசேடமாக சிறு அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கும் நியமிக்கப்பட்டுள்ள முகவர்களினால் ஈர நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருவதுடன் அவற்றை உலர்த்தி நெல் சந்தைப்படுத்தும் சபையிடம் கையளிக்கும் வேலைத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஈர நெல்லை உலர்த்துவதற்கு மேலதிகமாக நான்கு ரூபாவும் பொதி செய்வதற்கு இரண்டு ரூபாவுமாக ஆறு ரூபா கொடுப்பனவை ஈரமான நெல்லை கொள்வனவு செய்யும் முகவர்களுக்கும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் செலுத்துகிறது.

விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்கு அநுராதபுரம் மாவட்டத்தில் 28 நெற் களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.



அநுராதபுரம் நகர பஸ் நிலையத்தின் இரண்டாம் கட்டம், 1100 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கான நிதி நகர அபிவிருத்தி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு அண்மையில் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன மற்றும் இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டபோது எடுத்த படம். படம்: கல்நேவ தினகரன் நிருபர்

## நொச்சியாகம விபத்தில் வயோதிபர் உயிரிழப்பு

கல்நேவ தினகரன் விசேட நிருபர்

அநுராதபுரம் நொச்சியாகம பிரதான வீதியில் நொச்சியாகம அந்தரவெவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 65 வயதுடைய நபர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக கோட்டத்திற்கு பொறுப்பான மோட்டார் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.மொகம்மட் நியாஸ் தெரிவித்தார்.

இச்சம்பவம் (22) இரவு 8 மணியளவில் இடம்பெற்றது. துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் ஒருவரின் பின்பக்கமாக வேகமாக மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் மோதுண்டமையினால் இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தினால் துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலைமையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த போது நேற்று (23) அதிகாலை மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## 'வட்சப்' ஊடாக பறவைகள் விற்பனை; இருவர் கைது

திறப்பனை தினகரன் நிருபர்

இரகசியமான முறையில் பறவைகளைப் பிடித்து 'வட்சப்' ஊடாக அவற்றை நாட்டின் பல பிரதேசங்களுக்கும் குறுந்தகவல் அனுப்பி பறவைகளை விற்பனை செய்து வந்ததாக கூறப்படும் சந்தேக நபர்கள் சிலரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

பொலன்னறுவை வன சீவராசிகள் அலுவலகம் ஒன்றுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய உரிய சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் கிளி, மைனா போன்ற பல்வகை பறவைகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"வட்சப் " ஊடாக இப் பறவைகள் நாட்டின் பல பிரதேசங்களுக்கும் விற்பனை செய்யப்பட்டு வந்ததாகவும் வன சீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொது போக்குவரத்துச் சேவைகள் ஊடாக வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, மாத்தளை உட்பட நாட்டின் பல பிரதேசங்களுக்கும் இவைகள் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ. 5000 போலி நாணயத்தாள் வைத்திருந்த நபர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் மூன்றினை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை மின்னேரிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மின்னேரிய எகேகனுவ பகுதியில் 22 ஆம் திகதி பகல் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் (5000/=) ரூபா போலி நாணயத்தாள்கள் மூன்றினை மின்னேரிய பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 38 வயதுடைய மின்னேரிய, எகேகனுவ, கிரிமெட்டியாவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபருக்கு போலி நாணயத்தாள்கள் யாரிடம் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளது என்ற விடயங்களை அறிந்து கொள்ளுவதற்காக வேண்டி மின்னேரிய பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## வெலிகம பகுதியில்; பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம்

வெலிகம தினகரன் நிருபர்

இதுவரை பூஸ்டர் தடுப்பூசியை செலுத்திக்கொள்ளாதவர்களுக்கு வசதியாக தினமும் தடுப்பூசியை விரும்பிய தினத்தில் செலுத்திக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.




வெலிகம நகர பிரதேச சுகாதார பிரிவினரால் இதனை ஏற்பாடு செய்துள்ளனர். தினமும் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை வெலிகம, வலான வைத்தியசாலையில் இதனை செலுத்திக்கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் பொது இடங்களுக்கு செல்வோர் மூன்று தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இதனை பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதனை கருத்திற்கொண்டு தடுப்பூசிகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதோர் உடனடியாக கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வெலிகம பகுதியில் பெரும்பாலானோர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கெண்டுள்ளனர். மூன்றாம் தடுப்பூசியான பூஸ்டரை செலுத்திக்கொள்ளாதோர் மிக விரைவில் சந்தர்ப்பத்தை தவர விடாமல் செலுத்திக்கொள்ளுமாறும் சுகாதார அதிகாரிகள் கேட்டுக் கொள்கின்றனர்.

## புத்தளத்தில்; உலகமே கொண்டாடும் நூறு கோடி மக்களின் எழுச்சி விழா





புத்தளம் தினகரன் நிருபர்

வருடாந்தம் பெப்ரவரி 14 ஆம் திகதி உலகமே கொண்டாடும் நூறு கோடி மக்களின் எழுச்சியை முன்னிட்டு, புத்தளம் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகம் விஷேட நிகழ்வு ஒன்றினை நடாத்தியது.

முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தின் 10 வருட கால சேவை நிறைவும் இதனோடு சேர்த்து அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வுகள் திங்கட்கிழமை (21) முழு நாளும் புத்தளம் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

காலை அமர்வில் 50 பெண்கள் ஓவியம் வரைதல் போட்டியில் கலந்து கொண்டு பெண்களின் மேம்பாடு தொடர்பாக ஓவியங்களை வரைந்து பரிசும் சான்றிதழும் பெற்றுக்கொண்டனர்.

மாலை அமர்வில், இலங்கையில் தனியார் சட்டம் மூலமாக ஏற்படும் வன்முறைகளைக் குறைக்க, தனியார் சட்டம் திருத்தியமைக்கப் படவேண்டும் என்பது இன்றைய தினத்தின் பிரகடனமாகும் என்பதை நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி ஜுவைரியா மொஹிதீன் இங்கு உரையாற்றும் போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் புத்தளம் பிரதேச செயலாளர், சிறுவர் மற்றும் பெண்கள் உத்தியோகத்தர், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர், புத்தளம் பொலிஸ் நிலையத்தின் பெண் பொலிஸ் பொறுப்பதிகாரி, சிவில் அமைப்பின் பிரதிநிதிகள், முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தின் முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், பெற்றார்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இசை நிகழ்வில் இரு குழுக்கள் மோதல்;

## தடுக்கச் சென்ற பொலிஸ் பரிசோதகரின் கையை கடித்த இராணுவ சிப்பாய்

### கல்நேவ பகுதியில் சம்பவம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அனுராதபுரம் ஹிரிபிட்டியாகம பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இசை நிகழ்வின் போது இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பை தடுப்பதற்கு சென்ற உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் கையை கடித்து காயப்படுத்தியதாக கூறப்படும் இராணுவ சிப்பாய் ஒருவரை கல்நேவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹோமாகம பகுதியைச் சேர்ந்த அவர் அரலகங்வில இராணுவ முகாமில் கடமையாற்றி வருபவராவார்.

ஹிரிபிட்டியாகம பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியின் போது பிரதான வீதியில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பை தடுப்பதற்கு கல்நேவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் எம்.பீ.ஹேரத் முயற்சித்த போது சந்தேக நபரான இராணுவ சிப்பாய் பரிசோதகரின் இடது கையை கடித்து காயப்படுத்தியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கடி காயத்திற்குள்ளான உப பொலிஸ் பரிசோதகர் கல்நேவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் கையை கடித்ததாக கூறப்படும் இராணுவ சிப்பாய் மற்றுமொரு குழுவினரின் தாக்குதலுக்குள்ளாகி பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்புடன் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சந்தேக நபரை தாக்கி காயப்படுத்தியதாக கூறப்படும் மீதெல்லேவ கல்நேவ பகுதியைச் சேர்ந்த 40 வயது நபர் ஒருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிகிச்சைக்கு பின்னர் சந்தேக நபரான இராணுவ சிப்பாய்க்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக பொலிசார் தெரிவித்தனர்.

## சேதன பசளை விவசாயம் பெரு வெற்றி; விவசாயிகள் மகிழ்ச்சி

திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுரம் திப்பட்டுவாவ பிரதேசத்தில் சேதன பசளையை பாவித்து விவசாயம் செய்யப்பட்ட வேளாண்மை செய்கை வெற்றியளித்துள்ளதாக அங்குள்ள விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இக்காலப் பகுதியில் இதன் அறுவடை செய்யும் வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இரசாயன பசளை பாவனைக்கு மாற்றமாக சேதன பசளையை மாத்திரம் பாவித்து இம்முறை செய்கை பண்ணப்பட்ட நெல் உற்பத்தி வெற்றியளித்துள்ளதாகவும், இதில் "பதராகும்" வெற்றுநெல்லின் விகிதம் குறைவடைந்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு சேதன பசளை பாவனையின் மூலம் செய்கை பண்ணப்பட்டு, அறுவடை செய்யப்படுவதை நேரில் கண்டறியும் நோக்கில் ராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இப்பகுதிக்கான விஜயம் ஒன்றை மேற் கொண்டிருந்தார். அடுத்து வரும் காலங்களில் சேதன பசளை பாவனை சம்பந்தமாக விவசாயிகளுக்கு பூரணமான விளக்கங்களை வழங்கி அதி கூடிய உற்பத்தியை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளதாகவும் இதன் போது தெரிவித்துள்ளார்.

# இந்திய செய்திகள்



# நேர்மையாளரை தோற்கடிப்பது பெருமை இல்லை

## தோல்வி குறித்து கமல் வருத்தம்



மக்களும் பல சமயங்களில் கூட்டாக சேர்ந்து தவறான முடிவுகளை எடுப்பார்கள் எனவும், வரலாறு நெடுக அதற்கு உதாரணங்கள் உண்டு என்றும் மக்கள் நீதி மய்யம் (ம.நீ.ம) தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் அதிகார பலம், பண பலம், கூட்டணி பலம், ஊடக பலம் கொண்டவர்களை எதிர்த்து தேர்தலில் போட்டியிட துணிந்த ம.நீ.ம வேட்பாளர்கள் அனைவருமே வெற்றியாளர்கள்தான். நீங்கள் போட்டியிட்ட வார்டுகளில் நீங்கள் வென்றதாகவே நினைத்து மக்கள் பணியை தொடருங்கள். உங்களை வெற்றி பெற செய்யாததை நினைத்து வருந்தும் அளவிற்கு சேவையாற்றுங்கள்.

பல இடங்களில் 50 சதவீதத்திற்கும் குறைவான வாக்காளர்களே தங்களது ஓட்டுகளை செலுத்தி இருக்கிறார்கள். கழகங்கள் போட்ட கள்ள ஓட்டுகளை கழித்தால், இன்னமும் கூட குறைவான சதவீத மக்களே இந்த தேர்தலில் பங்கேற்றிருப்பார்கள். தமிழகத்தில் நிகழும் ஆபாச அரசியலை பெரும்பான்மை மக்கள் விரும்பவில்லை என்பதையே இது காட்டுகிறது. நாம் பேச வேண்டியது அவர்களிடம்தான்.

'மக்கள் தீர்ப்பை ஏற்கிறோம்' என்பது ஒரு சம்பிரதாயமான வார்த்தை. அதை நான் சொல்ல விரும்பவில்லை. எங்களைப் போன்ற நேர்மையாளர்களை, அரசியலை பணம் குவிக்கும் தொழில்வாய்ப்பாக கருதாதவர்களை, வாக்குறுதி தந்துவிட்டு ஏமாற்றாதவர்களை, ஊழலற்ற வெளிப்படையான திறமையான நிர்வாகத்தின் மூலம் தமிழகத்தை சீரமைக்க நினைப்பவர்களை தோற்கடிப்பதில் உங்களுக்கு ஒரு பெருமையும் இல்லை. என் எஞ்சிய வாழ்க்கை தமிழக மக்களுக்குத்தான் என 4 ஆண்டுகளுக்கு முன் நான் அறிவித்தது வெறும் வாய்ஜாலம் இல்லை. இடைக்கால வெற்றி தோல்விகள் எங்களின் மக்கள் பணியை என்றுமே பாதித்ததில்லை. நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் முடிவுகளும் அதற்கு விதிவிலக்கல்ல.

# எதிர்க்கட்சிகளின் வாதங்களை மக்கள் முழுமையாக நிராகரித்துள்ளனர்

## முதல்வர் ஸ்டாலின்



எதிர்க்கட்சிகளையும், அவர்களின் வாதங்களையும் மக்கள் முழுமையாக நிராகரித்துள்ளனர்.

தேர்தல் அறிக்கை என்பது ஐந்தாண்டு திட்டமாகும். அதை எதிர்க்கட்சிகள் புரிந்து கொள்ள மறுக்கின்றன என்று முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர்,..

நாம் அனைவரும் இணைந்து நமக்கான நல்லதோர் தமிழகத்தை அமைப்போம். நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் திமுக கூட்டணி மகத்தான வெற்றியை பெற்றுள்ளது. மகத்தான வெற்றி என்பதை விட வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை பெற்றுள்ளது.

வெற்றிக்காக உழைத்த கூட்டணி கட்சியினர், தொண்டர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி.தமிழகத்தை முழுமையாக வென்றுள்ளது திமுக கூட்டணி. ஒரு கட்சியின் அரசாக இல்லாமல், இனத்தின் அரசாக செயல்படுகிறது

கூட்டணியின் ஒற்றுமை என்பது தேர்தல் உறவாக மட்டுமன்றி கொள்கை பாச உணர்வாக தொடர்வதால் தான் வெற்றி சாத்தியமானது. உங்களது அயராத உழைப்பாலும் பணியாலும் தான் இந்த வெற்றி சாத்தியமானது. திராவிட மாடல் ஆட்சிக்கு மக்கள் தந்த மணிமகுடம் தான் உள்ளாட்சி தேர்தலின் வெற்றி.

உள்ளாட்சி பிரதிநிதிகளின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் அனைத்தும் மக்களிடம் சென்றடைகிறதா என்பதை நேரடியாக கண்காணிப்பேன்.தி.மு.க., செல்வாக்கு மக்களிடம் அதிகளவு பெருகி வருவதை தேர்தல் முடிவு காட்டுகிறது. வெற்றியை வழங்கிய மக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்க வருவேன்.

சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கு:

# அமைச்சர் நவாப் மாலிக் கைது



சட்ட விரோத பணப்பரிமாற்ற வழக்கு தொடர்பாக மஹாராஷ்டிரா மாநில அமைச்சர் நவாப் மாலிக்கிடம் அமுலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர். விசாரணையின் முடிவில் நவாப் மாலிக் கைது செய்யப்பட்டார்.

மும்பை நிழல் உலக தாதா தாவூத் இப்ராஹிம் மற்றும் அவரது கூட்டாளிகளுடன் தேசியவாத காங்கிரஸ் கட்சி மூத்த தலைவரும், மஹாராஷ்டிரா மாநில அமைச்சருமான நவாப் மாலிக்,சட்ட விரோதமாக பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக புகார் எழுந்தது. இது தொடர்பாக அமுலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வந்தனர். நேரில் ஆஜராகும்படி அவருக்கு அழைப்பாணை அனுப்பி இருந்தனர்.

இந்நிலையில்,நேற்றுக் காலை 6 மணியளவில் நவாப் மாலிக் வீட்டிற்கு சென்ற அமுலாக்கத்துறையினர் விசாரணை நடத்தினர். பின்னர், அவரை அலுவலகம் அழைத்து சென்று அதிகாரிகள் காலை 8:30 மணி முதல் விசாரணை நடத்தினர். இதனை அவரது அலுவலகம் உறுதிப்படுத்தியது. இந்த நிலையில், நவாப் மாலிக்கை அமுலாக்கத்துறையினர் கைது செய்தனர்.

இதனையறிந்த தேசியவாத காங்கிரஸ் கட்சியினர் போராட்டம் நடத்தினர். அப்போது, மத்திய அரசு மற்றும் அமலாக்கத்துறையினருக்கு எதிராக போராட்டம் நடத்தினர்.

# வாக்களித்தால் மாணவர்களுக்கு 10 மதிப்பெண்கள் லக்னோவில் கல்லூரியின் அறிவிப்பு



உத்தர பிரதேச சட்டசபை தேர்தலில் பெற்றோர்கள் ஓட்டளித்தால், அவர்களின் பிள்ளைகளுக்கு 10 மதிப்பெண்கள் அளிக்கப்படும் என லக்னோவில் உள்ள கல்லூரி ஒன்று அறிவித்துள்ளது.

உ.பி.,யில் சட்டசபை பொதுத்தேர்தல் நடக்கிறது. நேற்று நான்காம் கட்ட ஓட்டுப்பதிவு நடக்கிறது. இந்த நிலையில் ஓட்டுப்பதிவை ஊக்குவிக்கும் வகையில், லக்னோவில் உள்ள கிறிஸ்ட் சர்ச் கல்லூரி ஒரு ஆச்சரியமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதாவது, இந்த தேர்தலில் பெற்றோர்கள் ஓட்டளித்தால் அவர்களின் பிள்ளைகளுக்கு 10 மதிப்பெண் வழங்கப்படும் என அக்கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கல்லூரி முதல்வர் ராகேஷ் குமார் கூறுகையில்,

'ஓட்டளிப்பது ஒரு இன்றியமையாத கடமை என்பதை அனைவருக்கும் உணர்த்தவும், 100 சதவீத ஓட்டளிப்பை உறுதி செய்யவும் இது போன்ற முடிவை எடுத்துள்ளோம். இத்திட்டத்தின் மூலம் மதிப்பெண்கள் குறைவாக பெற்ற மாணவர்கள் தேர்ச்சி பெற உதவும்' எனக் கூறினார். ஓட்டளிப்பதை ஊக்குவிக்க கல்லூரி நிர்வாகம் எடுத்துள்ள இந்த முடிவிற்கு மாணவர்கள், பெற்றோர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# நேரடி பொதுத் தேர்வுக்கு எதிரான மனு தள்ளுபடி

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கான ஆஃப்லைன் தேர்வுகளை இரத்து செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்புக்கான இரண்டு பருவத் தேர்வுகளை ஏப்ரல் 26ம் தேதி முதல் நடத்த சிபிஎஸ்இ முடிவு செய்துள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒடிசா என்ஒய்சிஎஸ் மாணவர் சங்கத்துடன் இணைந்து குழந்தை உரிமை ஆர்வலரும் வழக்கறிஞருமான அனுபா ஸ்ரீவஸ்தவா சஹாய் உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

அந்த மனுவில் அனைத்து ஸ்டேட் போர்ட், சிபிஎஸ்இ, ஐசிஎஸ்இ மற்றும் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஓபன் ஸ்கூலிங் (என்ஐஓஎஸ்) மூலம் நடத்தப்படும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கான ஆஃப்லைன் தேர்வுகளை இரத்து செய்யும்படி கோரிக்கை விடப்பட்டது.

இந்த மனுவை உச்ச நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.கான்வில்கர் தலைமையிலான அமர்வுக்கு முன் விசாரணைக்கு வந்தது. சம்பந்தப்பட்ட மனுவை தள்ளுபடி செய்த நீதிபதி மேல்முறையீட்டையும் நிராகரித்தது.

பின், இதுபோன்ற மனுக்கள் தவறான நம்பிக்கையை உருவாக்குவது மட்டுமல்லாமல், தயாராகும் மாணவர்களுக்கு குழப்பத்தை உருவாக்குகிறது என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.


## சிறு விளம்பரம்

**வேலைவாய்ப்பு**

323

**வெற்றிடங்கள் தொழிலாளர்கள்**

நிறுவனம் ஒன்றிற்கு பற்றரி வெட்டுவதற்கு ஊழியர்கள் தேவை. 1 தொன் இற்கு 1100/ பதுளை, ஹட்டன் விரும்பத்தக்கது. 0762360828. 013926

**காணி/தோட்டம்**


616

**வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

யூனியன் பிளேஸ் 0320 - 3 படுக்கையறையுடன் முழுமையான தளபாடத்துடனான அப்பார்ட்மென்ட் விற்பனைக்கு. தொடர்பு ரஞ்சித் பெல்பொல 0112821504, அல்லது 0773251404 முதன்மையானவர்கள் மட்டும். 013925

SRI LANKA TOURISM DEVELOPMENT AUTHORITY

/sltda.gov.lk/ www.sltda.gov.lk




இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) என்பது சுற்றுலா மற்றும் அது சார்ந்த துறைகளின் திட்டமிடல், அபிவிருத்தி, ஒழுங்குவிதி மற்றும் கொள்கை அமுலாக்கலுடன் தொடர்புடைய பணிகளை மேற்கொள்ளும் அரச நிர்வாகமாகும். சுற்றுலாத் துறை எதிர்காலத்திற்கான தேசிய பொருளாதாரத்திற்கு தீர்க்கமான பங்களிப்புச் செய்யும் துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தத் துறை நாட்டுக்கு அதிக நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் உயர் நிலை முதலீட்டு திட்டங்களை கவர்வதாகவும் உள்ளது.

**கனிஷ்ட முகாமையாளர்/ IT (மென்பொருள்)**

நிறுவனத்தின் பயன்பாட்டு மென்பொருளை செயற்படுத்தல் மற்றும் உதவுதலுக்கு பொறுப்பாவார்.

**பணி**

- நிறுவனத்திற்குள் பல்வேறு பயன்பாட்டு மென்பொருட்களை செயற்படுத்தல்.
- பென்பொருள் விற்பனையாளர்களுடன் பயன்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பை ஆதரித்தல்.
- தேவை ஏற்படும்போது பயனர் பயிற்சி மற்றும் இறுதிப் பயனர் ஆதரவை (end user support) மேற்கொள்ளல்.
- RFPs, SRSs, CRs தயார்படுத்தல்.

**நபர்**

அபேட்சர்களிடம் இருக்க வேண்டியவை:

- பல்கலைக்கழக ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்டதான தகவல் தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞானத்தில் இளமாணிப் பட்டம் அல்லது
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) அளவு 07க்கு இணையான அல்லது அதற்கு மேற்பட்ட தேர்ச்சி சான்றிதழ் அல்லது
- தேசிய தொழில் தகைமை (NVQ) அளவு 06க்கு இணையான அல்லது அதற்கு மேற்பட்ட தேர்ச்சி சான்றிதழ் மற்றும் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது 05 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம். அல்லது
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) அளவு 05க்கு இணையான அல்லது அதற்கு மேற்பட்ட தேர்ச்சி சான்றிதழ் மற்றும் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது 10 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**மேலதிக தகைமைகள்**

- பயன்பாட்டு மென்பொருள் செயற்படுத்தல்கள் மற்றும் உதவுதலில் சிறந்த அறிவை பெற்றிருத்தல்.
- End-to-end பயன்பாட்டு மென்பொருள் செயற்படுத்தல்கள் மற்றும் உதவுதலில் அனுபவம் விரும்பத்தக்கது.
- மென்பொருள் உருவாக்கத்தில் (java, spring boot, kubernetes, vue js) அனுபவம் இருந்தால் அனுகூலமாகும்.
- சிறந்த தொடர்பாடல் திறன்கள் (வாய்மொழி மற்றும் எழுத்து), சிறந்த பகுப்பாய்வுத் திறன்கள், பிரச்சினைகளை தீர்க்கும் திறன்கள் மற்றும் வட்டத்திற்கு வெளியில் சிந்திக்கும் பண்புடன் அணியாக இயங்கும் ஒருவராக இருத்தல் வேண்டும்.

**வயது:** 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (உள்வாரி அபேட்சகர்கள் மற்றும் அரச சேவை/ சட்டரீதியான சபைகள்/ அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது).

**சம்பள அளவு:** ரூபா 43,355/- 10x755 – 18x1135 ரூபா 71,335/- (JM 1-1)

**ஆரம்பப் படி** - ரூபா 43,355/-+ வாழ்க்கைச் செலவு

**நன்மைகள்**

- ஊழியர் மற்றும் குடும்பத்தினரை உள்ளடக்கிய விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவ காப்புறுதித் திட்டம்
- கடன் வசதிகள்
- வாழ்தொழில் மேம்பாட்டுக்கான பயிற்சி (உள்நாடு மற்றும் வெளிநாடு)
- போக்குவரத்து கொடுப்பனவு
- தொலைபேசி கொடுப்பனவு

இந்த பணிக்கு பொருத்தமானவர் என்று நீங்கள் கருதினால், கல்விசார்/ தொழில்முறை தகைமைக்கு தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதி, தொழில் அனுபவம் மற்றும் இரு உறவினர் அல்லாத நடுவர்களின் பெயர்களுடன் உங்களது சுயவிபரக் கோவையை 2022 மார்ச் 10 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழ் கையொப்பம் இட்டு பதிவுத் தபாலில் அனுப்பவும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும். அரச திணைக்களங்கள்/ அரச கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபைகளில் பணியாற்றும் அபேட்சகர்கள் திணைக்களத்தின் பொறுப்பான தலைவர்கள் மூலம் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

தலைவர்
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
80, காலி வீதி
கொழும்பு 03.



கொழும்பு எப்.சி கழகத்தின் கொழும்பு எப்.சி தொழில்சார் பெண்கள் கால்பந்தாட்ட அணி வீராங்கனைகள் தெரிவின் இரண்டாம் நிலை தெரிவு, குதிரைப்பந்தய மைதானத்தில் இடம்பெற்ற போது தெரிவான வீராங்கனைகளை படத்தில் காணலாம்.படத்தின் பின் வரிசையில் இடப்பக்கமிருந்து வலப்பக்கமாக, கௌரி சுரேந்திரன், சானு லக்மாலி, ஹஷனி ஹிமானிஷா, ஷானு பாஸ்கரன், சிந்தனி விஸ்மிக்கா, கீதாஞ்சலி மதுஷானி, லக்ஷனி சந்தோய, சுமோதி கவிஷ்கா, நிரோஷிகா ஜோன்சன், பினாயுரி ஹெட்டிகே, கீழ்வரிசை இடப்பக்கமிருந்து வலப்பக்கமாக ருவன்யா அபேவர்தன, சந்தினி சத்சார, குசலா பண்டார, அமாவி அனுத்தார, ருவானி தக்ஷிலா, அஷ்ஹா ஷபான், திவாமி பமுனி ஆராச்சி. *(படம்: வட கொழும்பு தினகரன் நிருபர்)*



அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் பங்குகொள்ளும் சம்மாந்துறை பிரதேச சபை வீர, வீராங்கனைகளுக்கு பாதணி வழங்கும் நிகழ்வு பிரதேச சபை தவிசாளர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (22) இடம்பெற்றது. சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் போட்டிகளில் பங்குபற்றும் உத்தியோகத்தர்களுக்கு பாதணிகளை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.எம்.றியாஸ், கே.குலமணி, சம்மாந்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் எஸ்.கருணாகரன், நிதி உதவியாளர் வை.வீ.கதீசா உம்மா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். *(படம்: சவளக்கடை குறூப் நிருபர்)*



8 x 4 நீளம் கொண்ட 35 அச்சு சீமேந்து கற்களை 3 அங்குலம் கொண்ட ஆணிகள் பதியப்பட்ட பலகையின் மீது படுத்த நிலையில் தனது வயிற்றின் மீது அக்கற்களை வைத்து சம்மட்டியால் 54 செக்கன் 9.8 நொடிகளில் உடைத்து நேற்றுமுன்தினம் (22) கொழும்பு துறைமுக வளவில் உலக கின்னஸ் சாதனையை நிலைநாட்டிய ஜனக காஞ்சனாவையும் காணலாம். *(படம்: வட கொழும்பு தினகரன் நிருபர்)*

# சிறுநீர் தொற்று காரணமாக பீலே மருத்துவமனையில் அனுமதி



பிரேசிலிய கால்பந்து ஜாம்பவான் பீலே, சாவ் பாலோ மருத்துவமனையில் சிறுநீர் நோய்த்தொற்றுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவர் ஏற்கனவே பெருங்குடல் கட்டிக்கான கீமோதெரபியைப் பெற்றார் என்று திங்களன்று தெரிவித்துள்ளது.

"ஓ ரெய்" (தி கிங்) என்று அழைக்கப்படும் 81 வயதான முன்னாள் வீரர், செப்டம்பர் மாதம் கண்டறியப்பட்ட பெருங்குடல் கட்டிக்கான சிகிச்சையைத் தொடர பெப்ரவரி 13 அன்று சாவ் பாலோவில் உள்ள அல்பர்ட் ஐன்ஸ்டீன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அன்று முதல் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அனுமதிக்கப்பட்ட எட்டு நாட்களுக்குப் பிறகு, வழக்கமான பரிசோதனையின் போது சிறுநீர் நோய்த்தொற்றைக் கண்டறிந்ததாக மருத்துவமனை கூறியது, இது பீலேவின் தங்கி சிகிச்சை பெறும் நாள் அதிகரிக்கும்.

"மருத்துவ நிலைமைகள் நிலையானவை, அடுத்த சில நாட்களில் மருத்துவமனை வெளியேற்றம் நிகழ வேண்டும்" என்று மருத்துவமனை திங்களன்று ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பீலே செப்டம்பர் 4 அன்று கட்டிக்கான அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார், கீமோதெரபியைத் தொடர டிஸ்சார்ஜ் செய்யப்படுவதற்கு முன்பு ஒரு மாதம் மருத்துவமனையில் இருந்தார்.

வயதான நட்சத்திரத்தின் உடல்நலப் பிரச்சினைகளில் இது சமீபத்தியது, பொதுத் தோற்றங்கள் மிகவும் அரிதாகவே வளர்ந்துள்ளன.

எல்லா காலத்திலும் சிறந்த கால்பந்து வீரராகக் கருதப்படும் எட்சன் அரான்டெஸ் டோ நாசிமெண்டோ பீலேவின் உண்மையான பெயர் வரலாற்றில் மூன்று உலகக் கிண்ணங்களை வென்ற ஒரே வீரர் (1958, 1962 மற்றும் 1970). 1958 இல் பிரேசில் முதல் முறையாக உலகக் கிண்ணத்தை வென்றதால், புரவலர்களான ஸ்வீடனுக்கு எதிரான இறுதிப் போட்டியில் இரண்டு கோல்கள் உட்பட திகைப்பூட்டும் கோல்களை அடித்ததன் மூலம் அவர் 17 வயதில் உலக அரங்கில் பிரகாசித்தார்.

அவர் 1977 இல் ஓய்வு பெறுவதற்கு முன்பு 1,000 கோல்களுக்கு மேல் அடித்த, விளையாட்டில் மிக உயர்ந்த வாழ்க்கைப் பணிகளில் ஒன்றாக இருந்தார்.

"நான் மாதந் தோறும் செய்து வருவதால், எனது சிகிச்சையைத் தொடர மருத்துவமனைக்குச் செல்கிறேன்" என்று பீலே தனது சமூக ஊடக தளங்களில் பெப்ரவரி 13 ம் திகதி கூறினார்.

# பானுகவின் கிரிக்கெட்டிற்கு இது முடிவல்ல -அமைச்சர் நாமல்



இலங்கையின் விளையாட்டுத் துறை அமைச்சரான நாமல் ராஜபக்ஷ, அதிரடி துடுப்பாட்டவீரரான பானுக ராஜபக்ஷவின் கிரிக்கெட் வாழ்க்கை இத்துடன் நிறைவடையவில்லை எனக் குறிப்பிட்டிருப்பதோடு, அவர் எதிர்காலத்தில் மீண்டும் அணியில் இணைவதற்கான எதிர்பார்ப்புக்களை கொண்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கின்றார்.

பாராளமன்றத்தில் எதிர்க்கட்சியினைச் சேர்ந்த சுஜித் சஞ்சய பெரேரா பானுக்க ராஜபக்ஷ இந்திய தொடரில் உள்வாங்கப்படாமை தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்ததனை அடுத்து இந்த கேள்விக்கு பதில் வழங்கிய நாமல் ராஜபக்ஷ இந்திய 20க்கு20 தொடருக்கான இலங்கை அணி, தேசிய தேர்வாளர்கள் குழு மற்றும் பயிற்சியாளர்கள் ஆகியோர்களின் பரிந்துரையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருந்ததாக குறிப்பிட்டிருக்கின்றார்.

அத்தோடு தேர்வாளர்கள் குழாம் அதிரடி துடுப்பாட்டவீரரான பானுக்க ராஜபக்ஷவினை இலங்கை குழாத்தினுள் இணைக்காமல் போனமைக்கான காரணத்தினையும், விளையாட்டுத்துறை அமைச்சருக்கு தெரிவித்திருந்ததாக, விளையாட்டுத்துறை அமைச்சரான நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டிருக்கின்றார். அத்துடன் விளையாட்டுத்துறை அமைச்சர், பானுக்க ராஜபக்ஷ எதிர்காலத்தில் இலங்கை அணியுடன் மீண்டும் இணைவதிலும், நம்பிக்கை கொண்டுள்ளதாக குறிப்பிட்டிருக்கின்றார்.

"தேர்வாளர்கள் குழு பானுக்கவினை அணியில் இருந்து நீக்கியமைக்கான காரணத்தினை அவரிடம் தெரிவித்திருந்ததோடு, அதனை என்னிடமும் கூறியிருக்கின்றது. அவரிடம் இலங்கை அணிக்காக எதிர்காலத்தில் ஆடுவதற்கான திறமை, ஆற்றல்கள் காணப்படுகின்றன. அவர் எதிர்காலத்தில் மீண்டும் அணியில் இணைந்து திறமையினை வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கின்றேன்." என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பேசும் போது கூறியிருக்கின்றார்.

உடற்பருமன் தகைமை பரிசோதனை எனக் கூறப்படுகின்ற Skin Folds பரிசோதனையில் சிறந்த பெறுபேறுகளை காட்டத்தவறியதனை அடுத்து, பானுக்க ராஜபக்ஷ இந்திய அணியுடன் இலங்கை ஆடவுள்ள 20க்கு20 தொடரில் பங்கெடுக்கும் வாய்ப்பினை இழந்திருப்பதோடு, பானுக்க ராஜபக்ஷவினை இலங்கை அணியில் இணைக்க கோரி நேற்றுமுன்தினம் (22) கிரிக்கெட் இரசிகர்கள் இலங்கை கிரிக்கெட் தலைமைக் காரியாலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டங்களையும் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையுடனான ரி 20 தொடர் :

# சூர்யகுமார், தீபக் சாஹர் காயத்தால் விலகல்



இலங்கையுடனான டி20 தொடரிலிருந்து சூர்யகுமார், தீபக் சாஹர் காயத்தால் விலகியுள்ளனர்.

மேற்கிந்திய தீவுக்கு எதிரான ரி 20 தொடரில் இந்தியாவின் சூர்யகுமார் யாதவ் தொடர் நாயகன் விருதை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்திய தீவு அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் போட்டி மற்றும் 3 ரி 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. இதில் இந்தியா ஒருநாள் தொடரை 3-0 எனவும், ரி 20 தொடரை 3-0 எனவும் முழுமையாக கைப்பற்றியது.

இதற்கிடையே, இலங்கை அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 ரி20 போட்டி, 2 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாட உள்ளது.

இந்நிலையில், இலங்கைக்கு எதிரான ரி20 தொடரில் இருந்து காயம் காரணமாக சூர்யகுமார் யாதவ் விலகியுள்ளார் என பிசிசிஐ தெரிவித்துள்ளது.

ஏற்கனவே, வேகப்பந்து வீச்சாளர் தீபக் சாஹர் காயம் காரணமாக இலங்கைக்கு எதிரான தொடரில் இருந்து விலகியுள்ளார் என்பது நினைவிருக்கலாம்.

ஆப்கானிஸ்தானுடனான 20க்கு20 தொடர்:

# ஷகிப் அல்–ஹசனுக்கு மீண்டும் அழைப்பு



பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பிறகு, 14 பேர் கொண்ட அணியில் முனிம் ஷஹ்ரியார் மற்றும் யாசிர் அலி ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

அடுத்த மாதம் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட ரி 20 தொடருக்கான பங்களாதேஷ் அணியில் சகலதுறை வீரர் ஷகிப் அல்-ஹசன் திரும்ப அழைக்கப்பட்டுள்ளார். காயம் காரணமாக கடந்த ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான ரி20 தொடரை ஷகிப் தவறவிட்டார். பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் சிறப் பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பிறகு, 14 பேர் கொண்ட அணியில் முனிம் ஷஹ்ரியார் மற்றும் யாசிர் அலி ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

ஃபார்ச்சூன் பாரிஷாலுக்கு ஆறு போட்டிகளில் ஷாரியார் 178 ஓட்டங்கள் எடுத்தார், ஸ்டிரைக் ரேட் 152. முன்னதாக பங்களாதேஷின் ஒருநாள் அணியில் இடம்பிடித்த யாசிர் அலி, குல்னா டைகர்ஸ் அணிக்காக 139.49 ஸ்ட்ரைக் ரேட்டில் 11 போட்டிகளில் 219 ஓட்டங்கள் எடுத்தார்.

பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடிய 16 பேர் கொண்ட அணியில் இருந்து நூருல் ஹசன் சோஹன், அக்பர் அலி, ஷமிம் பட்வாரி, அமினுல் இஸ்லாம் பிப்லாப், நஜ்முல் ஹொசைன் சாண்டோ மற்றும் சைஃப் ஹசன் ஆகியோர் நீக்கப்பட்டனர்.

20க்கு 20 தொடர் மார்ச் 3 மற்றும் 5 ஆகிய திகதிகளில் நடைபெறுகிறது.

20க்கு20 உலகக் கிண்ணம்

# அயர்லாந்து, ஐக்கிய அரபு இராச்சிய அணிகள் தகுதி



எதிர்வரும் ஒக்டோபர் 16 ஆம் திகதி தொடங்கும் டவுன் அண்டர் பிரதான போட்டியில் ரி 20 உலகக் கிண்ணம் 2021 'சூப்பர் 12' கட்டத்தை எட்டிய 12 அணிகளுடன் அயர்லாந்தும் ஐக்கிய அரபு இராச்சியமும் இணைந்துள்ளன.

ஐக்கிய அரபு இராச்சியம் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கான வாய்ப்பை பெற்றதால், செவ்வாயன்று நடந்த தகுதிச் சுற்றில் போட்டி நடத்திய ஓமானை 56 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்த ஆண்டு ரி20 உலகக் கிண்ணத்தில் தகுதி பெற்ற அதேவேளை அயர்லாந்தும் தனது இட த்தைப் பதிவு செய்தது.

2007 ஆம் ஆண்டு தொடக்கப் பதிப்பைத் தவறவிட்ட அயர்லாந்து தொடர்ந்து ஏழாவது முறையாக தகுதி பெற்றமை விசேட அம்சமாகும். அண்டி பால்பிர்னியின் தரப்பு குளோபல் குவாலிஃபையர் ஏ நிகழ்வில் ஒரு அதிர்ச்சியான தொடக்கத்தை ஏற்படுத்தியது, கடந்த வாரம் ஐக்கிய அரபு இராச்சியத்திடம் தனது முதல் ஆட்டத்தில் தோல்வியடைந்தது.ஆனால் அரையிறுதியை அடைய தொடர்ச்சியான வெற்றிகளுடன் மீண்டது. இரண்டு இறுதிப் போட்டியாளர்கள் தகுதி பெற, செவ்வாய்க்கிழமை கடைசி நான்கு ஆட்டம் வெற்றிபெறும் விவகாரமாக இருந்தது, மேலும் ஓமான் நாயணச்சுழற்சியில் வென்று முதலில் களத்தடுப்பை தேர்வுசெய்த பிறகு, அயர்லாந்து 7 விக்கெட்டுக்கு 165 ஓட்டங்கள் எடுத்த சவாலான இலக்கை பதிவுசெய்தது.

தொடக்க ஆட்டக்காரர்களான பால்பிர்னி மற்றும் பால் ஸ்டிர்லிங் ஆகியோர் முன்னதாக மூன்றாவது விக்கெட்டுக்காக ஐம்பது ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றுக் கொடுத்தனர், அயர்லாந்து 2 விக்கெட்டுக்கு 19 ஓட்டங்களை எடுக்க ஆரம்பத்திலேயே வீழ்ந்தது.

ஆனால் கரேத் டெலானி 32 பந்துகளில் 47 ஓட்டங்கள் எடுத்தார், அதற்கு முன் அண்டி மெக்பிரைன் 21 பந்துகளில் 36 ஓட்டங்கள் எடுத்தார்.

கடந்த இரண்டு ரி 20 உலகக் கிண்ணங்களுக்குத் தகுதி பெற்ற ஓமான், அயர்லாந்து சுழற்பந்து வீச்சாளர்கள் சிமி சிங் (320) மற்றும் மெக்பிரைன் (224) ஆகியோர் இடையே ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தியதால், 105 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர் ஓமான் வீரர்கள்.மற்றொரு அரையிறுதியில் இது ஒருதலைப்பட்சமான ஆட்டமாக இருந்தது, இதற்கு முன்பு தோற்கடிக்கப்படாத நேபாளத்தை 68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு இராச்சிய அணி தோற்கடித்து இரண்டாவது முறையாக முக்கிய போட்டிக்கு தகுதி பெற்றது.

அயர்லாந்துக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 97 ஓட்னட்களும், பஹ்ரைனுக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 84 ஓட்டங்களும் எடுத்த விக்கெட் காப்பாளர் விருத்தியா அரவிந்த், 46 ஓட்டங்களும், முஹம்மது வசீம் 70 ஓட்டங்களும் எடுத்ததால், ஐக்கிய அரபு இராச்சியம் 7 விக்கெட் இழப்புக்கு 175 ஓட்டங்கள் எடுத்தது.

பதிலுக்கு 3 விக்கெட் இழப்புக்கு 14 ஓட்டங்களுக்கு சரிந்த நேபாளம், 18.4 ஓவரில் 107 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து, மீளவே இல்லை.

ஒக்டோபர் 16 ஆம் திகதி தொடங்கும் டவுன் அண்டர் பிரதான போட்டியில் ரி 20 உலகக் கிண்ண 2021 'சூப்பர் 12' கட்டத்தை எட்டிய 12 அணிகளுடன் அயர்லாந்தும் ஐக்கிய அரபு எமிரேட்ஸும் இணையும்.

ஜூலை மாதம் சிம்பாப்வேயில் நடைபெறும் குளோபல் குவாலிஃபையர் பி போட்டியில் இறுதி இரண்டு இடங்கள் தீர்மானிக்கப்படும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 24ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# பதுளை தொழிலாளர் அலுவலக கட்டடத்தொகுதி திறப்பு





**லுணுகல நிருபர்**

பதுளை தொழிலாளர் அலுவலகக் கட்டடத்தொகுதியின் திறப்பு விழா தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம் முஸம்மில் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

26 கோடி ரூபாய்கள் செலவில் இரண்டு மாடிக் கட்டடத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தொகுதியில் பதுளை மாவட்ட தோட்டத் தொழிலாளர்கள் உட்பட 30,000ற்கு மேற்பட்ட தொழில் செய்யும் மக்களின் ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர்களின் அறக்கட்டளை நிதி விவகாரங்கள் நிர்வகிப்படவுள்ளன. அதேவேளை ஊவா மாகாணத்தின் பதுளை, மொனராகலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்ட தொழிலாளர் பொறியியல் சேவைகள் இக்கட்டடத்தொகுதியிலிருந்து செயற்படுத்தப்படுகின்றமை விசேட அம்சமாகும். இதற்கமைய சுமார் 65,000 ஊவா தொழில் செய்யும் மக்களுக்கு பாரிய சேவையை வழங்குவதற்கு இந்த அலுவலகம் தயாராகவுள்ளது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, சுதர்சன தெனிபிட்டிய, அரவிந்த குமார், பதுளை மேயர் பிரியந்த அமரசிறி மற்றும் தொழிலாளர் அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**சரன டிரேடிங் (பிவீடி) எல்டிட**
பதிவிலக்கம் : PV 00252297
கூட்டிணைப்பு திகதி:
**27.01.2022**
பதிவு முகவரி :
96/14, 2ஆம் லேன், சேனாநாயக்க மாவத்த, நாவல, ராஜகிரிய.

**பணிப்பாளர்**

# சிறுவன் துஷ்பிரயோகம் – பிக்குவின் விளக்கமறியல் நீடிப்பு

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

வட்டவளை டெம்பல்ஸ்டோவ் தோட்டத்திலுள்ள 13 வயது சிறுவனை துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்பட்டு கைது செய்யப்பட்ட பிக்குவை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தின் நீதிபதி அசங்கா ஹெட்டிவத்த நேற்று (23.02.2022) உத்தரவிட்டார்.

ஹயிற்றி தோட்டத்திலுள்ள விகாரையின் பிக்குவே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். விகாரையில் இச்சம்பவம் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்றதாகவும், 21ஆம் திகதி சிறுவனின் தந்தை வட்டவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததாகவும் வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, 21ஆம் திகதி மாலை வட்டவளை பொலிஸாரால் பிக்கு கைது செய்யப்பட்டுள்ளார். சிறுவனுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும், பிக்குவிற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் பொதுமக்கள் போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்நிலையில் 23.02.2022 நேற்றைய தினம் பொலிஸாரால் பிக்கு ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி பிக்குவை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# 40 அடி உயரத்திலிருந்து விழுந்து குடும்பஸ்தர் மரணம்

**தம்புள்ள தினகரன் நிருபர்.**

கலேவெல பல்லேவெல பிரதேசத்தில் மரத்திலேறி கிளைகளை வெட்டிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் 40 அடி உயரத்திலிருந்து கால் தவறி விழுந்தமையால் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (22) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். .

மரத்திலிருந்து வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கலேவெல கொரக்காவ பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையான முகம்மது றஸ்ஸாக் முகம்மது ரிஸ்மி (37 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தமது தோட்டத்திற்கு சமீபமாக உள்ள நண்பரொருவரின் தோட்டத்திலிருந்த மரமொன்றின் கிளைகளை வெட்டிக் கொண்டிருந்த வேளையிலேயே இவ் அனர்த்தம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வவுனியாவில் பயங்கரவாத தடை சட்டத்திற்கு எதிராக கையெழுத்து போராட்டம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக கையெழுத்து பெறும் செயற்பாடு வவுனியாவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக தமிழரசுக்கட்சியின் வவுனியா கிளை அறிவித்துள்ளது.

நேற்று (23) தமிழரசுக்கட்சியின் வவுனியா கிளை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க கோரி கையெழுத்து பெறும் செயற்பாடு இலங்கையில் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை பழைய பஸ் நிலையம், இலுப்பையடி, வைரவர்புளியங்குளம் சந்தி, குருமன்காடு சந்தி ஆகியவற்றிலும் செட்டிகுளம் பஸ் நிலையத்திலும்

நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்கு முன்பாகவும் காலை 8 மணியிலிருந்து கையொப்பம் பெறும் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு சட்டமே (தற்காலிக) எமது சட்டப்புத்தகங்களில் காணப்படும் மிகக் கொடூரமான சட்டமாக உள்ளது.

1979ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாக நிறைவேற்றப்பட்ட இச்சட்டம், அதன் தலைப்பில் தெரிவிப்பது போல, (தற்காலிக) 6 மாத காலத்திற்கு மட்டும் செல்லுபடியாக வேண்டியது. எனினும் 42 வருடகாலங்கள் நீடித்து, அநீதியை விளைவித்தும் அநேகருக்கு துன்பத்தினையும், கஷ்டங்களையுமே இது வழங்கியுள்ளது.

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## ரூ.45,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

**11.00% 2025 "A" தொடர்களின் கீழ் ரூ.15,000 மில்லியனையும் 11.20% 2033 "A" தொடர்களின் கீழ் ரூ.30,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2022 பெப்ரவரி 25ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.**

| தொடர்கள் | 11.00% 2025 'A' | 11.20% 2033 'A' |
|---|---|---|
| ISIN* | LKB 01025H016 | LKB01533A154 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ.15,000 மில்லியன் | ரூ.30,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 11.00% ஆண்டொன்றிற்கு | 11.20% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2015 ஆகஸ்ட் 01 | 2018 சனவரி 15 |
| **முதிர்வுத்திகதி** | **2025 ஆகஸ்ட் 01** | **2033 சனவரி 15** |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 பெப்ரவரி & 01 ஆகஸ்ட் | 15 சனவரி & 15 யூலை |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ.100.00 இற்கு ரூ.0.8812 | ரூ.100.00 இற்கு ரூ.1.4232 |
| ஏலவிற்பனைத்திகதி | 2022 பெப்ரவரி 25, வெள்ளிக்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித்திகதியும் நேரமும் | 2022 பெப்ரவரி 25, வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணி | |
| **தீர்ப்பனவுத் திகதி** | **2022 மார்ச் 02** | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/=) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/- பெருக்கங்களிலிருந்து) | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் நறுக்கு கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர் /ISIN தொடர்பிலும் சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்ஞாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுகொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி முறிகளை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்வெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் லிமிட்டட் | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம்.ஆசிம்**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
இலங்கை மத்திய வங்கி,
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

**தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு**

**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)**

## பெறுகை அறிவித்தல்

**NBRO தலைமையகத்திற்கு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான விலைமனுக்கோரல் காலத்தை நீடித்தல்**

ஒரு வருட காலத்திற்கு கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1, என்ற இடத்தில் அமைந்துள்ள NBRO தலைமையகத்திற்கு வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன.

மேலேயுள்ள கேள்வியின் இந்த விலைமனு மூடும் திகதியானது 2022 மார்ச் 04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்.**
**தொலைபேசி: 011-2588946, நீடிப்பு. 652.**

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை தேசிய வைத்தியசாலை**

**கொழும்பு - 10**

**எழுதுகருவிகளை வழங்கல்**

இலங்கை தேசிய வைத்தியசாலைக்குத் தேவையான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள எழுதுகருவிகளை வழங்குவதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது

**01. ஏ03/ஏ04 மற்றும் ஏனைய வகை மற்றும் அளவுகளில் நிழற்படப்பிரதியிடல் கடதாசிப் பெக்கற்றுகள்**

மேற்படி வழங்கல்களிற்காக தகைமையுள்ள பதிவு செய்யப்பெற்றுள்ள நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம் என்பதுடன், மீளளிக்கப்படாத ரூபா 2500.00 இற்கான வைப்பொன்றை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பரிடம் செலுத்தி, 2022.03.15 வரை வார வேலை நாட்களில், இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் நிபந்தனைகளுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில் அவற்றிற்கான மாதிரிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும். பின்னர் சமர்ப்பிக்கப்படும் மாதிரிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2022.03.16 அன்று மு.ப.10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுத் திறக்கப்படும்.

**டாக்டர்.டப்ளியு.கே.விக்ரமசிங்ஹ,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**
**கொழும்பு - 10.**

## இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/06/PT/6238(EL) | 25 Nos. of Multi Speed Relays for the Cummins Engines of Transfer Cranes at JCT | 38,000.00 | 1,000.00 | 24-03-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6261(MP) | 01 No. Single Lift Spreader for ZPMC STS Cranes at JCT I & II | 400,000.00 | 3,500.00 | 24-03-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6267(EL) | Spare AC Generator for ECT RTG Cranes | 80,000.00 | 1,000.00 | 24-03-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6274(EL) | Spare Cables for Stinis Spreaders | 30,000.00 | 1,000.00 | 24-03-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6273(EL) | Pull Code Limit Switches: Type Elaw – 21NSZ | 15,000.00 | 1,000.00 | 29-03-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6275(EL) | T Link Communication Cards for Transfer Cranes | 45,000.00 | 1,000.00 | 29-03-2022 மு.ப. 10.00 மணி |
